Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24

ரூபா 30.00

டிசம்பர் 13 - 19, 2012

வாரமலர்

# தினமுரசு

THINAMURASU

SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY

முரசு 992



## பதின்மூன்றாவது திருத்தம் பாதுகாக்கப்பட வேண்டும்



## தொடர்கிறது நீதிக்கும் நிறைவேற்று அதிகாரத்துக்குமான இழுபறி

## யார இந்த ஜெசிக்கா?

## சர்வ விக்னோப ஸாந்தயே!

விநாயகப் பெருமான் எழுந்தருளியிருக்கும் திருத்தலங்களுக்கு அவரை வழிபடச் செல்லும் அடியவர்கள், தம் கரங்களை இடம் மாற்றி தலையில் மூன்று தரம் குட்டிக்கொண்டு, மூன்று தரம் முழந்தாள்களை மடக்கி இருந்தெழுதலாகிய 'தோப்புக்கரணம்' எனும் நிகழ்வை நடத்தி முடிப்பார்கள்.

இச்செயற்பாட்டுக்குப் புராணங்களில் விளக்கம் சொல்லப்பட்டிருக்கின்றபோதிலும், கரங்களை இடம்மாற்றி தலையிலே மூன்று தரம் குட்டிக்கொள்ளும் போது வாயானது உச்சரிக்க வேண்டிய ஒரு சுலோகம் இருக்கின்றது. இச்சுலோகமானது குறிப்பிட்ட ஆசார சீலர்கள் மட்டும்தான் உச்சரிக்க வேண்டிய கட்டாயம் என்றில்லை. இதைச் சாதாரண அடியவனும் வார்த்தைகள் பிசிறாது பிழைவிடாது உச்சரிப்பின் விநாயகனைக் கனம் பண்ணியவனாகின்றான்.

"சுக்கிலாம் பரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்புஜம்:
பிரசன்ன வதனம் த்யாயேத்
சர்வ விக்னோப ஸாந்தயே!" என்பதே அச்சுலோகமாகும்.

-அனந்த நாராயணன், கைவேலி.

ஆன்மீகம்

## கூர்ந்து நோக்கும் திறன்

மனிதனானவன் தன் சக மனிதனால் நிந்திக்கப்படும் பொழுது மனவேதனை தாங்காத நிலையில், விரக்தியின் உச்ச நிலைக்குச் சென்று, தான் ஆராதிக்கும் விசுவாசிக்கும் ஆண்டவரை சபித்துக்கொள்கின்றான்.

கர்த்தர் உட்பட எல்லோரும் தன்னைக் கைவிட்டதான உணர்வில் கரைந்து போகிறான். தான் வணங்கும் தெய்வம் கூட பக்கச் சார்பாக நடப்பதாகவே அவனுக்கு அக்கணத்தில் புலப்படும். மனக்கொந்தளிப்பின் நிமித்தம் அவன் அழுகிறான்; அரற்றுகிறான்.

ஆனால், சர்வ வல்லமை பொருந்திய கர்த்தரானவர், "தாம் வீற்றிருக்கும் இடத்திலிருந்து உலகெங்கும் வாழ்வோரைக் கூர்ந்து நோக்குகின்றார். (சங்கீதம்–33:14)" என்ற வெளிப்பாட்டை அறியாதர்வகளாக நிதம் அழுகையையே வாழ்வாக்கிய நிலையில் அல்லற்படுகின்றார்கள். அவரது பார்வை கூர்ந்து நோக்குகின்றது... என்று சொல்லப்படுகின்ற போது அவரது பார்வையிலிருந்து எதுவும் தப்ப முடியாதென்பது புலனாகிறது.

சாமுவேல், புதுக்குடியிருப்பு.

## இவ்வுலகில் வாழ மறுவுலகில் சொர்க்கமே!

இஸ்லாமிய வாழ்வு முறையைப் புறக்கணித்த பயனை நாம் இன்று அடைந்து வேதனைப்படுகின்றோம். இறை மறை முழக்கத்தை இங்கு அவதானியுங்கள்.

நிச்சயமாக நாம் மனிதனை அழகிய அமைப்பில் படைத்திருக்கின்றோம். பின்னர் அவனுடைய இழி செயல் காரணமாக அவனைத் தாழ்ந்தோரிலும் மிகத் தாழ்ந்தோனாக நாம் மாற்றி விடுகின்றோம். அல்குர் ஆன் 95: 4–5

ஆம். சுயநலவாழ்வும், உல்லாசப் போக்கும் கொண்டு நாம் வழ ஆரம்பித்ததாலேயே இந்த அவல வாழ்வு எமக்கு ஏற்படுகிறது.

இன்று எம்மில் பலர் அல்லாஹ்வின் அருளையும், பொருளையும் சேர்த்து இவ்வுலக வாழ்வில் இன்பம் காண முனைகின்றனர். இவ்வுலக முடிவு நாளில் இவர்கள் நிலையை எண்ணிப் பார்க்க ஏனோ இவர்கள் விளைவதில்லை. ஆகவே நாம் எம்மிடம் உள்ள ஏற்றத் தாழ்வுகளைச் சமப்படுத்தி இஸ்லாமிய வாழ்க்கை நெறிகளைக் கடைப்பிடித்து இவ்வலகில்வாழ மறுவுலகில் சொர்க்கமே.

எம்.சி. கலீல், கல்முனை - 05.

## கவிதைப்போட்டி இல 989



### ஏன் பிறந்தாய் மகனே!

பாராட்டுக்குரியது

கட்டிய மனைவி
வீட்டில் -சவக் கட்டிலில்
ஏறிப் போனாள்
தொட்டில்
குழந்தைக்குப்
பசி - பால் யார்
தருவாள்?
தேடினேன்
பணமுமில்லை!
நாடிய உறவுமில்லை!
ரிக்ஷா ஓடியே
வாழுமெனக்கு
ஏன் பிறந்தாய்
மகனே?

பாண்டியூர்,
பொன்.நவநீதன்

## கவிதைப் போட்டி இல 992



### தாய்க்குத் தாயாக

பிறந்த வீட்டில்
தாயை இழந்த குழந்தையை
தாய்க்குத் தாயாக நெஞ்சில்
அரவணைத்து
சைக்கிள் ரிக்ஷா ஓட்டி உழைத்து
குழந்தையை வளர்க்கும்
அப்பாவின் செயல்
பார்ப்போரின் கல் மனதினையும்
கரைய வைக்காதோ?

க.கனகசபை, சங்கானை.

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 25.12.2012

கவிதைப் போட்டி இல. 992 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### காரணம்

மனைவியை இறக்கிவிட்டு
வாடிக்கையாளர் இருவரை
வண்டியில் ஏற்றிக்கொண்டது
நோயில் துடி துடிக்கும்
தன் கைக்குழந்தைக்கு
மருந்து வாங்க பணம்
கிடைக்கும் என்பதாலேயோ!

அ.சந்தியாகோ, கண்டி.

### பரிதாபம்


கண்ணே!
நீ – ஏதோ கட்டாயத்தால்
சுமக்கிறாய்!
உன் பால் வதனம்
இதைப் பளிச்செனச் சொல்கிறது
உனைப் பெற்றவள்
தொலைந்தாளோ?...
நீ பெற்றவளைத்
தொலைத்தாயோ!...
ஐயோ பரிதாபம்!

V.A.ஜெஹனோஸ்,
மட்டக்களப்பு.

### கடின உழைப்பு

நெற்றி வியர்வையது
நிலத்தினில் சிந்திட –ஒரு கையில்
பாலகனைச் சுமந்து
மறுகையில் வண்டி பிடித்து
நேர்த்தியுடன் சுமையிழுக்கும்
இவ் இளைஞன் – ஓர்
கடின உழைப்பாளி.

கு.விஜயன், குமுளமுனை.





### உத்தமன்

தாய்க்கு உதவும்
தாராளமனம்
கொண்டதால்
ஒரு கை சேய் தாங்க.
மறு கை வண்டி ஓட்ட
பொய்யான உலகில்
மெய்வருத்தி
உழைக்கும் இவனன்றோ
உழைப்புக்கோர்
உத்தமன்!

நா.ஜெயபாலன், பிபிலை.

## உங்கள் பக்கம்

### புனரமைப்பு எப்போது?

கிளிநொச்சி கண்டாளைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கண்டாவளைக் கிராமத்தில் சுமார் 400 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றனர்.

முறையாக இங்குள்ள பாடசாலையில் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடிய பெருமைகளும், கல்விமான்கள் அதிகம் காணப்படும் உயர்நிலைப் பண்பும், மாவட்ட மட்டத்தில் இக்கிராமத்திற்கு உண்டு. இங்கு பெரிய பாடசாலை ஒன்றும், வைத்தியசாலை ஒன்றும், பிரதேச செயலகம் என்பனவும் இருக்கின்ற நிலையிலும் இக்கிராமத்தின் பிரதான வீதிப் புனரமைப்போ அல்லது மின்சார வழங்கலோ யுத்தத்தின் பின்னர் இன்னும் இடம்பெறவில்லை.

வீதிச் சீரின்மையால் இக்கிராமத்திற்கு இலங்கைப் போக்குவரத்துக் கழகத்தினால் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட பேருந்தும் நிறுத்தப்பட்டுள்ளது. மின்சார வசதி இல்லாததினால் வைத்தியசாலை இயங்காமல் இருக்கின்றது. இங்குள்ள பாடசாலையில் தேவையான அளவு கணினிகள் இருந்தும் இயங்கவைக்க முடியாமையினால் இங்குள்ள மாணவர்கள் கணினி அறிவைப் பெறமுடியாது இருக்கின்றனர்.

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இவ்வகையான அபிவிருத்திக்கு இவ்வாண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் பாரிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை அனைவரும் அறிந்ததே. எனவே இந் நிதியிலிருந்தாவது எமது பிரதேச அவசர தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள தினமுரசின் உங்கள் பக்கம் ஊடாக உரியவர்களின் கவனத்திற்கு கொண்டுவருகின்றேன்.

S.T.ராஜ், கண்டாவளை.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:– 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :–0212223628
தொலை நகல்
(Fax): 0212221811
ஈ-மெயில்:
(E-mail):-
thinamurasu@live.com
விளம்பரத் தொடர்புகளுக்கு:–
0212220188





### 'சந்தோசப் பெருவிழா'

'பூரணை நிலவே– புன்னகை தரும்
வண்ணமுகமான முரசே!
உன்னைக் கண்டவுடன்
உள்ளமெங்கும்
சந்தோச பெருவிழா போல மாறிவிட்டது
வரவேண்டும் –வளரவேண்டும் –நீ
தரவேண்டும் – முக்கனிச் சுவையாக
வாசகர்கள் எங்களுக்கு
இனிப்பாக சுவைக்கட்டும்
சவைத்து.., சுவைத்து..."
வாழ்த்தும் உனதன்பன்"

வீ.அருள்ராஜா, கொம்மாந்துறை.

### தமிழுக்கும் தமிழர்க்கும்

பெருமைசேர்ந்த முரசே! நீ என் கையில் தவழ்வதில் எனக்கு மட்டில்லா மகிழ்ச்சி. நீதாங்கி வரும் அனைத்து விடயங்களும் சிறப்பானவை. இது போன்று நீ மென்மேலும் சிறக்க எனது வாழ்த்துக்கள்.

க.ராகவன்,
நீர்கொழும்பு.

### எதிர்பார்ப்பு!

நேருக்கு நேர் நேர்மை தரும் அரசியல் கட்டுரைகளுக்கு ஒரு சபாஷ்! முரசின் வாசகராய் இரண்டு வருடங்களாகத்தான் இருந்து வருகின்றேன். குறுகிய காலத்திற்குள் முரசின் தீவிர வாசகி ஆகிவிட்டேன். லேடீஸ் ஸ்பெஷல், பாப்பா முரசு என்பவற்றில் முக்கியமான தகவல்கள் வருகின்றன. பாப்பா முரசு அற்புதத்திலும் அற்புதம். பொது அறிவு சம்பந்தமான விடயங்களிலிருந்து அனைத்து விடயங்களும் சூப்பர். இதையே நான் தொடர்ந்தும் எதிர்பார்க்கின்றேன்.

ஆர்.சர்மி, அட்டாளைச்சேனை.

## வாசகர் சாலை



### பார்வைகள் பலவிதம்

பார்வைகள் பலவிதம். அதில் தினமுரசின் பார்வை எதையும் துல்லியமாகவும் நடுநிலைமையாகவும் எடுத்துக்கூறும் விதம் என்னை மிகவும் கவர்ந்துள்ளது. சிவன் எழுதும் கட்டுரைகள் பிரமாதம். இன்னும் சிவனிடமிருந்து இது போன்ற சிறப்பான கட்டுரைகளை மேலும் எதிர்பார்க்கின்றேன்.


எம்.எவ்.மஷ்ஹூர்,
அக்குறணை.

### உன் பணி வளர்க!

பண்புமிக்க முரசே! உனை பாராட்டாத நாளே கிடையாது. வாழ்க! உன் பணி வளர்க! உன் வெளிப்பாடுகள். பூலான், வலிகளின் சன்மானம், நிலமெல்லாம் இரத்தம் என்பவை பிரமாதம். அரசியல் அலசல் முதல் அமிழ்த்தப்பட்ட அனைத்தையும் சூட்டோடு பரிமாறும் உனக்கு வாழ்த்துக்கள்.

க.ஆறபி, தெமோதரை.






# கூட்டமைப்பினருக்கு எதிராக கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டம்

யாழ் பல்கலைக்கழக மாணவர்களை சுதந்திரமாகப் படிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடமளிக்கவேண்டும் என கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கு முன்பாக பெற்றோர்கள் மற்றும் பிரதேச மக்கள் இணைந்து நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களின் இரததங்களைச் சூடேற்றி அதன் ஊடாக அரசியல் இலாபம் தேடக் கூட்டமைப்பு முயற்சிக்கக் கூடாது. எமது பிள்ளைகள் சுதந்திரமாகப் படிப்பதற்கு கூட்டமைப்பு இடமளிக்க வேண்டும் என்று பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து அவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தியிருந்தனர். கடந்த திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக ஏ-9 வீதியில் இருமருங்கிலும் இருவேறு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

யாழ.பல்கலைக்கழக மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் மற்றும் மாணவர்களின் கைது நடவடிக்கைகளைக் கண்டித்து தமிழ் கட்சிகள் இணைந்து ஆர்ப்பாட்டமொன்றை ஏற்பாடு செய்திருந்தன. இந்த ஆர்ப்பாட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கிளிநொச்சி பிரதேச மக்களும், பெற்றோரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்ட மொன்றை வீதியின் இரு மருங்கிலும் நடத்தியிருந்தனர்.

"சிறிதரன் ஐயா எங்கள் பிள்ளைகளைப் பல்கலைக்கழகம் செல்ல விடாது பிள்ளை பிடிகாரர் பிடித்தபோது எங்கே போனீர்கள்?" எங்கள் பிள்ளைகள் மண்ணின் மடியில் உங்கள் பிள்ளைகள் மாடி வீட்டில, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே படிக்கவிடு எங்கள் பிள்ளைகளைப் படிக்கவிடு, மாவை அய்யா இளம் இரத்தங்களைச் சூடேற்றி விட்டு இந்தியாவில் போய் நீங்கள் ஒழிந்ததை நாம் மறக்கவில்லை, விக்ரமபாகு அய்யா வெளிநாட்டுப் பணயத்திற்கு விசுவாசமா? நாங்கள் முள்ளிவாய்க்காலில் இருந்தபோது நீங்கள் எங்கிருந்தீர்கள்?" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கியவாறும், கோஷங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கூட்டமைப்பினருக்கு எதிரான தமது எதிர்ப்பினை வெளியிட்டிருந்தனர்.

# வடகடல் செயற்பாடு தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் மீளாய்வு

**பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழான வடகடல் நிறுவனத்தினது செயற்திட்டங்கள் தொடர்பிலான மீளாய்வு கலந்துரையாடல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களது தலைமையில் கொழும்பு மருதானையில் அமைந்துள்ள அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றுள்ளது. இதன்போது வடகடல் நிறுவனத்தின் கீழ், இயங்கிவரும் லுனுவில, வீரவில மற்றும் குருநகர் ஆகிய பகுதிகளில் இயங்கிவரும் மீன்வலை தொழிற்சாலைகளினது நடப்பாண்டு மற்றும் எதிர்கால செயற்திட்டங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.**



இதன்பிரகாரம் இந்திய அரசிடமிருந்து 21 மில்லியன் ரூபா கிடைக்கப் பெறவுள்ளதாகவும், அதனைக் கொண்டு நிறுவனத்தை மேம்படுத்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்த அமைச்சர் அவர்கள், இலங்கை அரசிடமிருந்தும் 32 மில்லியன் ரூபா கிடைக்கப் பெறவுள்ளதாகவும் தெரிவித்தார்.

வடகடல் நிறுவனத்திற்காக ஒரு தொகுதி தொழிற்துறை இயந்திர சாதனங்கள் இந்தியாவிலிருந்து கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் மேலும் ஒரு தொகுதி இயந்திர சாதனங்கள் கிடைக்கப்பெறவுள்ளதாகவும் இவற்றுடன் மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கும் விரைவான நடவடிக்கையினை முன்னெடுக்குமாறும் இவற்றின் ஊடாகவே மேற்படி மூன்று மீன்வலைத் தொழிற்சாலைகள் ஊடாக தரமான உற்பத்திகளை மேற்கொள்ள முடியும் என்பது மட்டுமன்றி சிறந்த வருவாயையும் ஈட்டமுடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் மூன்று தொழிற்சாலைகளிலும் உற்பத்தி செய்யப்படும் மீன்பிடி வலைகளை தனியார் முகவர் ஊடாக விற்பனை செய்வதற்கும் குறிப்பிட்ட செயற்திட்டங்கள் யாவும் அடுத்தவருட முற்பகுதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமெனவும் அமைச்சர் அவர்கள் துறைசார்ந்தோருக்கு பணிப்புரை விடுத்துள்ளதுடன், மூன்று தொழிற்சாலைகளினது தொழிற்துறை நடவடிக்கைகள் தொடர்பாகவும் துறைசார்ந்தோரிடம் கேட்டறிந்து கொண்டார்.

# சர்வதேச பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்தப் போகிறது ஆசியா

2030ஆம் ஆண்டளவில் சீனாவின் பொருளாதாரம் அமெரிக்காவின் பொருளாதார நிலையை விட முன்னேற்றம் காண்பதுடன்,வட அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் ஆசியாவின் பொருளாதார ஆதிக்கம் உயர்வடைந்து காணப்படுமென அமெரிக்காவின் புலனாய்வுப் பிரிவின் மூலம் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை ஐரோப்பா, ஜப்பான் மற்றும் ரஷ்யா போன்ற நாடுகளின் பொருளாதார நிலை குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியான நிலையிலேயே காணப்படுமென அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'2030இல் சர்வதேச பொருளாதாரத்தின் போக்கு" எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த அறிக்கை, இதற்கு முன்னர் 2008ஆம் ஆண்டு வெளியிடப்பட்டிருந்தது. இந்த அறிக்கையில் 'மதிநுட்பமாக சிந்திப்பது' எதிர்காலத்தை எதிர்வுகூறுவதை தவிர்ப்பது குறித்த விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

இந்த ஆண்டு வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், சீனாவின் பொருளாதார வளர்ச்சி சர்வதேச ரீதியில் முன்னணியில் காணப்படும் எனவும், இந்தியாவைவிட உயர்வான போக்கில் காணப்பட்ட போதிலும், 2030ஆம் ஆண்டளவில் இந்த இரு நாடுகளுக்கும் இடையிலான இடைவெளி குறைவடையும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மத்திய கிழக்கில் அதிகரிக்கிறது உயிரிழப்பு

மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைவாய்ப்பிற்காக சென்றவர்களில் இவ்வாண்டில் மட்டும் இதுவரை 150க்கும் மேற்பட்டோர் மரணமடைந்துள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. இவ்வாண்டில் இதுவரையில் 158 பேர் மரணமடைந்துள்ளனர். இவர்களில் 16 பேர் வீதி விபத்துக்களினாலும், 20 பேர் தொழில்துறை விபத்துக்களினாலும், இருவர் தற்கொலை காரணமாகவும், 120 பேர் இயற்கையாகவும் மரணமடைந்துள்ளனர்.

முஸ்லிம்களுக்கு ஊவா மாகாண சபையில்

# பிரதிநிதித்துவம் இல்லாமை துரதிர்ஷ்டமானது

- செந்தில் தொண்டமான்

முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் ஊவா மாகாண சபையில் ஒரு அரசியல் பிரதிநிதித்துவம் கூட இல்லாமல் இருப்பது பெரும் துரதிர்ஷ்டமான நிலையாகும். எனினும் இக்குறையை நிவர்த்திசெய்ய என்னால் இயலுமான முயற்சிகளை மேற்கொள்ளத் தயாராக இருக்கின்றேன் என்று என ஊவா மாகாண தோட்ட உட்கடடமைப்பு இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

'பதுளை மகளிர் கல்லூரியில் அமைக்கப்பட்டுவரும் கட்டட நிர்மாணப் பணிகளை பார்வையிட்டதன் பின்னர் அங்கு நடைபெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"மலையகத்தில் கடந்த காலங்களில் அரசியல்ரீதியாக தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையே சில முரண்பாடுகள் தோன்றினாலும் தற்போதுள்ள அரசியல் சூழ்நிலையில் சிறுபான்மை இனமாக வாழும் தமிழ் முஸ்லிம்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தேவைப்பாடு ஏற்பட்டுள்ளது"

முஸ்லிம் அன்பர்களுக்காக என்னுடைய கதவுகள் எப்பொழுதும் திறந்தே இருக்கும். சனி, ஞாயிறு தினங்களில்கூட அமைச்சில் என்னை சந்திக்கலாம். முஸ்லிம்களுடைய விவகாரங்கள் தொடர்பாக இணைப்புச் செயலாளர் ஒருவரைக்கூட நான் நியமித்துள்ளேன். அவர் ஊடாக தங்கள் தேவைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும். இதே வேளை இந்த மகளிர் கல்லூரிக்கு 2013 ஆம் ஆண்டு என்னுடைய பன்முகப்படுத்த நிதி ஒதுக்கீட்டிலிருந்து மூன்று இலட்சம் ஒதுக்கீடு செய்யத் தயாராக உள்ளேன்" என்றார்.

வாரமலர்
# தினமுரசு
க.பெ.இல:- 167. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

## அச்சம் பரவுகின்றது

முகாம்களில் இருந்த படையினரை படலைவரை இழுத்துவந்தது நாம்தான் என்று இன்றும் கூட ஆரம்பகால போராளிகள் புலம்புவதைக் கேட்கமுடியும்.

பனங்கொட்டையை இடுப்பில் சொருகிக் கொண்டும். பலகையை துவக்குப் போல் சீவி இடுப்பில் மறைத்துக் கொண்டும் ஆமிக்காரனுக்கு விளையாட்டுக்காட்டி இயக்கம் வளர்த்த காலத்தை மறக்கமுடியாது.

சிறுகச் சிறுக வளர்ந்த விளையாட்டு இறுதியில் பயங்கரவாத வடிவம் எடுத்து எல்லோரையும் பலி கொண்டு தானும் பலியாகிப்போனது உலகம் வேடிக்கை பார்க்க நடந்தேறிய உண்மைச் சம்பவம்.

இப்போது மீண்டும் யாழ்ப்பாணத்தில் படைத்தரப்புடன் மோதல் போக்கையும். அவர்களின் கண்ணைச் சுற்றி விளையாட முற்படும் விபரீதத்தையும் சிலர் திட்டமிட்டு அரங்கேற்றி வருகின்றனர்.

பல்கலைக்கழகம். மாணவர்கள் அதுவும் இளைஞர்கள் என்ற வலிமை இவற்றை சாதகமாக பயன்படுத்தினால் பாதுகாப்பாக இருக்கும் என்று திட்டமிடப்படுகின்றது.

தமிழர்களின் போராட்டம் முனைப்புப் பெற்ற காலங்களில் குறிப்பாக யாழ். பல்கலைக்கழகம் முக்கிய தளமாகவும். பாதுகாப்புக் கவசமாகவும் இருந்தது என்று போராட்டத்தின் ஆரம்ப கர்த்தாக்களுக்குத் தெரியும்.

ஈழப்போராட்டத்துக்கும். யாழ். பல்கலைக்கழகத்துக்கும் நிறையவே தொடர்புகள் இருந்திருக்கின்றது. எனவே தற்போதைய சூழலை போராட்டத்தின் பின்னணியிலிருந்து வேறுபடுத்தி சிந்திப்பதும். திடீர் உணர்வலையாக சித்தரிப்பதையும் எவரும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

பல்கலைக்கழகத்துக்குள் உணர்ச்சி பொங்கியவர்கள் எவரும் நடந்த ஈழப்போராட்டத்துக்கும் தாம் உணர்ச்சிவசப்படுவதற்கும் சம்பந்தமே இல்லையென்று கூறவில்லை.

இதை மறைத்து அப்பாவி மாணவர்களின் கல்வியை சீர்குலைத்து பலிக்கடாவாக்க பின்னாலிருந்து சதி செய்யும் இனத்துரோகிகளை முதலில் தண்டிக்கவேண்டும். அவர்களை இன ஐக்கியத்துக்கும். இறைமைக்கும் பங்கம் விளைவித்தவர்களாக அடையாளம் காணவேண்டும்.

ஒரு சில மாணவர்கள் தூண்டுதல்களுக்கு எடுபட்டு நடத்துகின்ற விபரீதங்களால் பல மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டு எதிர்காலம் வீணாகின்றது. மறுபக்கத்தில் பாதுகாப்பு அச்சமும். கண்காணிப்புக்கான அவசியமும் ஏற்படுகின்றது.

இவ்வாறானதொரு புறச்சூழல் தற்பொழுது யாழ்ப்பாணத்தில் உருவாகியுள்ளது. கண்காணிப்பு. திடீர் சோதனைகள், சந்தேகப்படுதல் போன்ற நடவடிக்கைகளில் பாதுகாப்புத்தரப்பு கவனம் செலுத்துகின்றது.

வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் நிலவிய மெல்லிய அச்சமான சூழலை மக்களால் உணரமுடிகின்றது.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

அமலன்



# தொடர்கிறது...
# நீதிக்கும் நிறைவேற்று அதிகாரத்துக்குமான இழுபறி

**புதிய பிரதம நீதியரசர் நியமிக்கப்படும் போது அவர், அரசாங்கத்தின் சார்பானவராக இருக்கும்போது அவருக்கு சட்டத்தரணிகளின் ஆதரவு எந்தளவில் இருக்கும் என்பது தற்போது எழுந்துள்ள கேள்வியாகும். இதனை சமாளித்து சட்டத்துறையையும் மதித்து அதனை தம்பக்கம் இழுத்துக்கொள்வதில் அரசாங்கம் வெற்றிபெறுமா? என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.**

**கடந்த** இரண்டு வாரங்களாக கொழும்பு புதுக்கடை நீதிமன்ற வளாகம் பதற்றத்துடன் செயற்பட்டுவந்தது.

கடந்த வியாழக்கிழமையும் உயர்நீதிமன்றத்தில் இருந்து பிரதமநீதியரசர் நாடாளுமன்றத்துக்கு விசாரணைக்காக செல்லும்போது நீதிமன்ற வளாகம் உணர்வுபூர்வமான தோற்றத்தை கொண்டிருந்தது

நாடாளுமன்றத்தில் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் நாடாளுமன்ற தெரிவுக்குழுவும் அதே தீவிரத்தில் செயற்பட்டுக் கொண்டிருந்தது.

பிரதம நீதியரசரும் தம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றவியல் விசாரணையை சந்திப்பதற்காக நாடாளுமன்ற கட்டடத்துக்கு சென்றார்.

அவர் நாட்டின் பிரதம நீதியரசராக இருக்கின்றபோதும் தற்போது பொலிஸாரின் மரியாதை செலுத்தப்படுவதில்லை என்ற அடிப்படையில் அவரும் எந்த மரியாதையையும் எதிர்ப்பார்க்காது விசாரணைக்கு செல்கிறார்.

அங்கு விசாரணைக்குழு வழமையான முறையில் அவரிடம் விசாரணைகளை மேற்கொள்கிறது.

எனினும் ஏனைய நாட்களைவிட தமது நடவடிக்கைகளில் பதற்றத்தை காட்டிய பிரதம நீதியரசரும் அவரது சட்டத்தரணிகளும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் விசாரணைகளில் இருந்து வெளியேறினர்.

தமக்கு எதிரான நாடாளுமன்றத் தெரிவுக்குழு, நியாயமான முறையில் விசாரணையை நடத்தவில்லை என்று குற்றம் சுமத்தியே பிரதம நீதியரசர், விசாரணையில் இருந்து வெளியேறினார்.

இதனை எதிர்பார்க்காத நாடாளுமன்றத் தெரிவுக்குழுவும் அடுத்த நடவடிக்கை என்ன என்பது தொடர்பில் உடனடியாக ஆராய்ந்தது.

எனினும் தமது நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இருந்து எதிர்க்கட்சிகளின் நான்கு உறுப்பினர்களும் வெளியேறுவர் என்ற அடிப்படையில் அதற்கும் தயாராகவேண்டும் என்ற நோக்கத்துடனும் தெரிவுக்குழுவின் அரசாங்கத் தரப்பு உறுப்பினர்கள் செயற்பட்டனர்.

இந்த நிலையில் வெள்ளிக்கிழமையும் வந்தது. பிரதமநீதியரசரும் விசாரணைக்காக மீண்டும் நாடாளுமன்றத்துக்கு சென்றார். நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் எதிர்க்கட்சி நான்கு உறுப்பினர்களும் தமது நடவடிக்கைக்கு தயாராகினர்

அதன்படி செய்தியாளர் சந்திப்பும் தயாரானது. செய்தியாளர்களிடம் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கருத்துக்களை வெளியிட்டனர்.

பிரதம நீதியரசருக்கு எதிரான நாடாளுமன்றத் தெரிவுக் குழு, ஒரு நோக்கத்தை கொண்டு செயற்படுவதாக குறிப்பிட்ட அவர்கள், தாம் மீண்டும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில், இணைத்துக் கொள்ள வேண்டுமானால், சில கேள்விகளுக்கு நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவர் அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா பதில் வழங்கவேண்டும் என்று அவர்கள் கோரினர்.

அவர்கள் கேட்ட கேள்வியின் ஒரு கேள்வியை மாத்திரம் பார்த்தால், பிரதமநீதியரசருக்கு எதிராக குற்றவியல் பிரேரணை கொண்டு வரப்படுவதற்கு முன்னர், அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் அந்தக் குற்றவியல் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக கையெழுத்துகள் பெறப்பட்டன.

எனினும் அவ்வாறு கையெழுத்துப் பெறப்பட்டவர்களில் பலருக்கு பிரதம நீதியரசருக்கு எதிராக என்ன குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன என்பது தெரிந்திருக்கவில்லை.

எனவே இந்த குற்றச்சாட்டுக்கு நாடாளுமன்ற தெரிவுக்குழு பதில் வழங்க வேண்டும் என்று குழுவில் இடம்பெற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோரினர். இந்தக் கோரிக்கைக்கு அரசாங்கத் தரப்பில் இருந்து நிச்சயமாக சாதகமான பதில் கிடைக்காது என்று அவர்களுக்கு தெரிந்திருந்தும்கூட, அந்தக் கோரிக்கையை குழுவின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முன்வைத்தனர்.

இந்தநிலையில் எதிர்க்கட்சியினர் நினைத்தமையை போன்று தெரிவுக்குழுவின் தலைவர் அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா, எதிர்க்கட்சியினரின் கோரிக்கையை நிராகரித்தார்.

இதனையடுத்து எதிர்பார்த்தமையை போன்று எதிர்க்கட்சியினரின் நாடாளுமன்றக் குழுவில் இருந்து வெளியேற்றம் உறுதியானது.

இதேவேளை மற்றும் ஒரு தகவலையும் கூறவேண்டும். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்த நாடாளுமன்றக்குழுவில் இருந்து விலகிச்செல்வதற்கு மற்றும் ஒரு காரணமும் இருந்தது.

அதாவது குறித்த நாடாளுமன்றக் குழுவின் செயற்பாட்டின்படி பெரும்பான்மை உறுப்பினர்களால் பிரதம நீதியரசரின் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படுமானால் அதனை ஏனைய சிறுபான்மை அங்கத்துவத்தை கொண்டுள்ள எதிர்க்கட்சியினரும் ஏற்றுக் கொள்ளவேண்டிய அவசியம் ஏற்படும்.

எனவே இந்த சந்தர்ப்பத்தில் பிரதம நீதியரசர் மீதுள்ள குற்றங்களை நிரூபித்து அதன் மூலம் அரசாங்கத்துக்கு நற்பெயரை பெற்றுக்கொடுத்து மக்கள் மத்தியில் அரசாங்கத்துக்கு தற்போது ஏற்பட்டுள்ள தாக்கத்தை நிறுத்துவதற்கு உதவி விடக்கூடாது என்பதற்காகவே எதிர்க்கட்சியினர் இந்த நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் இருந்து விலகினர் என்பது வெளிப்படை.

எனவே இதன்மூலம் பிரதமநீதியரசர் விடயத்தில் பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அரசாங்க எதிர்ப்பு போக்கை எதிர்க்கட்சியினரால் தக்கவைக்க முடிந்திருக்கிறது என்றே கூறலாம்.

இந்தநிலையில் தனித்து செயற்பட்ட ஆளும் கட்சியினரை மட்டும் கொண்டு இயங்கிய நாடாளுமன்ற தெரிவுக்குழு இரண்டு நாட்களுக்குள் தமது அறிக்கையை தயாரித்தது.

அதன்மூலம், பிரதம நீதியரசருக்கு எதிராக மூன்று குற்றச்சாட்டுக்களை நிரூபித்து அவரைக் குற்றவாளியாக்கியுள்ளது.

சரி, குற்றவாளியாக்கப்பட்ட பிரதம நீதியரசர் பெரும்பாலும் ஒரு மாதக் காலப்பகுதிக்குள் சட்டப்பிரகாரம் பதவியில் இருந்து வெளியேறவேண்டும்.

இதன்போது புதிய பிரதமநீதியரசர், ஒருவர் நியமிக்கப்படவேண்டும். அதனை ஜனாதிபதியே நியமிப்பார்.

அது வழக்கமாக உள்ள நடைமுறை என்றபோதும் தற்போதைய பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் விடயத்தில் அரசாங்கம் முழு சட்டத்துறையினரையும் பகைத்துக்கொண்டே தமது செயற்பாட்டை முன்னெடுத்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனவே புதிய பிரதம நீதியரசர் நியமிக்கப்படும் போது அவர், அரசாங்கத்தின் சார்பானவராக இருக்கும் போது அவருக்கு சட்டத்தரணிகளின் ஆதரவு எந்தளவில் இருக்கும் என்பது தற்போது எழுந்துள்ள கேள்வியாகும்.

இதனை சமாளித்து சட்டத்துறையையும் மதித்து அதனை தம்பக்கம் இழுத்துக் கொள்வதில் அரசாங்கம் வெற்றி பெறுமா? என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

இல்லையேல், இலங்கையில் நீதித்துறை, சட்டவாக்க சபையான நாடாளுமன்றம் மற்றும் நிறைவேற்று அதிகாரம் என்பவற்றுக்கு இடையில் முறுகல் தொடர்ந்துகொண்டேயிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.






# புலிகளின் வீழ்ச்சி!

## இறுதி நாட்கள்...

## இரணைமடுவுக்கு வந்த உக்ரேன் விமானம்!

**மொத்தம்** 5 பேர் அடங்கிய டீம் அது. அதில் இருந்த இருவர், 2006இல் வெளிநாடுகளுக்கு வேறு பெயர்களில் அனுப்பிவைக்கப்பட்டனர்.

வெளிநாடுகளில் புலிகளின் அன்டர்- கவர் ஒப்பரேஷனாக இயங்கிய அந்த இருவரையும், வெளிநாட்டு ஈழத் தமிழர்களுக்கு 'வேறு பெயரில்தான்' தெரியும் என்பதால், அவர்களது பெயர்களை விட்டுவிடலாம். மூன்றாவது நபர், பொட்டு அம்மான். மற்றைய இருவரும் வன்னியில் இருந்து இந்த விமான ஒப்பரேஷனை கவனித்த ஞானவேல், தமிழ் குமரன்.

2006ஆம் ஆண்டில் இருந்து துவங்கிய இந்த ஒப்பரேஷனில், விமான மூலம் ஆயுத இறக்குமதிக்கான தொடர்புகளை மேற்கொள்ளவே, 2 வருடங்கள் பிடித்தன. 2008ஆம் ஆண்டு ஒப்பரேஷன் செயல்பட தயாராகியது. இதற்கிடையே யுத்தம், வன்னியில் உக்கிரமாக நடந்து கொண்டிருந்தது.

வெளிநாட்டில் இயங்கிய இருவரும் பிடித்த தொடர்புகள் அனைத்துமே உக்ரேன் நாட்டில் இருந்தன. இங்கிருந்த ஆயுத வியாபாரி ஒருவரும், அவர் மூலமான அறிமுகமான கார்கோ விமான நிறுவனம் ஒன்றும்தான் இவர்களது தொடர்புகள். குறிப்பிட்ட கார்கோ விமான நிறுவனம், ஆபிரிக்க நாடுகள் சிலவற்றுக்கு ஆயுத சப்ளை செய்த ஆட்கள்.

எல்லாம் தயார் என்ற விபரம் உக்ரேனில் இருந்து வன்னிக்கு அறிவிக்கப்பட்டது. ஆயுதங்களுக்கான பண ஏற்பாடுகளை ஞானவேல் கவனித்துக் கொண்டார்.

ஆரம்பத்தில் தமிழ் குமரன், உக்ரேனில் இருந்தவர்களுக்கும், பொட்டு அம்மானுக்கும் இடையே வன்னியில் தொடர்பாளராக இருந்தார். ஏற்பாடுகள் அனைத்தும் ரெடி என்ற நிலையில், உக்ரேனில் இருந்த இருவருடன் பொட்டு அம்மானே நேரில் டீல் பண்ண துவங்கினார்.

உக்ரேனில் இவர்கள் டீல் பண்ணிய ஆயுத வியாபாரிக்கு 'சுற்றி-வளைத்து' இலங்கை உளவுத் துறையுடன் தொடர்புகள் இருந்தன என்பது, ஆயுத டீலில் புதிதாக இறங்கியிருந்த இவர்களுக்கு தெரிந்திருக்கவில்லை.

முதலாவது விமான லோட் ஆயுதங்களுக்கான பணம் உக்ரேனில் வைத்து செட்டில் செய்யப்பட்டது. முதல் ட்ரிப்புக்கான திகதியும் குறிக்கப்பட்டது.

குறிப்பிட்ட திகதி ஒன்றில், இரணைமடுவில் இருந்த புலிகளின் விமான ஓடுதளத்தில் உக்ரேன் விமானம் இறங்குவதற்கான ஏற்பாடுகளை ஞானவேல் கவனித்தார்.

அன்றைய தினத்தில் விமானத்தில் ஆயுதங்கள் வருகின்றன என்ற விபரம், புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு பொட்டு அம்மானால் சொல்லப்பட்டது.

கப்பலில் ஆயுதங்களை இறக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த சூசைக்கு இந்த விபரங்கள் ஏதும் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. (அந்த நேரத்தில் அவரது கப்பல்கள் பல அடிபட்டிருந்தன)

அன்றைய தினத்தில், உக்ரேனில் உள்ள Simferopol (IATA code: SIP) என்ற சிறிய ஏர்போர்ட்டில் இருந்து இவர்கள் ஏற்பாடு செய்த கார்கோ விமானம் புறப்பட்டதை, பொட்டு அம்மானால் அனுப்பி வைக்கப்பட்ட இருவரும் பார்த்தார்கள். 1930ஆம் ஆண்டுகளில் அமைக்கப்பட்ட பழைய விமான நிலையம் அது.

அதன் கார்கோ டர்மினலில் இருந்து புறப்பட்ட விமானத்துக்குள் நிஜமாக என்ன லோட் செய்யப்பட்டிருந்தது என்பதை அருகில் நெருங்கி பரிசோதனை செய்ய இவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

Simferopol விமான நிலையத்தில் வைத்து, இரணைமடுவுக்கு செல்வதற்கான பிளைட்-பிளான் ஒன்று இவர்களுக்கு காட்டப்பட்டது. அங்கிருந்து சுமார் 6450 கி.மீ. தொலைவில் உள்ளது இரணைமடு.

இரணைமடுவில், அதிகாலை நேரத்தில் விமானம் வந்துசேரும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், விடிந்த பின்னரும் வந்து சேரவில்லை. வன்னியில் இருந்து உக்ரேனுடன் தொடர்பு கொள்ளப்பட்டது. உக்ரேனில் இருந்தவர்கள், ஆயுத வியாபாரியை தொடர்பு கொண்டார்கள். விமானத்தை எப்படியும் தொடர்புகொண்ட பின் விபரம் தெரிவிப்பதாக கூறினார் ஆயுத வியாபாரி.

சில மணி நேரத்தின்பின் ஆயுத வியாபாரி விசித்திரமான தகவல் ஒன்றை கொடுத்தார்.

"விமானம் தரையிறங்கிவிட்டது.



ஆனால், தவறான இடத்தில் இறங்கியுள்ளது. அங்கே சிக்கலில் மாட்டிக் கொண்டுள்ளார் விமானி" என்றார் ஆயுத வியாபாரி!

தரையிறங்கியதாக கூறப்பட்ட தவறான இடம் எது என்று தெரிந்தால் ஆச்சரியத்தின் உச்சிக்கே செல்வீர்கள்.

அது, இந்தியாவில், மும்பைக்கு அருகில் உள்ள ரத்னகிரி ஏர்போர்ட்! (Ratnagiri Airport – IATA code RTC)

2008இல் இந்த சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்ட காலத்துக்கு சில வாரங்களின்பின் மகாராஷ்டிரா மாநில பொதுப் பணித் துறையிடம் இருந்து, இந்திய கடலோரப் பாதுகாப்பு படையிடம் ஒப்படைக்கப்பட்ட விமான நிலையம் அது. புலிகளுக்கு ஆயுதம் ஏற்றிச் சென்றதாக கூறப்பட்ட உக்ரேன் விமானம் ஏன், எதற்கு, எப்படி அங்கே தரையிறங்கியது?

அதை, அடுத்த அத்தியாயத்தில் சொல்கிறோம்.

விடுதலைப் புலிகளின் ஆயுத சப்ளைக்கான கப்பல் போக்குவரத்து கே.பி.-யின் கையில் இருந்து எடுக்கப்பட்டது. புலிகளின் கப்பல்கள் கடற்புலிகளின் தளபதி சூசையிடம் ஒப்படைக்கப்பட்டது. அப்போது, கடல் புலிகளால் இதை கையாள முடியுமா என்ற சந்தேகத்தை எழுப்பிய பொட்டு அம்மான், தமது உளவுப் பிரிவு ஆட்களை வைத்து டெவலப் செய்த, Plan-B பற்றி கடந்த அத்தியாயத்தில் கூறியிருந்தோம்.

பொட்டு அம்மானால் ஆயுதம் வாங்க உக்ரேன் நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக நாம் குறிப்பிட்ட இரண்டுபேரும், அங்கே இவர்கள் டீல் பண்ணிய ஆயுத வியாபாரியால் ரொம்பவும் அலைய விடப்பட்டனர். அத்துடன், அந்த வியாபாரிக்கும், இலங்கை உளவுப் பிரிவுக்கும் இடையே ஏற்கனவே இருந்த தொடர்பும், உக்ரேனில் புதிதாக போய் இறங்கிய இவர்கள் இருவருக்கும் தெரிந்திருக்கவில்லை.

உக்ரேனில் உள்ள Simferopol ஏர்போர்ட்டில் இருந்து புலிகளின் ஆயுதங்களுடன் புறப்பட்டதாக இவர்களுக்கு காட்டப்பட்ட விமானம், ஒரு AN-72 ரக விமானம்.

அதில் ஆயுதங்கள் வருவதாகவும், விமானம் இரணைமடுவில் உள்ள ரன்வேயில் இறங்குவதற்கு ஏற்பாடு செய்யுமாறும், வன்னியில் இருந்த பொட்டு அம்மானுக்கு தகவல் அனுப்பியிருந்தார்கள்.

யுத்தம் முடிவுக்கு வந்தபின், 2011இல் இதில் தொடர்புடைய ஒருவரை சந்திக்க நேர்ந்தது. அவரிடம், "2008ஆம் ஆண்டு உக்கி ரேனில் இருந்து புறப்பட்ட அந்த விமானத்தில் நிஜமாகவே ஆயுதங்கள் லோட் செய்யப்பட்டு இருந்தனவா என்பது உங்களுக்கு தெரியுமா?" என்று கேட்டேன்.

"தெரியாது. அது நடந்த நேரத்தில் வன்னி யுத்தத்தில் நாம் (புலிகள்) பின்வாங்கிக் கொண்டிருந்தோம். அவசரமாக ஆயுதங்கள் தேவையாக இருந்தன. விமானத்தில் ஆயுதங்கள் ஏற்றப்பட்டு இருந்ததாக அவர்கள் கூறியதை நம்புவதை தவிர எமக்கு வேறு வழி இருக்கவில்லை" என்றார்.

தற்போது எல்லாவற்றையும் இணைத்துப் பார்த்தால், புலிகளுக்கு கூறப்பட்டதுபோல அந்த விமானத்தில் ஆயுதங்கள் ஏதும் இருக்கவில்லை என்று ஊகிக்கமுடிகிறது.

விமானம் Simferopol ஏர்போர்ட்டில் இருந்து புறப்பட விமானம் வரும் என்று வன்னியில் புலிகள் காத்திருக்க "விமானம் தவறுதலாக மும்பைக்கு அருகில் உள்ள ரத்னகிரி ஏர்போர்டில் தரையிறங்கிவிட்டது" என்றார் உக்ரேன் ஆயுத வியாபாரி! அதன்பின் இந்திய அதிகாரிகளை 'எப்படியோ சரிக்கட்டி' விமானத்தை மீட்டு வந்துவிட்டோம். ஆயுதங்களை இந்திய அதிகாரிகள் பறிமுதல் செய்து விட்டார்கள்" என்றும், ஆயுத வியாபாரி கூறிவிட்டார்.

வன்னியிலோ, இலங்கை இராணுவம் வேகமாக முன்னேறிக் கொண்டு இருந்தது. சூசையின் ஆயுதக் கப்பல்கள் வந்து சேரும் என்ற நம்பிக்கை இயக்கத்தின் உயர்மட்டத்தில்,விஷயம் தெரிந்த பலருக்கும் அற்றுப் போயிருந்தது.

(தொடரும்...)

---

(சென்றவாரத் தொடர்ச்சி...)

# ஓர் இரகசிய கொலைத் திட்டம்

**இரண்டு**, அவர் திருமணம் செய்திருப்பது ஒரு இத்தாலியப் பெண்ணை.

விபரங்கள் கிடைத்தவுடன், டானி தனது உளவாளி ஒருவரை பெல்ஜியத்துக்கு அனுப்பி வைத்தார். மொசாத் தனது ஐரோப்பியச் செயற்பாடுகளின் தலைமையகத்தை பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் இருந்து, பெல்ஜியத்துக்கு நகர்த்தியிருந்தது.

பெல்ஜியம் சென்ற உளவாளி, மொசாத்தின் ஐரோப்பியச் செயற்பாடுகளின் தலைவரிடம் டானி கூறிய விஷயத்தை வாய்மொழியாகத் தெரிவித்தார். பின்னர், பெல்ஜியத்திலிருந்து ஐரோப்பிய நாடுகளில் உளவு பார்த்தலில் அனுபவமுடைய உளவாளி ஒருவர், சுவிட்சலாந்துக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

ஐரோப்பிய உளவு பார்த்தலில் அனுபவசாலியான அந்த உளவாளிக்கு, இப்படியான ஹமாஸ் தொடர்புகள் உடைய லெபனான்காரரை சுவிட்சர்லாந்தில் எந்தப் பகுதிக்குப் போய்த்தேடவேண்டும் என்று தெரிந்திருந்தது.

அவர் நேரே போன இடம் பேர்ன் நகரம். இரண்டு நாட்கள் பேர்ன் நகரில் சுற்றித் திரிந்தும் அப்துல்லா பற்றிய எந்த விபரமும் கிடைக்கவில்லை.

பேர்னில் இருந்து தெற்கு நோக்கிப் பயணித்தார் அந்த உளவாளி. அவரது அடுத்த இலக்கு லிபி; பெல்ட் என்ற சிறு நகரம்.

மொசாத், இந்த லிபி;பெல்ட் நகரில் அதற்குமுன் சிறிய ஒப்பரேஷன் ஒன்றை நடத்தியிருந்தது. அந்த நகரில் இருந்த பயோ இன்ஜினியரிங் நிறுவனம் ஒன்றிடமிருந்து ஈரான் சில பொருட்களை சில வருடங்களுக்கு முன்பு ஓடர் செய்திருந்தது.

அந்தப் பொருட்கள் ஈரானின் ஆயுதத் தயாரிப்பு ஒன்றுக்கு உபயோகிக்கப்படலாம் என்ற சந்தேகம் மொசாத்துக்கு இருந்தது. எனவே, என்ன நடக்கிறது என்பதில் ஒரு கண் வைத்திருக்க, லிபி; பெல்ட் நகருக்கு ஒரு உளவாளிகள் டீமை அனுப்பி வைத்தது.



இந்த சுவிஸ் நிறுவனம், எந்தவித அரபு தொடர்பும் இல்லாத நிறுவனம். தமது பொருட்களுக்காக ஈரானில் இருந்து வந்த ஓடரை வெறும் வியாபார ஓடராகவே பார்த்தது அந்த நிறுவனம் பொருட்கள் தயாராகி, ஏற்றுமதி செய்யப்படுவதற்குச் சில தினங்கள் இருக்கும் நிலையில் மொசாத் தனது வேலையைக் காட்டியது.

இரவோடு இரவாக சுவிஸ் தொழிற்சாலையின் உற்பத்திப் பிரிவில் ஒருவெடிகுண்டு வெடித்தது.

குண்டு வெடிப்பின் பின்னணியில் யார் இருந்தார்கள் என்பது கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் தங்களது தொழிற்சாலையில் வெடிகுண்டுகள் வெடிப்பதைப் பார்த்து மிரண்டுபோன சுவிஸ் நிறுவனம், ஈரானுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டது.

கடந்த காலத்தில் இப்படியான ஒரு சம்பவம் அந்தச் சிறு நகரில் நடைபெற்ற காரணத்தால், அங்கே ஏதாவது அரபுத் தொடர்புகள் இன்னமும் இருக்கலாம் என்று நினைத்துத்தான் மொசாத் உளவாளி அந்த நகருக்குச் சென்றார் அப்துல்லாவைத் தேடி.

(தொடரும்)

# நிலமெல்லாம் இரத்தம் 31



பா.ராகவன்

**காலம்** கனிவதற்காகக் காத்திருந்தார். கனியத்தான் செய்தது. இடம்மாறுவதற்கல்ல. இன்னொரு விஷயத்துக்கு. அந்த ஒரு சம்பவந்தான் இன்றைக்கும் பாலஸ்தீனத்து அராபியர்களால் தினசரி நினைத்துப் பார்க்கப் படுகிறது. நினைத்து நினைத்து மனம் கனக்கச் செய்கிறது. சொந்த மண் – அதுவும் புனித மண் – அங்கேயே அகதிகளாகத் தாங்கள் வாழநேர்ந்திருப்பதன் அவலத்தை எண்ணி எண்ணி மனதுக்குள் மறுகச் செய்திருக்கிறது.

சொந்த சோகங்களினாலும் இஸ்லாத்தின் எதிரிகள் குறித்த கவலைகளாலும் கொஞ்சம் துவண்டிருந்த முகம்மது, அன்றைக்கு இரவு தொழுகைக்காக மெக்கா நகரின் மத்தியிலுள்ள க'அபாவுக்கப் போனார். தொழுதுவிட்டு, களைப்பில் அங்கேயே ஓர் ஓரமாகச் சாய்ந்து, கண் அயர்ந்தார்.

எப்போதும் விழிப்பு நிலையிலேயே அவரை நாடிவரும் ஜிப்ரீல், அன்று உறங்கத் தொடங்கியபோது, வந்து தட்டி எழுப்பினார். திடுக்கிட்டு எழுந்து அமர்ந்த முகம்மதுவின் கைகளைப் பற்றி எழுப்பினார். அதன் பின் நடந்தவற்றை முகம்மதுவே வருணித்திருக்கிறார்:

"..... அவர் என் கைகளைப் பிடித்து எங்கோ அழைத்தார். கூடவே நடக்கத் தொடங்கினேன். பள்ளிவாசலின் வெளியே நாங்கள் வந்துசேர்ந்தபோது அங்கே வெள்ளைவெளேர் என்றொரு மிருகம் நின்றுகொண்டிருந்தது. பார்த்தால் கழுதைபோல் இருந்தது. கோவேறு கழுதை போலவும் தெரிந்தது. ஆனால் இரண்டுமில்லை. இரண்டுக்கும் இடைப்பட்ட தோற்றம்கொண்ட ஏதோ ஒரு மிருகம். அம்மிருகத்துக்கு இருபுறமும் அகன்ற பெரிய சிறகுகள் இருந்தன. கால்களும் சிறகுகளைப் போலவே அசைந்துகொண்டிருந்தன. எத்தனை பெரிய மிருகம் அது! அம்மிருகம் எடுத்துவைக்கும் ஒவ்வொரு காலடியும் கண்ணின் பார்வைத் தொலைவு நிகர்த்ததாக இருந்தது..."


ஜிப்ரீல் வழிகாட்ட, அம்மிருகத்தின் மீது முகம்மது ஏறி அமர்ந்தார். பின்னாலேயே ஜிப்ரீலும் ஏறிக்கொண்டார். உடனே அந்த மிருகம் தன் பிரம்மாண்டமான சிறகுகளை அசைத்தபடி வானில் உயர்ந்து பறக்கத் தொடங்கியது. மதினா நகரின் மேலே அது பறந்து, வடதிசையில் ஜெருசலேத்தைச் சென்றடைந்ததாக முகம்மது குறிப்பிடுகிறார்.

இதுதான் – இங்கேதான் ஆரம்பம். இப்ராஹிம் என்கிற ஆபிரஹாம் நபி வாழ்ந்த பூமி. மூசா என்கிற மோசஸுக்கு தோரா அருளப்பட்ட பூமி. ஈசா என்கிற இயேசுவுக் பைபிள் வழங்கப்பட்ட பூமி. முகம்மதுவுக்கு முந்தைய இறைதூதர்கள் பலருடன் சம்பந்தப்பட்ட ஜெருசலேம் மண். இறைவன் விரும்பும் பிரதேசம். அங்கேதான் ஜிப்ரீல் முகம்மதுவை அழைத்துவந்தார்.

முகம்மது நபி, ஜெருசலேத்துக்கு வந்தது, இஸ்லாத்தின் சரித்திரத்தில் மிகமிக மிக முக்கியமானதொரு சம்பவம். அந்தப் பயணத்தின்போது முந்தைய நபிமார்கள் அனைவரும் முகம்மதுவை அங்கே சந்தித்தாகவும் அனைத்து நபிமார்களும் சேர்ந்து தொழுகை நிகழ்த்தியதாகவும், தொழுகைக்குப்பின் விருந்துண்டதாகவும், அதன்பின் முகம்மதுவை ஜிப்ரீல் வானுலகத்துக்கு அழைத்துச் சென்றதாகவும் இஸ்லாம் தெரிவிக்கிறது.

அதற்குமுன், இலியாஸ், இயேசு போன்ற நபிமார்களுக்கு இதைப் போல் வானுலக யாத்திரை சித்தித்திருக்கிறது. முகம்மதுவுக்கு வானுலகில் ஓர் இலந்தை மரத்தடியில் தெய்வீகப் பேரொளியின் தரிசனம் கிட்டியதாகச் சொல்லப் படுகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான்



முகம்மதுவுக்கு இஸ்லாத்தின் பிரமாணங்கள் குறித்த பல முக்கிய வசனங்கள் அருளப்பட்டிருக்கின்றன. முஸ்லிம்கள் தினசரி ஐம்பது வேளை தொழவேண்டும் என்கிற இறை உத்தரவும் இந்தச் சந்தர்ப்பத்தில் வழங்கப்பட்டதுதான்.

ஜிப்ரீல் அழைத்துச் சென்று வானுலகம் கண்டு புவிக்கு மீண்ட முகம்மது, நேரே வந்து இறங்கிய இடமும் ஜெருசலேம்தான். கழுதைக்கும் கோவேறு கழுதைக்கும் இடைப்பட்ட மிருகமான அந்த புராக், அவரை ஒரு குன்றின்மீது கொண்டு வந்து இறக்கிவிட்டது.

இன்றைக்கும் ஜெருசலேம் என்றவுடனேயே நமக்கு நினைவுக்கு வரும் Dome of the Rock. இந்தக் குன்றின் உச்சியில்தான் அமைந்திருக்கிறது. முகம்மது நபி, விண்ணுலகம் சென்று திரும்பிவந்து இறங்கிய இடத்தில், அச்சம்பவத்தின் நினைவாக அமைக்கப்பட்ட ஒரு வழிபாட்டுத்தலம். ஜெருசலேம் நகரின் எந்த இடத்தில் இருந்து பார்த்தாலும் இந்த வழிபாட்டுத்தலம் தென்படும்.அப்படியொரு அமைப்பு நேர்த்தி கொண்டது. இந்தக் குன்றுக் கோபுரமும் இதனோடு இணைந்த அல்அக்ஸா என்ற மசூதியும்தான் பாலஸ்தீன் முஸ்லிம்களின் ஒரே சொத்து. இந்த இருதலங்களையும் இணைத்து அவர்கள் பைத்துல் முகத்தஸ் என்று அழைப்பார்கள்.

ஆனால் பாலஸ்தீன் என்று குறிப்பிடும் போதெல்லாம் அடையாளத்துக்கு Dome of the Rock, படத்தை மட்டுமே தொடர்ந்து ஊடகங்கள் வெளியிட்டு வருவது வழக்கமாகிவிட்டது. ஆகவே, Dome of the Rock, தான் முஸ்லிம்களினுடையது; அல்அஸ்கா மசூதி இருக்குமிடம், முன்னாளில் இடிக்கப்பட்ட யூத தேவாலயம் என்று யூதர்கள் கூறிவருகிறார்கள்.

இஸ்ரேல் – பாலஸ்தீன் பிரச்சினையின் ஆணிவேர் இதுதான். கோயில் இருந்த இடம் இடிக்கப்பட்டு மசூதிகள் கட்டப்பட்டது.

உலகெங்கும் பல இடங்களில் – பல்வேறு காலகட்டங்களில் நடைபெற்ற சம்பவம்தான். பாலஸ்தீன் அல்அக்ஸா மசூதி விஷயத்தில் அப்படித்தான் நடந்ததா என்பதுதான் இங்கே பிரச்சினை. மிகவும் விரிவாகவும் விளக்கமாகவும் ஆராய்ச்சி பூர்வமாகவும் அணுகவேண்டிய இந்த விஷயத்தைப் பின்னால் பார்க்கப் போகிறோம். இப்போது முகம்மது நபி திரும்பிவந்த கதையை நிறைவு செய்துவிடலாம்.

ஜெருசலேம் குன்றின்மீது வந்து இறங்கி இளைப்பாறிய பிறகு, முகம்மதுவை மீண்டும் மெக்காவுக்கே கொண்டுவந்து கிளம்பிய இடத்திலேயே இறங்கி விட்டுப் போய்விட்டார் ஜிப்ரீல்.

மெக்காவிலிருந்து ஜெருசலேத்துக்குப் பயணம் மேற்கொண்டு, அங்கிருந்து வானுலகம் சென்று, திரும்பவும் ஜெருசலேம் வந்து, அங்கிருந்து மெக்காவிலுள்ள க' அபாவை அவர் அடைந்த போது இன்னும் பொழுது விடிந்திருக்கவில்லை.

விடிந்ததும் புறப்பட்டுத் தன் ஒன்றுவிட்ட சகோதரி ஒருவரின் வீட்டுக்குச் சென்ற முகம்மது முந்தைய இரவு நடந்ததை அப்படியே விரிவாக அவரிடம் சொன்னார். இந்தச் சம்பவத்தை நான் மக்களிடம் கூறப்போகிறேன் என்றும் சொன்னார்.

சாதாரண மனிதர்கள் நம்பக் கூடிய விஷயமா இது! அன்றைக்கு மெக்காவிலிருந்து புறப்பட்டு ஜெருசலேம் செல்வதென்றால் குறைந்த பட்சம் ஒருமாத காலம் ஆகும். மாலைத் தொழுகையை மெக்காவில் முடித்துவிட்டு இரவுத் தொழுகைக்கு ஜெருசலேத்தில் நிகழ்த்திவிட்டுத் திரும்பியதாக முகம்மது சொன்னால் யார் நம்புவார்கள்?

ஆனால் முகம்மது இதைப் பற்றியெல்லாம் சிந்திக்கிறவர் அல்லர். தமக்கு நேர்ந்ததை வார்த்தை மாற்றாமல் அப்படியேதான் சொன்னார். அவரது ஒன்றுவிட்ட சகோதரி அதை நம்பினாரா என்று தெரியவில்லை. ஆனால் குறைஷிகள் கை கொட்டி நகைக்கவும் கேலிபேசவும் இது ஒரு நல்ல காரணமாகிப் போய்விட்டது. முகம்மதுவை ஒரு பைத்தியக்காரர் என்றே அவர்கள் திட்டவட்டமாக முடிவுகட்டி, ஊரெங்கும் பிரசாரம் செய்ய ஆரம்பித்தார்கள்.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு மெக்காவில் தொடர்ந்து வசிப்பது முகம்மதுவுக்கு மிகப் பெரிய பிரச்சினையாகிப்போனது. நிச்சயமாகக் குறைஷிகள் முஸ்லிம்களை நிம்மதியாக வாழவிடமாட்டார்கள் என்பது தெரிந்துவிட்டது.

(தொடரும்...)

# வெள்ளை மாளிகையின் விருந்து!

**அமெரிக்க** வெள்ளை மாளிகை விருந்து எப்படி இருக்கும் என்று பார்க்க ஆர்வமா? இதோ, இப்படித்தான் இருக்கும். அண்மையில் அங்கு நடைபெற்றது விருந்தில் எடுக்கப் பட்ட புகைப்படங்களில் சிலவற்றை தருகிறோம்.

முதல் பெண்மணி மிச்சேல் ஒபாமாவால் வழங்கப்பட்ட, கிட்ஸ் ஸ்டேட் டின்னர் இது. மொத்தம் 54 குழந்தைகள் விருந்தினராக அழைக்கப்பட்ட விருந்தில், ஜனாதிபதி ஒபாமாவும் கலந்துகொண்டார்.

அதென்ன 54 பேர் என்ற கணக்கு?

நம்ம புரட்சித் தலைவி செய்வது போல ஏதாவது எண் ஜோதிட விவகாரமா? இதிலெல்லாம் வெள்ளை மாளிகையும் நம்பிக்கை வைத்திருக்கிறதா?

இல்லீங்க, இது வேறு விவகாரம். அமெரிக்காவின் அனைத்து மாநிலங்களுக்கும் பிரதிநிதியாக ஒருவர் வீதம், மூன்று டெரி ரோரிகளுக்கும் ஒருவர் வீதம், பிளஸ் கொலம்பியா மாவட்டத்துக்கு ஒருவர் என, மொத்தம் 54 குழந்தைகள் அழைக்கப்பட்டிருந்தனர்.

இதோ விருந்தின் முதலாவது போட்டோவை பார்த்துவிட்டு, அடுத்த போட்டோவுக்கு செல்லுங்கள்.



சரி. இந்த 54 குழந்தைகளையும் எப்படி தேர்ந்தெடுத்தார்கள்? அமைச்சர் சிபார்சா? கட்சி மாவட்ட செயலாளர் களின் வாரிசுகளா? அல்லது, இளைஞர் (!) அணி தலைவரின் பேரக் குழந்தைகளா?

அந்த நடைமுறையெல்லாம் அமெரிக்காவுக்கு வர ரொம்ப நாளாகும். அமெரிக்க அரசு அனைத்து பாடசாலைகளிலும் ஒரு போட்டி நடத்தியது. 8 முதல் 12 வயதான குழந்தைகள் கலந்து கொண்ட போட்டியில், ஆரோக்கியமான, மலிவான, ஊட்டச்சத்துக்கள் உள்ள, சுவைமிக்க உணவு செய்முறைகளை கொடுத்து வெற்றி பெற்ற குழந்தைகளே வெள்ளை மாளிகை விருந்துக்கு அழைக்கப்பட்டனர்.



மேசையில் வைக்கப்பட்டுள்ளவை தான் வெற்றிபெற்ற ரெசிப்பிகள் அடங்கிய புத்தகம். விவசாயத்துறையால் பரிந்துரைக்கப்பட்ட ஊட்டச்சத்து சதவீதம் இந்த செய்முறைகளில் இருக்கவேண்டும் என்பது போட்டிக்கான முக்கிய நிபந்தனை! அப்படியானால், விருந்தில் பரிமாறப்பட்ட உணவும் அப்படித்தான் இருக்க வேண்டும் அல்லவா.. அடுத்த போட்டோவுக்கு வாருங்கள் என்ன கொடுத்தார்கள் என்று பார்க்கலாம்.

A quinoa, black bean and corn salad dish. விருந்து துவங்கியபோது பரிமாறப்பட்ட சாலட் இது. பார்ப்பதற்கு நிஜமாகவே நன்றாக இருக்கிறது. பிளாக் பீன் மற்றும் சோளம் கலந்த சாலட்டுக்கு என்ன டிரெஸ்ஸிங் கொடுத்தார்கள் தெரியவில்லையே! இந்த வகை சாலட்டுக்கு Classic Ranch Salad Dressing கொடுத்திருந்தால் அட்டகாசமாக இருந்திருக்கும்! விருந்துக்கு குழந்தைகளுடன் வந்திருந்தவர்கள் இந்த போட்டோவில் உள்ளார்கள்.





வெள்ளை மாளிகை விருந்துகளுக்கு அழைப்பிதழ் போகும்போது, dress code (என்ன வகை உடுப்புகள் அணிய வேண்டும் என்ற அறிவுறுத்தல்) பற்றியும் அழைப்பிதழில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்பது உங்களுக்கு தெரியுமா? விருந்துக்கு வந்திருப் பவர்களின் உடுப்புகள் கவனியுங்கள்.

ஜனாதிபதி ஒபாமா ஒவ்வொரு மேசையாக சென்று, விருந்தினர்களுடன் பேசினார். இடவசதி குறைவு என்பதால், யாரும் தடாலென்று காலில் விழவில்லை.



# பதின்மூன்றாவது திருத்தம் பாதுகாக்கப்பட வேண்டும்



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் கடந்த வாரம் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற கூட்டம் இலங்கை அரசியலில் மிகவும் முக்கியமான நிகழ்வாக அமைந்தது.

இலங்கையில் இன்னும் கனன்று கொண்டிருக்கும் பிரச்சினையாக இருப்பது இனப்பிரச்சினையாகும். தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு கௌரவமானதும், இலங்கையின் பௌதீகம், அரசியல் ஏற்பாட்டுக்கு அமைவானதுமான தீர்வொன்று காணப்பட வேண்டுமாக இருந்தால் அதற்கு ஒரே வழி இலங்கை – இந்திய ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இலங்கை மக்களுக்கு வரமாக உருவாக்கம் பெற்ற 13ஆவது திருத்தச்சட்டமாகும். இதனூடான மாகாண சபை முறைமையை அதிகாரப் பகிர்வுக்கான மையமாக்கி அமுல்படுத்துவதனூடாகவே இனப்பிரச்சினைக்கு தீர்வைக்காண முடியும்.

இந்த வலியுறுத்தலை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 1990ஆம் ஆண்டுகளிலிருந்து மிகவும் உறுதியோடு செய்துவருகின்றார்.

ஜனாதிபதி பிரேமதாச, ஜனாதிபதி டிங்கிரி பண்டா, ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்கா, பிரதமர் ரணில் விக்கரமசிங்க, ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ எனத் தொடர்ச்சியாக அத்தனை பேரிடமும் தனது அரசியல் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி வருவதோடு இனப்பிரச்சினைக்கு இதுவே நடைமுறைச் சாத்தியமான வழி என்றும், மூன்று கட்டங்களாக நடைமுறைப்படுத்துவதன் ஊடாக தீர்வைக் காணலாம் என்று கூறி வருகின்றார்.

அதேபோல் அவர் சந்திக்கும் முக்கியமான வெளிநாட்டுப்பிரதிநிதிகளிடமும் தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி வந்திருக்கின்றார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு முயற்சி செய்யும்போது, புலிகள் மாகாண சபை முறைமையை ஆரம்பத்திலிருந்தே எதிர்த்தார்கள். அதில் ஈடுபாடு காட்டியவர்களை தனிநாட்டுக்கு எதிரானவர்கள், துரோகிகள் என்று படுகொலை செய்தார்கள். வேறு தமிழ் கட்சிகள் புலிகளுக்குப் பயந்து அல்லது பாசாங்கு அரசியலை விரும்பி 13ஆவது திருத்தச் சட்டத்தில் ஒன்றுமில்லை, தமிழ் மக்களுக்கு மாகாணசபை முறை என்பது ஒருபோதும் தீர்வாக இருக்கமுடியாது. 13ஆவது திருத்தச்சட்டத்தைக் கொண்டு எதையும் செய்யமுடியாது. மாகாண சபைகளுக்கு அதிகாரம் ஒன்றுமில்லை. அது உழுத்துப்போனது என்று கூறியது மட்டுமல்லாமல் மேலும் ஒரு கோவணக் குட்டிக்கரணம் பாய்ந்து, புலிகள் பெற்றுத் தரப்போவதே தமிழ் மக்களுக்கு அதி உச்சபட்ச தீர்வாக இருக்கும் புலிகள் ஏற்காத எந்தத் தீர்வும் தமிழ் மக்களுக்கு ஏற்புடைய தீர்வாக இருக்காது என்றும் கூறினார்கள்.

இறுதியில் 13ஆவது திருத்தச் சட்டம் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தித் தந்த வடக்கு – கிழக்கு இணைந்த தனி மாகாணம் என்ற தமிழ் மக்களின் வலிமையான கோரிக்கை சட்டத்தின் துணையோடு சிதறடிக் கப்பட்டு, வடக்கும் கிழக்கும் இரண்டாக பிரிக்கப்பட்டபோது குய்யோ முறையோ என்று கத்தினார்கள். வடக்கு கிழக்கைப் பிரித்துவிட்டார்கள். ஆனாலும் புலிகள் நடத்தும் ஆயுதப் போராட்டம் மீண்டும் வடக்கையும் கிழக்கையும் இணைத்து வைக் கும். அந்த நாள் வெகு தொலைவில் இல்லை தமிழா பொங்கி எழு இலக்கு தொலைவில் இல்லை. தலைவர் ஆணையிடுவார். ஆமிக் காரன் வீரத்தமிழரின் காலில் விழுவான் என்றெல்லாம் மெய் கூச்செறியும்படி இதே தமிழ்க் கட்சிகள் கூறினார்கள்.

பிரபாகரனை யோசிக்கவிடாமல் உசுப்பேற்றி பிடரி பிளக்கப்படும்வரை பிரபாகரனை நம்பச்செய்து முடிவு கட்டியவர்களும் இந்த தமிழ் கூட்டமைப் பினர்தான். பிரபாகரனின் கதை முடிந்த பிறகுதான், தப்பியது தமது தலையென்று ஆறுதலடைந்தார்கள். இதுதான் பிரபாகரனுக்கு இவர்கள் செய்த நன்றிக்கடன் அல்லது பழிவாங்கல்.

பின்னர் என்ன நடந்தது என்பதையும் இப்போது தமிழ் கூட்டமைப்பினர் என்ன செய்து கொண்டிருக்கின்றார்கள் என்பதையும் உலகமறியும். இணைந்த வடக்கு – கிழக்கை மறந்தவர்களாக இப்போது வடக்குக்கான தேர்தலையாவது நடத்துங்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

இவர்கள் வேண்டாமென்று சொன்னவரை அமைதியாக இருந்த பேரினவாதிகள் இப்போது வடக்குக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தக்கூடாது, மாகாண சபை முறைமையையே இல்லாமல் செய்யவேண்டும். 13ஆவது திருத்தம் இலங்கைக்கு ஆபத்தானது, என்றெல்லாம் கூறத்தொடங்கியிருக்கின்றார்கள்.

13ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிரான ஒரு அணியை உருவாக்குவதிலும் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர். அரசாங்கத்தில் இருந்துகொண்டு இவ்வாறு ஒரு அணியினர் இன ஐக்கியத்தை சிதைக்கும் முயற்சியில் ஈடுபட்டுவருகின்றனர்.

இலங்கையில் ஆயுத வன்முறை முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் பேரினவாதம் திமிரோடு கையுயர்த்தி நிற்கும் இன்றைய மோசமான சூழலில் இலங்கையில் வாழும் சிறுபான்மை மக்களின் அரசியல் மற்றும் மதச் சுதந்திரம் ஆகியன மறுக்கப்படுகின்ற நிலைமை தோற்றமடைந்துள்ளது என்று கணிப்பீடுகள் கூறப்படுகின்றன.

இந்தப் பின்னணியிலேயே 13ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கவேண்டும் என்றும் மாகாண சபை முறையை ஒழிக்கவேண்டும் என்றும் கோஷங்களும் கோரிக்கைகளும் மேலெழுந்து வருகின்றன. ஆகையால் இதற்கு எதிராக குரல் கொடுப்பதும், தடுக்கமுற்படுவதும் எந்தளவுக்கு

**அலசுவது - மதியூகி**

வெற்றியளிக்கும் என்ற கேள்விகள் இல்லாமலில்லை.

ஆனாலும் அதிர்ஷ்டவசமாக பேரின வாதிகளின் நோக்கங்களுக்கு எதிராகவும், 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாகவும் ஆளும் அரச கூட்டணிக்குள்ளேயே பலமான ஆதரவுகளும் இருக்கின்றன.

அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, ரவூப் ஹக்கீம், வாசுதேவ நாணயக்கார, டீயு குணசேகர, டிலான் பெரேரா, திஸ்ஸ விதாரண போன்றவர்கள் மாகாண சபை முறைமை யானது இலங்கையில் வாழும் அனைத்து மக்களுக்கும் கௌரவமான அரசியல் தீர்வைக்காண அவசியமானது என்பதையும், 13ஆவது திருத்தச் சட்டம் பாதுகாக்கப்பட்டு முழுமையாக அமுல் படுத்தப்படுவது அவசியம் என்றும் நம்புகின்றவர்கள்.

இருந்தாலும் இந்த அமைச்சர்களை ஒரு மேசையில் இருக்கச் செய்து இவர்களுக் கிடையே இருக்கும் ஒத்த கருத்தையும் அதிலிருக்கும் நியாயத்தையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கவனத்துக்கு எடுத்துச் செல்வதனூடாக நாட்டில் மூவின மக்களும் கௌரவமாகவும், அரசியல் அபிலாஷைகளுடனும் வாழுகின்ற சூழலை தோற்றுவிக்க முடியுமென்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நம்பியதோடு அதற்கான முயற்சிலும் ஈடுபட்டார்.

இதன் பலனாகவே டிசம்பர் 06ஆம் திகதி பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தவின் ஏற்பாட்டில் கூடி ஆராய்ந்தனர். அமைச்சர் கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் கூடி ஆராய்ந்த இக்கூட்டத்தில், 13ஆவது திருத்தச்சட்டத்தை வலுப்படுத்துவதன் அவசியம் குறித்து வலியுறுத்தி அமைச்சர் களும், எம்.பிக்களும் கையொப்பம் இட்டு மகஜர் ஒன்றினை ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

இந்த முயற்சியில் கருத்தொருமைப் பாடுடைய ஏனையோரையும் இணைத்துக் கொண்டு இம்முயற்சியை முன்னெடுத்துச் செல்வதென்றும் அந்தக் கூட்டத்தில் முடிவு செய்துள்ளதானது பயன்மிக்கதொரு அரசியல் நகர்வாக பார்க்கப்படுகின்றது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் இந்த முயற்சி வெற்றி பெறும்போது 13ஆவது திருத்தச் சட்டம் பாதுகாக்கப்படுவதோடு, மாகாண சபை முறைமையூடாக தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு தீர்வாகவும் அது அமையும். இல்லாவிட்டால், இருக்கின்ற வாய்ப்பை தவறவிட்டு இனங் களுக்கிடையே நம்பிக்கை சிதைந்து போகும், ஐக்கிய வாழ் வென்பது வெறும் கனவாகவே இருக்கும்.

இதை கூட்டமைப்பினர் மட்டுமல்ல பேரினவாதத்தைத் தூக்கிப்பிடிப்பவர்களும், முக்கியமாக தமிழ் மக்களும் புரிந்து கொள்ளவேண்டும். ●

# வன்னியில் சமூக விரோதிகள்

**வன்னியிலிருந்து... - அத்திமுகத்தோன்.**

நாட்டில் இயல்பு வாழ்வினைச் சீரழிப்பதன் மூலம் சுயஇலாபம் தேடும் அரசியல்வாதிகள் ஒருபுறம். சமூக கலாசாரத்தினை சீரழிப்பதன் ஊடாக குறுகிய அற்ப இலாபம் தேடும் ஒரு குழுவினர் மறுபுறம். இவை இரண்டிற்கு மிடையே பொறியில் அகப்பட்ட எலியாக, அச்சமும் பீதியும் மேலோங்க நகருகிறது பாதிக் கப்பட்ட மக்களின் அன்றாட வாழ்வு.

முப்பது வருடகால அவலத் தையும் அந்தரிப்புக்களையும் சுமந்த மக்கள் அரசு போரை முடிவுக்குக்கொண்டு வந்து விட்டதான அறிவிப்பிற்குப் பின்பும் அவர்கள் இயல்பு வாழ்க்கை வாழமுடியாத சில சூழ்நிலைகளை ஏற்படுத்து வதற்கு சில சக்திகள் மும் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றன.

மக்களின் இயல்பு வாழ்வு குழம்புவதன் ஊடாக, மீண்டும் இந்நாட்டில் ஒரு அசாதாரண சூழ்நிலைகளைத் தோற்று வித்து, அதன்மூலம் தங்களின் இலக்குகளை அடைய முடியும் என்ற எண்ணப்பாட்டுடன் சில அரங்கேற்றங்கள் அவ்வப்போது ஆங்காங்கே நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.

இதற்கு கடந்த 3 ஆம் திகதி திங்கட்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முள்ளியவளை - மாமூலையில் நடைபெற்ற ஒரு கொள்ளைச் சம்பவம் சான்று பகர்கின்றது.

மக்களின் இயல்புநிலையைக் குழப்புவதற்கு இப்படியான சம்பவங்கள் ஏற்கனவே பல இடங்களில் நடைபெற்றுள்ளன. ஆயினும், அதன் 'சூடு' சற்றுத் தனிந்திருந்த நிலையில், மீண்டும் அதுவும் வன்னிப் பிரதேசத்தில் இறுதியாக மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பகுதியில் அரங்கேறியிருக்கின்றது.

போரியல் வாழ்வில் பல இன்னல்களைச் சந்தித்துவிட்டு, எப்பொழுது தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவோம்? எப்பொழுது எமது வாழ்க்கையை மீளப் புதுப்பித்துக் கொள்வோம்... என்ற எண்ணப்பாங்குடன் வந்து மீள்குடியேறிய மக்களுக்கு, இப் பொழுது சமூக விரோதிகளினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களும், அதை எதிர்த்துப் போராட வேண்டிய தவிர்க்க இயலாத நிலைமைகளும் ஏற்பட்டிருக் கின்றது.

இறுதியாக மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பகுதிகளில் எதுவித 'செழிப்பு மற்ற' தோற்றப்பாடுகளுடன் வாழ்ந்துவரும் இம்மக்களிடத் தில், தற்போது எஞ்சியிருப்பது அவர்களுக்கான எதிர்கால நம்பிக்கை ஒன்றேயொழிய, மேலதிகமான வசதிவாய்ப்புகள் எதுவுமில்லை.

> **இந்தச் சமூகவிரோதிகள் யார்? இவர்கள் இச் செயற் பாடுகள்மூலம் பெற்றுக் கொள்ளும் நன்மை என்ன? இவர்கள் தனி நபர் குழுக்களா? அன்றி இவர் களை இயக்குவதற்கென்றே இவர்களின் பின்னால் ஏதாவது ஒரு 'பலமான கரம்' ஓங்கியிருந்து செயற்படு கிறதா? இவர்களுக்கான ஆயுதங்கள் எப்படிக் கிடைக் கின்றன? இவர்கள் பயன் படுத்தும் வாகனங்கள் யாருடைய பெயரின் உரிமத்தில் உள்ளன..?**

தற்காலிக தரப்பாள் மற்றும் தகர வீடுகளோடு, சுத்தமான குடிநீர், மலசலகூட வசதி, மின் சாரத் தேவைகள், அடிப்படை வசதிகள் எதுவுமற்றவர்களாய்... மீண்டும் வாழ்வியலில் எதிர்ப் படும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலையில், தற்போது சில சமூகவிரோதி களின் செயற்பாடுகளுக்கும், அதன் நிமிர்த்தம் ஏற்படும் பின் விளைவுகளுக்கும் ஆட்பட்டுப் போகின்றார்கள்.

இதன்விளைவாக அவர்கள் மேலும் உளத்தாக்கத்திற்கு உள்ளாவதோடு, சட்டம், ஒழுங்கு, பொலிஸ் மீதான அவநம்பிக்கை அவர்களிடத்தில் வலுவாக வேரூன்றச் செய்துவிடுகிறது. சட்டமும் ஒழுங்கும் சரியான முறையில் தனது கடமையை 'இறுக்கமாக'ச் செயற்படுத்துமாக இருந்தால், இப்படியான சமூக விரோதிகளின் செயற்பாடுகள் வலுவிழந்துபோகும்... என்பதே சம்பவம் நடைபெற்ற இடத்திலி ருந்து மேலதிகமாகக் கிளம்பிய கருத்துக்களும் விமர்சனங்களு மாகும்.

அத்தோடு, வன்னிப் பெருநிலப் பரப்பில் உள்ள சில பிரதேசங் களில் ஒரு ஏக்கர் (16 பரப்பு), ஒண்டரை ஏக்கர் இடைவெளி வித்தியாசத்தில் சில குடிமனை கள் இருப்பதுகூட, சமூகவிரோதி களின் செயற்பாடுகளுக்கு வாய்ப் பானதாகவே அமைகின்றன. மக்கள் கூட்டம் நெருக்கமற்ற இடமாகையால், அவசர தேவைகளுக்கும், அவலமான நிகழ்வுகளுக்கும் உதவி ஒத்தாசைகள் உடனே கிடைப்பது அரிதாகிறது. இதுவே சமூகவிரோதி களுக்கு வாய்ப்பாகிறது என்பது ஒரு முக்கியமான காரணியாகிறது.

இப்படியான செயற்பாடுகள் போர் முடிவடைந்த பின்னரான காலத்தில் யாழ்.குடாநாட்டிலும் இடம்பெற்றபோது. மக்கள் மத்தியில் ஓர் அச்சநிலை உரு வாகியிருந்தது. சில ஊடகங் கள் இராணுவம்மீது பழிகளைச் சுமத்தின. இராணுவமும் தடுப் பிலிருந்து வந்த சில நபர்களும் சேர்ந்து அதைச் செய்வதாகத் தெரிவித்தன. அதன்பின் அதே போன்ற நிகழ்வுகள் தொடர்ந்து இடம்பெறத் தொடங்கியதை அடுத்து, பொலிஸ் துறையின ரின் சில இறுக்கமான நடை முறைகள் மூலம், அச்செயற் பாடுகள் கட்டுப்பாட்டுக்கள் கொண்டுவரப்பட்டன. தற் போது குடாநாட்டில் இச்செயற் பாடுகள் சற்றுத் தளர்வடைந்த நிலையில், வன்னியில் அரங் கேறியிருப்பது குறித்து பலரை யும் சிந்திக்க வைத்துள்ளது.

(22 ஆம் பக்கம் பார்க்க...)

# கலாசார யுத்தம் திணிக்கப்படுகிறதா?

> **பாலியல் தொழிலும், பாலியல் துஷ்பிரயோகமும் அனைத்து மதங்களினாலும் தடுக்கப்பட்ட ஒரு விடயமாகும். அத்துடன் பெண்களை இழிவுபடுத்தி, பெண்களினது கண்ணியத்தையும், கௌரவத்தையும் சீர்குலைக்கும் ஒரு சமூகச்சீர்கேடாகும்.**
>
> **வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டவர்களுக்கும் பாதிக்கப்பட்ட பெண்களுக்கும் சுயகௌரவத்துடன் வருமானம் ஈட்டக் கூடிய சிறந்த வாழ்வாதாரங்களுக்கு வழி வகுத்து, அதற்கான பயிற்சிகளை வழங்கி அவர்களின் கௌரவமான, கண்ணியமான வாழ்வுக்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும். இதுதான் சமூகத்தின் சகல தரப்பாரினதும் கடமையும் பொறுப்புமாகும்.**

(சென்றவாரத் தொடர்ச்சி...)

**ஆயுத** வன்முறைகளால் அழித்தொழிக்கப்பட்ட நமது உயிர்கள், உடைமைகள், பொருளாதாரம் எல்லாம் அப்படியே இருக்க இலங்கைக்கு உல்லாசப் பயணிகளாக வரும் வெளிநாட்டாரை எப்படிக் கிளுகிளுப்பு உண்டாக்கலாம் என்று சதாவும் சிந்தித்து அதற்குத் தீர்வாக நம் நாட்டுப்பெண்களின் உடல்களைத் தீனியாகக் கொடுத்து வெளிநாட்டாரின் காமக்கிளர்ச்சிக்கு களிப்பூட்ட எடுக்கும் முயற்சி எவ்வளவு தகும் என்று பாருங்கள்.

பனிபடர்ந்த நாடுகளிலிருந்து வரும் வெளிநாட்டார் இங்கு வந்து சூரியக் குளியல் காய்ந்துவிட்டு மனோரம்யமான இயற்கையையும் ரசித்து பணத்தைச் (டொலர்களை) செலவளித்து விட்டு சும்மா செல்லவிடக் கூடாது, அவர்களது காமக் கிளர்ச்சிக்குக் கதகதப்பூட்டவும் வேண்டும். அதற்காக ஆய்வு செய்து உருவான ஐடியாத்தான் ஆய்வாளரும் பெண் உரிமைச் செயற்பாட்டாளருமான? ஸர்மிலா ஸெய்யித் எனும் அம்மணிக்கு உதித்திருந்தது.

இலங்கையிலுள்ள ஸர்மிலா போன்ற செயற்பாட்டாளர்களுக்கு எவ்வளவு பரந்த மனம் என்பதை அறிந்து வெளிநாட்டாரே புல்லரித்துப் போவார்கள். இந்த பொன்னான யோசனைக்குப் பிரதியுபகாரமாக பின்னாட்களில் சர்வதேச விருதுகளும், பனிபடர்ந்த நாடுகளில் குடியுரிமையும் கூடக் கிடைக்கலாம். குடும்பத்தினருடன் சென்று குடியேறவும் வாய்ப்பளிக்கப்படலாம்.

ஆனால் எந்தப் பெண்களைக் காட்டித் தாங்கள் பெண் உரிமைச் செயற்பாட்டாளர்கள் என்று பிரபல்யம் அடைந்தார்களோ அந்தப் பெண்கள் இந்த நாட்டிலே எயிட்ஸ் நோயாலும் போகப் பொருளாகவும் ஆத்ம பலமில்லாத ஜடமாகவும் அவமானங்களைச் சுமந்துகொண்டு நடமாடித் திரிவார்கள்.

பாலியல் தொழிலை சட்டபூர்வமாக்கல், சுற்றுலாத்துறைக்கு நல்லது. ஆனால் பெண்களுக்கு ?....... என்ற கேள்வியோடுதான் பிபிசி தமிழோசை அந்தச் செய்தியை வெளியிட்டிருந்தது.

இதற்கான பதிலை இங்கே நிறுவனங்களும் தனிப்பட்டவர்களும் தந்து கொண்டிருக்கின்றார்கள்.

விபச்சார விடுதிகளை அங்கீகரிப்பது இஸ்லாத்தை நிராகரிப்பதற்கு நிகரானது! அலிஸாஹிர் மௌலானா கண்டனம் !

"எழுத்தாளர், ஆய்வாளர், தான் ஒரு பெண் சமூகத்தின் குரல் என்பதற்கெல்லாம் முன்னால் தான் முதலில் இஸ்லாத்தைப் பின்பற்றும் ஒரு முஸ்லிம் என்ற தளத்திலிருந்து கொண்டு எதனையும் சிந்தித்துச் சொல்லியிருக்க வேண்டும், அதன்படி செயற்பட்டிருக்கவும் வேண்டும். இஸ்லாம் எதனை (ஹறாம்) விலக்கப்பட்டது எனத் தடுத்திருக்கின்றதோ அதற்கு மாற்றுத் தீர்வாக மனித அறிவுக்கு எட்டிய கருத்துக்களை முன்வைக்க முடியாது."

இவ்வாறு பாலியல் தொழிலை அங்கீகரிக்க வேண்டும் என்று ஏறாவூரைச் சேர்ந்த ஸர்மிலா ஸெய்யித் பி.பி.சி தமிழோசைக்கு அளித்த பேட்டி தொடர்பான கண்டனத்தில் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் பிரதம மந்திரியின் ஆலோசகருமான தற்போதைய ஏறாவூர் நகர பிதாவுமான... அலிஸா ஹிர் மௌலானா தெரிவித்துள்ளார்.

அவர் அந்தக் கண்டனத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இஸ்லாம் முஸ்லிம் என்ற தளத்திலிருந்து கொண்டு புனித சட்டநூலான அல்குர்ஆன் மற்றும் அதன் வழிகாட்டி ஹதீஸ் சரீ அத் சட்டம் அடிப்படையில் ஹறாம் என்பது திட்டவட்டமாக தடுக்கப்பட்டதுதான் என்பதைத் தெளிவாகச் சொல்லவேண்டும்.

இந்தப் பேட்டியினூடாக இஸ்லாம் தடுத்திருக்கின்ற விடயங்களை வலியுறுத்தி இருக்கலாம். அதற்கு நல்ல வாய்ப்பிருந்தது! பெண்களின் மகிமையை மேம்படுத்துவதற்கான சட்டங்களைக் கொண்டு வரவேண்டும் என்று வலியுறுத்துவதற்குப் பதிலாக பெண்களை இழிவுபடுத்திப் பார்த்து, பின்னர் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்கவேண்டும் என்று குரல் கொடுப்பது கேவலமானது.

இப்படிப்பட்ட விடயங்கள் மானுட நேயங்களை எள்ளி நகையாடும் சில மேற்குலக நாடுகளுக்குப் பொருத்தமாக இருக்கலாம். ஆனால், நமது உயர் விழுமிய கலாசாரப் பண்பாடுகளுக்குப் பொருந்தாது.

குறிப்பிட்ட பேட்டி அது ஊருக்கும், இலங்கை முஸ்லிம்களுக்கும் இலங்கை நாட்டின் எல்லா சமூகங்களுக்கும் அவமானமாகவேதான் அமைந்துவிட்டது.

சிறுவர் துஷ்பிரயோகத்தையும் பெண்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகத்தையும் தடுப்பதற்கு நமது நாட்டில் கடுமையான சட்டங்கள் இருக்கின்றன.

பாலியல் தொழிலை அங்கீகரிப்பதன் மூலம் சுற்றுலாத்துறை வளர்ச்சி கண்டு பொருளாதார முன்னேற்றம் ஏற்படும் என்று கூறுவது சேலையை விற்று மானத்தை வாங்குவோம் என்பதற்கு ஒப்பான முட்டாள்த்தனமான கூற்று.

அதிபிரசங்கித்தனம் கூடாது. மார்க்க விசயங்களில் மற்றவர்களை நாம் பிழையான வழிநடத்தல்களுக்கு இட்டுச்செல்ல முடியாது. இஸ்லாம் கோணலற்ற தெளிவான வழியைக் காட்டுகின்ற மார்க்கம்." அலிஸாஹிர் மௌலானா தனது கண்டன அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

ஏறாவூர் பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தின் கண்டன அறிக்கை!

"விபச்சாரத்தை நாடுவதோ விபச்சாரம் இடம்பெறுவதை அங்கீகரிப்பதோ இஸ்லாத்தில் தெளிவான, தீர்க்கமான சட்டத்தின் அடிப்படையில் மார்க்கத்தில் தடுக்கப்பட்ட விடயமாகும். இதுகுறித்து முஸ்லிம் சமூகத்தைச் சார்ந்த ஸர்மிலா ஸெய்யித் என்பவரால் பிபிசி தமிழோசைக்கு வழங்கப்பட்ட பேட்டியை ஏறாவூர் பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

விபச்சாரம் என்பது இஸ்லாத்தில் மாத்திரம் அல்லாது இலங்கையர்களால் பின்பற்றப்படும் பௌத்த ஹிந்து கிறிஸ்தவ மதங்களாலும் வெறுக்கப்படும் ஒரு விடயமாகும்.

இலங்கையில் உருவாக்கப்படும் சட்டங்கள் யாவும் இலங்கையில் காணப்படும் மத நம்பிக்கைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் அமைவானதாக இயற்றப்படல் வேண்டும். மத ஒதுக்கல் கொள்கையின் அடிப்படையில் கட்டி எழுப்பப்பட்டுள்ள மேற்கத்தேய சமூகக் கட்டமைப்புகளையும் சிந்தனைகளையும் கண்மூடித்தனமாகப் பின்பற்றும் வகையில் இலங்கையிலும் விபச்சாரத்தை சட்டரீதியாக்க வேண்டும் என்ற கருத்தினடிப்படையில் அமைந்த மேற்படி ஸர்மிலா ஸெய்யிதின் பேட்டியை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இது தொடர்பாக ஸர்மிலா ஸெய்யித் என்ன பின்புலத்தில் செயற்பட்டார் என்ற விபரத்தை அவரிடமிருந்து பெறுவதற்கான முயற்சிகளில் ஏறாவூர் பள்ளிவாசல்கள். முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் ஈடுபட்டுள்ளது. என்று அதில் குறிப்பிடப் பட்டிருந்தது. முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் கண்டனம்.

"கண்ணியம், தன்னம்பிக்கை, சுய கௌரவம் என்பவற்றுடன் பெண்களை வலுவூட்டும் வகையில் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி, பல வருடங்களாகப் பணிபுரிந்து வருகின்றது.

அண்மையில் சர்மிளா ஸெய்யித் என்பவரால் வெளியிடப்பட்ட, இலங்கையில் பாலியல் தொழில் சட்டபூர்வமானதாக்கப்பட வேண்டுமென்ற அறிக்கையைக் கேட்டு எமது செயல் முன்னணி அதிர்ச்சி அடைவதுடன் அதனை வன்மையாகவும் கண்டிக்கின்றது.

பாலியல் தொழிலும், பாலியல் துஷ்பிரயோகமும் அனைத்து மதங்களினாலும் தடுக்கப்பட்ட ஒரு விடயமாகும். அத்துடன் பெண்களை இழிவுபடுத்தி, பெண்களினது கண்ணியத்தையும், கௌரவத்தையும் சீர்குலைக்கும் ஒரு சமூகச்சீர்கேடாகும்.

வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டவர்களுக்கும் பாதிக்கப்பட்ட பெண்களுக்கும் சுய கௌரவத்துடன் வருமானம் ஈட்டக்கூடிய சிறந்த வாழ்வாதாரங்களுக்கு வழி வகுத்து, அதற்கான பயிற்சிகளை வழங்கி அவர்களின் கௌரவமான, கண்ணியமான வாழ்வுக்கு ஏற்பாடு செய்துகொடுக்க வேண்டும். இது தான் சமூகத்தின் சகல தரப்பாரினதும் கடமையும் பொறுப்புமாகும்.

ஒரு பெண் சிறந்த தாயாகவும், மனைவியாகவும், ஒரு நாட்டின் கண்ணியம் மிக்க பிரஜை யாகவும் வாழ்வதை உறுதிப்படுத்துவது எமது தலையாய பொறுப்பாகும்." என்று அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

சமூக வலுவூட்டலுக்கான நிலையம் "ஸர்மிலா ஸெய்யித் பி.பி.சி தமிழோசைக்குத் தெரிவித்துள்ள கருத்துக்கள் ஒட்டுமொத்த முஸ்லிம் சமுதாயத்திற்கும் ஒரு தலைக் குனிவை ஏற்படுத்தியுள்ளது. இதனைத் தான் வன்மையாகக் கண்டிப்பதாக" நல்லிணக்கம் மற்றும் சமூக வலுவூட்டலுக்கான நிலையத்தின் பணிப்பாளரும் மரண விசாரணை அதிகாரியுமான அல்ஹாஜ் எம்.எஸ்.எம். நஸீர் விடுத்துள்ள கண்டனச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

பாலியல் தொழிலை சட்டபூர்வமாக்குவதற்குத்தான் ஆதரவு தெரிவிப்பதாக மேற்படி ஸர்மிலா ஸெய்யித் கூறியிருப்பது முஸ்லிம் சமூகம் நினைத்துப் பார்க்க முடியாத, இஸ்லாம் தடுத்திருக்கின்ற படுபாதகச் செயலைச் செய்யத் தூண்டுவதற்கு ஏதுவாக அமைந்துள்ளது.

இலங்கையில் மதுபோதை உட்பட சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் துஷ்பிரயோகம் என்பனவற்றை முற்றாக இல்லாதொழிப்பதற்கு அரசாங்கமும் சிவில் சமூக அமைப்புக்களும் சில அரச சார்பற்ற நிறுவனங்களும் இலக்கு நிர்ணயித்துச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற இவ்வேளையில் ஸர்மிலா ஸெய்யித் விபச்சார நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவித்து சர்வதேச ஊடகத்துக்குக் கருத்து வெளியிட்டிருப்பது முஸ்லிம் சமூகத்தின் சார்பில் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது.

(தொடரும்...)

---

வாகரை வாணி

# இளைய சமூகமும் தொலைபேசியும்

**இன்று** உலகில் தொலைபேசியின் சேவையானது அளப்பரியதாகும். இது தொலைவில் உள்ளவரையும் எமது அருகில் கொண்டு வந்து சேர்த்து விடுகின்றது. இத்தகைய தொலைபேசி வசதியில்லாத வீடுகளும் ஆட்களும் இல்லை என்றாகி விட்டது. பல நன்மைகளையும் வசதி வாய்ப்புக்களையும் அளித்துக்கொண்டிருக்கும் இத்தொலைபேசியானது வளர்ந்துவரும் எமது இளைய சமூகத்தினரை அதிகமாகவே பாதித்துள்ளது.

இவர்கள் தொலைபேசியினது முக்கியத்துவத்தை மறந்து அநாவசியமாக நேரத்தை வீண்விரயமாக்குகின்றார்கள். இதனால் தமது இலக்கைக் கூட மறந்து பின்னர் கவலைப் படுகிறார்கள். உணவு இல்லாமல் கூட இருந்துவிடுவார்கள். ஆனால் தொலைபேசியில்லாத வாழ்க்கையை நினைத்துப் பார்ப்பது முடியாத விடயமாக அவர்களுக்கு மாறிவிட்டிருக்கின்றது.

தொலைபேசியில் இணையத்தள பயன்பாட்டினை மேற்கொள்ளும் வசதி இருப்பது இவர்களது வயதுக்கு மேற்பட்ட விடயங்களை பார்வையிடுவதற்கு வசதியாக அமைந்துள்ளது. இதனால் தொலைபேசிப் பித்தர்களது வாழ்க்கைப் பாதையும் தவறான முறையில் செல்வதனை அவாதானிக்கக் கூடியதாக உள்ளது.

உதாரணமாக சிறுவயதுத் திருமணம் நிகழ்வதற்கும் அதேவேளை குடும்பப் பிளவுக்கும், இந்த நவீன தொலைபேசி வசதிகள் காரணமாக அமைந்துவிட்டிருக்கின்றன. இவ்வாறான செயற்பாட்டால் இவர்கள் மட்டுமல்ல சுற்றியுள்ளவர்களும்தான் பாதிப்படைகின்றார்கள். பொது இடங்களில் கூடத்தொலைபேசிக்கு ஓய்வு கொடுப்பதில்லை. வீண்வார்த்தை பேசி மிகவும் பலத்த குரலில் சிரிப்பார்கள். இது சுற்றியுள்ளவரை வெறுப்படைய செய்கின்றது.

இதனையெல்லாம் அவர்கள் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை. பாதையில் வாகனம் வருவதனைக்கூட அறியாதளவு தொலைபேசி பயன்படுத்துவதனை காணக்கூடியதாக உள்ளது. இதன் வாயிலாக அதிகளவான வீதி விபத்துக்கள் இடம்பெறுகின்றன. எமது இளைய சமூகத்தினரின் போக்கு இவ்வாறு மாற்றமடைந்து சென்று கொண்டிருப்பது ஒரு ஆக்கபூர்வமான வளர்ச்சியல்ல.



தொலைபேசி என்பது முக்கியமான ஒன்றுதான் இல்லையென்பதற்கு இல்லை. அதேவேளை அதனை உரிய முறையில் பயன்படுத்தினால் தான் அதன் பயனை நாம் பெற்றுக்கொள்ள முடியும். வளர்ந்துவரும் எமது இளைய சமூகத்தினருக்கு சிறந்ததை எடுத்துக்காட்ட வேண்டியது எமது பொறுப்பாகும். இதில் பெரும் பங்கு வகிப்பவர்கள் பெற்றோராகவும் ஆசிரியர்களாகவும் இருக்கவேண்டும்.

பெற்றோர் தமது பிள்ளையின் மீதுள்ள அளப்பரிய பாசத்தின் காரணமாக அவர்கள் ஆசைப்படுவதையெல்லாம் வாங்கிக் கொடுக்கின்றார்கள். இதில் பெரும்பாலும் தற்போதைய காலகட்டத்தில் அவர்கள் ஆசைப்படுவது தொலைபேசியாகத்தான் இருக்கின்றது. இதனால் இதன் முக்கியத்துவத்தை அவர்களுக்கு உணர்த்த வேண்டும். அவர்களுக்கு அத்தியாவசிய தேவையென்றால் இணைய பாவனையற்ற சாதாரண தொலைபேசி ஒன்றினை வாங்கிக்கொடுத்தல் மிகவும் நல்லதாகும். மேலும் இவர்களின் அறிவு திறனை மேம்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபடுத்தி அதன் வாயிலாக நல்லவழியில் செல்வதற்கு அவர்களுக்கு உதவுதல் வேண்டும். உதாரணமாக புத்தகம் வாசித்தல் போன்ற பழக்கவழக்கங்களை ஏற்படுத்தவேண்டும்.

இவ்வாறு தொலைபேசியில் வீணாக பொழுது போக்குவதனை தவிர்த்தோமேயானால் எமது இளைய சமூகத்தினரின் எதிர் காலத்தினை சிறந்த பாதையில் எம்மால் இட்டுச்செல்ல முடியும். இல்லையெனின் அவர்களின் வாழ்க்கை கேள்விக்குறியாக அமைந்து விடக்கூடும்.



# யார் இந்த ஜெசிக்கா?

**ஜெசிக்காவிற்கு** தற்போது வயது 26. அவர் ஒரு குழந்தைக்குத் தாயாகியுமிருக்கிறார். யார் இந்த ஜெசிக்கா? அவர் எப்படிப் பிரபலமானார்? அனைவரும் அறிந்திருக்க வேண்டிய தொன்று. 1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் 14ம் திகதி ரெக்சாஸ் மாநிலத்தின் மிட்லாண்ட் நகரில் குழந்தைகள் பராமரிப்பு நிலையத்தில் சக குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருந்த 18 மாதக் குழந்தை ஜெசிக்கா அங்கு கைவிடப்பட்டிருந்த குழாய்க் கிணறொன்றில் தவறி விழுந்து விட்டாள். 8அங்குல விட்டம் கொண்ட 20 அடி ஆழமானதுமான அந்தக் குழாய்க் கிணற்றில் விழுந்த அந்தக் குழந்தையைக் காப்பாற்றியது அமெரிக்கர்களின் சாதனையே!

பக்கோ இயந்திரம் மூலம் குழாய்க்கிணற்றுக்கு அருகில் தோண்ட முயற்சி செய்த போது கடினமான பாறை இடம் கொடுக்கவில்லை. காப்பாற்றும் படையினர் தீவிரமாகச் செயற்பட்டனர். ஜெசிக்கா சுவாசிப்பதற்கு குழாய்க் கிணற்றினுள்ளே ஒட்சிசன் செலுத்தப்பட்டது. ஜெசிக்காவின் குரலைக் கேட்பதற்காக ஒலிவாங்கி உள்ளே செலுத்தி ஜெசிக்காவுடன் பேச்சுக் கொடுத்தார்கள்.

விசேட ஜெற் விமானம் மூலம் எண்ணெய்க் கிணறுகள் தோண்டுவதில் மிகப் பிரபல்யம் பெற்ற பொறியியலாளர் அங்கு வரவழைக்கப்பட்டார். வோட்டர் ஜெற் எனப்படும் விசேட தொழில்நுட்பம் மூலம் அந்தக் குழாய்க் கிணற்றுக்கு அருகில் இன்னொரு 30 அங்குலம் அகலத்தில் 29 அடி ஆழத்திற்கு குழாய்க் கிணற்றைத் தோண்டி ஜெசிக்கா அகப்பட்டிருக்கும் ஆழத்திற்கு கீழே இரண்டு கிணற்றிற்கும் இடையில் துளை போட்டுத் தொடர்பை ஏற்படுத்தும் முயற்சியில் காப்பாற்றும் படையினர் தீவிரமாகச் செயற்பட்டனர். எண்ணெய்க் கிணறுகள் தோண்டுவதில் அனுபவம் பெற்ற தொழிலாளர்கள் பலர் உதவியாளர்களாகச் செயற்பட்டனர்.

முதல் முயற்சியில் ஜெசிக்காவை எட்ட முடியவில்லை. ஜெசிக்கா அழுவதும் பின்னர் தூங்குவதுமாக இருந்தாள்.

அமெரிக்கா முழுவதும் ஜெசிக்காவிற்காக பிரார்த்தனை செய்தது. உலகம் முழுவதும் செய்தி பரவியது. இரண்டாவது முயற்சியில் ஜெசிக்கா 58 மணித்தியாலங்களின்பின் கிட்டத்தட்ட இரண்டரை நாட்களின் பின் ஜெசிக்கா குழாய்க் கிணற்றிலிருந்து உயிருடன் மீட்கப்பட்டாள்.

புதன்கிழமை குழாய்க் கிணற்றிக்குள் அகப்பட்டிருந்த குழந்தை ஜெசிக்கா வெள்ளிகிழமை இரவு 7.55 மணிக்கு காப்பாற்றப்பட்டாள். வெளியே மக்கள் கூட்டம் திரண்டிருந்தது. அனைவரும் மகிழ்ச்சியில் கைதட்டி ஆரவாரித்தார்கள். ஜெசிக்காவின் மீட்பு அமெரிக்கா முழுவதும் பிரபலமானது. ரெக்சாஸ் மாநிலமே மகிழ்ச்சியில் கொண்டாடியது. ஜெசிக்கா மறுஜென்மம் எடுத்தாள்.ஜெசிக்காவிற்கு உடனடியாக வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. அவளுடைய காலில் 6 சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

குழந்தை ஜெசிக்காவை அன்றைய ஜனாதிபதியாக இருந்த ஜோர்ஜ் புஷ் தனது மனைவியுடன் சென்று வைத்தியசாலையில் பார்வையிட்டார். ஜெசிக்காவிற்கு பரிசுப் பொருட்கள் குவிந்தன. 8 லட்சம் டொலர்கள் பணம் அன்பளிப்பாகக் கிடைத்தது. ஜெசிக்காவைக் காப்பாற்றிய காட்சியை உலகமே பார்த்து வியந்தது. மிட்லாண்ட் நகரம் முழுவதும் ஆலயங்களில் மணிகள் ஒலித்தன. ஜெசிக்காவைக் காப்பாறிய ஹீரோக்களைக் கௌரவித்து மிட்லாண்ட் நகரில் மக்கள் ஊர்வலம் செய்தார்கள்.

ஜெசிக்கா விழுந்த குழாய்க் கிணறு இனிமேல் குழந்தைகள் விழுந்துவிடாதபடி இரும்பினால்மூடி ஒட்டபட்டது. ஞாபகார்த்தமாக சுற்றிவர பூங்கன்றுகள் நாட்டப்பட்டன. இதுவே வேறு நாடுகளாக இருந்திருந்தால் குழந்தை காப்பாற்றப்பட்டிருக்குமா என்பது சந்தேகம். பல வருடங்களுக்கு முன்னர் இத்தாலி நாட்டில் ஒரு குழந்தை குழாய்க் கிணற்றுக்குள் விழுந்தது. குழந்தையைக் காப்பாற்ற முயற்சி செய்து முடியாமல் போய்விட்டது. இந்தியாவில் பல குழந்தைகள் இப்படியான கிணறுகளுக்குள் விழுந்து இறக்கின்றன. அது பற்றி அந்த நாடுகள் கவலை கொள்வதில்லை.

குழந்தை ஜெசிக்காவின் கதை திரைப்படமாகியது. Everybodys Baby: The Rescue of Jessica McCulure என்ற பெயரில் ஆங்கிலத் திரைப்படமும், 'மலூட்டி' என்ற பெயரில் மலையாளத்தில் இயக்குனர் பரதன் திரைப்படமாக்கியிருந்தார். பேபி ஷாம்லி, ஜெயராம், ஊர்வசி ஆகியோர் நடித்திருந்தனர். 'The Well' பாடல் அல்பம் Charlie Whitemussel என்பவரால் வெளியிடப்பட்டது. பிரபலமான குழந்தை ஜெசிக்கா இன்று 26 வயதான தாயார் ஜெசிக்கா ஆகிவிட்டார்.



# புலிகளின் வதை முகாமில் மணியம்

வதை 40

**அதாவது** முக்கியமற்ற விடயங்கள்தானே என நினைத்து, புலிகளிடம் எதையும் அசட்டையாகத் தன்னும் சொல்லாமல் இருக்கமுடியாது என்பதை விளங்கிக் கொண்டேன்.

அதனால்தான் விவேகானந்தன் 'மேல் வீட்டில்' என்னைக் கண்டபோது முன்னெச்சரிக்கையாக, "மணியண்ணை உங்களுக்குத் தெரிந்த எல்லாத்தையும் சொல்லிப் போடுங்கோ, இந்த அடிகளையும் சித்திரவதைகளையும் உங்களாலை தாங்க ஏலாது" என்று கூறினாரோ என எண்ணினேன்.

விவேகானந்தனின் கடதாசிப் பெட்டிக்குள் ஒருசில புத்தகங்களே இருந்தன. அவற்றின் மத்தியில் இயக்கங்களின் செயற்பாடுகளை விமர்சித்து பெயர் குறிப்பிடாது வெளியிடப்பட்டிருந்த துண்டுப் பிரசுரம் ஒன்றும் இருந்தது. அதைப் பார்த்துவிட்டு அதை யார் வெளியிட்டது என என்னிடம் துருவித்துருவி விசாரித்தனர். அப்படி ஒரு பிரசுரம் வெளிவந்ததே எனக்குத் தெரியாது. அப்படியிருக்க நான் என்ன பதிலைக் கூற? பின்னரும் என் விசாரணைகளின் போது பல தடவைகள் அதுபற்றி விசாரிக்கப்பட்டது. ஒரு சிறிய அநாமதேய துண்டுப் பிரசுரத்திற்கு இவ்வளவு விசாரிப்பா என அதிசயப்பட்டேன். அதேநேரத்தில் ஒன்று விளங்கியது. யாராயிருந்தாலும் இயக்கங்களின் செயற்பாடுகளை விமர்சிப்பதை அவர்கள் பொறுத்துக்கொள்ளத் தயாராக இல்லை என்பதின் வெளிப்பாடே அது.

விவேகானந்தனின் கடதாசிப் பெட்டியை எடுக்கப் போவதற்காக கடையின் பின்பக்கம் சென்றபோது இன்னொன்றையும் அவதானித்தேன். பரந்தனைச் சேர்ந்த நண்பர் ஒருவர் புலிகள் என்னைக் கைதுசெய்த தினத்தன்று வியாபார நிமித்தம் வவுனியாவிலிருந்து சில ஆயிரம் 'றினோல்ட்' மற்றும் 'ஒறெக்ஸ்' போல் பொயின்ற் பேனாக்களைக் கொண்டு வந்திருந்தார். எதிர்பார்த்த விலை சரிவராததால் அவற்றை எமது கடையில் வைத்துவிட்டு, இரண்டு நாட்களில் திரும்பி வருவதாகச் சொல்லிச் சென்றிருந்தார்.

அவர் வைத்த இடத்தில் இப்போது அவற்றினைக் காணவில்லை! என்னைக் கைது செய்த தினத்தன்று கடைத் திறப்பை என்னிடமிருந்து வாங்கிய புலிகள், பின்னர் கடையைத் திறந்து ஆராய்ந்த பொழுது அவற்றை 'அபேஸ்' செய்துவிட்டார்கள் என்பது புரிந்தது.

இப்படிப் பலர் தமது வியாபாரப் பொருட்களைக் கொண்டு வந்து எமது கடையில் வைப்பது வழக்கம். அன்று பரந்தன் நண்பரின் பொருள் மட்டுமே இருந்ததால், அதை மட்டும் சூறையாடிச் சென்றிருக்கிறார்கள் இந்த 'உத்தம புத்திரர்கள்'.

சிறிது நேரம் அங்கு செலவிட்ட பின் மீண்டும் கண்கள் கட்டப்பட்டு சிறைச்சாலைக்கு அழைத்து வரப்பட்டேன்..

அடுத்த கிழமை நான் கைது செய்யப்பட்ட 1991 டிசம்பர் 26ம் திகதியின் 21ஆவது நினைவு தினம் வருகிறது. இந்தத் தினத்தை அன்றிலிருந்து வருடாவருடம் நாம் மௌனமாகத் துக்க தினமாக அனுஷ்டிப்பது வழமை. இந்த இருபது ஆண்டுகளில் எத்தனையோ மாற்றங்கள் இந்தப் பூமிப்பந்தில் நிகழ்ந்துவிட்டன. அசைக்க முடியாத கோட்டை எனக் கருதப்பட்டு இருந்த புலிகளும் மண்ணோடு மண்ணாகி வரலாற்று அரங்கிலிருந்து காணாமல் போய்விட்டார்கள். எல்லாம் 'மக்கள் சக்தியே மகேசன் சக்தி' என்பதின் வெளிப்பாடே தவிர வேறொன்றும் இல்லை)

1992ஆம் ஆண்டு பிறந்துவிட்டது. பிறந்கையோடு புத்தாண்டு தினம் முடிந்தும்விட்டது. புலிகளின் வதை முகாமில் வாடிக்கொண்டிருக்கும் எம்மைப் போன்ற கைதிகளுக்கு புத்தாண்டு தினம் எத்தகைய சிறப்புகளுக்கும் உரிய ஒன்றல்ல. 'நாளை மற்றொரு நாளே' என்பது போல, எமக்கு புத்தாண்டு தினமும் மற்றொரு நாளாகக் கழிந்துவிட்டது.

புத்தாண்டுக்கு அடுத்த நாள் வழமைபோல கைதிகளின் விசாரணைகள் ஆரம்பமாயின. எனது விசாரணையையும் தயாபரன் ஆரம்பித்தான். இந்தத் துன்பத்திலும் சில நகைச்சுவைகளைப் பரிமாறி கைதிகள் சிறிது நேர இன்பம் காணவும் தவறவில்லை.

"ஒருநாள் விசாரணை, அடிதடி எண்டு இல்லாமல் நேற்று கழிந்ததால், விசாரிக்கிறவங்களின்ரை கை, கால்கள் உளைவெடுத்திருக்கும்" என ஒரு கைதி இரகசியமாகச் சொல்ல, அது சிறையெங்கும் நொடிப்பொழுதில் பரவி மௌனச் சிரிப்லையைக் கிளப்பியது.

தயாபரன் மீண்டும் விசாரணை தொடங்கியதும் என்னிடம் கேட்ட முதல் கேள்வி, "புது வருஷத்திலண்டு என்ன செய்தியள்?" என்பதாகும். வெளியே சுதந்திரமாகத் திரிபவன் ஒருவனிடம் கேட்க வேண்டிய கேள்வியை, சிறைக்கூண்டுக்குள் அடைத்து வைக்கப்பட்டிருப்பவனிடம் அடைத்தவனே கேட்பது என்பது, நான் முன்பு கண்டு கேட்டு இருக்காத ஒன்றாகும்.

"நல்லாகக் குளிச்சுச் சாப்பிட்டு நித்திரையும் கொண்டன்" என துணிந்து, மனமறிந்து ஒரு பொய்யைச் சொன்னேன். "அப்ப நேற்று உங்கடை எல்லாற்றை பாடும் கொண்டாட்டம் தான் எண்டு சொல்லுங்கோ" என்று சொல்லி விட்டுச் சிரித்தான் அவன்.

அவனுடைய கேள்வியையும், அதற்கு நான் சொன்ன பதிலையும், அதற்கு அவன் சொன்ன பதில் கருத்தையும் எண்ணுகையில் எனக்கே சிரிப்பாக இருந்தது. ஆனால் அதை வெளிக்காட்ட முடியாதே. வெளிக்காட்டினால் அதற்கு விளக்கம் வேறு சொல்ல வேணுமே. அவன் சொன்னதை ஆமோதிப்பதுபோல மெதுவாகத் தலையை ஆட்டினேன். அவனது முகத்தில் திருப்தி பளிச்சிடுவதைக் காணமுடிந்தது.

அடுத்ததாக அவன் திடீரென என்னிடம், "உங்கள் கால் சங்கிலி நேற்று ஏன் வெட்டப்பட்டது எண்டு தெரியுமோ?" எனக் கேட்டான். நான் 'இல்லை' யெனத் தலை அசைத்தேன். அவன் ஏதாவது விளக்கம் சொல்லுவான் என எதிர் பார்த்தேன். அவன் அதுபற்றி மேற்கொண்டு எதுவும் பேசாமல் தனது விசாரணையை ஆரம்பிப்பதில் அக்கறை காட்டினான்.

"நீங்கள் எந்த இயக்கத்துக்கு சப்போட்?" என நான் எதிர்பாராத ஒரு கேள்வியைக் கேட்டான்.

"நான் ஒரு இயக்கத்துக்கும் சப்போட் இல்லை" எனப் பதிலளித்தேன்.

உங்கடை கடைக்கு எல்லா இயக்கக்காரரும் வந்து போறவை தானே?" என்று கேட்டான்.

"ஓம் எல்லாரும் வாறவை. எல்லா இயக்கத்தின்ரை வெளியீடுகளும் நான் விக்கிறனான். அதோடை இந்தியாவிலிருந்து வெளிவாற சிறு சஞ்சிகைகள் எல்லாம் எனக்குக் கிடைப்பதால், அது வாங்குகிறதுக்காகவும் ஆட்கள் வாறவை. எல்லா இயக்கக்காரரும் என்னோடை நல்ல சிநேகிதமாகத்தான் பழகிறவை. எனது கடை ஒரு பொது இடம் மாதிரி. எனது கடைக்கு 'மரினா பீச் (அதாவது சென்னையில் எல்லோரும் கூடும் மரீனா கடற்கரை போல) என்று ஒரு பெயரும் இருக்கிறது" என்று விளக்கினேன்.

"அது என்ன மரினா பீச்? ஆர் வைச்சது அந்தப் பேரை?" என்று ஆவலுடன் வினவினான்.

"உங்கடை இயக்கத்தினர்தான் அந்தப் பெயரை வைச்சதாக அறிஞ்சனான்" என்று சொன்னேன். "அது எப்பிடி உங்களுக்குத் தெரியும்?" என எதிர்க்கேள்வி எழுப்பினான்.

"எனது கடைக்கு ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தினரும் வாறவை. எனது கடைக்கு வழமையாக வரும் அந்த இயக்க ஆட்கள் யாராவது அங்கு இருக்கிறார்களா என அறிஞ்சு வரும்படி கம்பசுக்குள் இருந்து உங்கள் இயக்கம் அனுப்பிய ஆளிடம் 'மணியண்ணையின்ரை மரினா பீச்சுக்குள் ஆராவது இருக்கிறாங்களா' எண்டு பார்த்து வரும்படி சொன்னதாக அறிந்தேன். அதற்குப் பிறகுதான் எனது கடைக்கு உங்கடை ஆட்கள் அப்பிடியொரு பேர் வைச்ச விடயம் எனக்குத் தெரியும்" எனத் தெரிவித்தேன்.

"அப்பிடியா விசயம்" என்றதோடு அந்த விவகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டான். ஆனால் இன்னொரு முக்கியமான கேள்வியை என்னை நோக்கி வீசினான்.

"நீங்கள் எல்லா இயக்கத்தோடையும் பழகியும் ஏன் ஒரு இயக்கத்திலையும் சேரல்லை?" என்பதுதான் அந்தக் கேள்வி. இந்தக் கேள்விக்கு விடை சொல்வதற்கு எனக்கு எந்தவிதமான சிரமமும் இல்லை. ஆனால் இந்தக் கேள்வியைக் கேட்டிருப்பவன் எனது தலைவிதியைத் தனது கையில் வைத்திருப்பவன். எனவே மிகவும் கவனமாகத்தான் இதற்குப் பதிலளிக்க வேண்டும் எனத் தீர்மானித்தேன். அதேநேரத்தில் அதில் உண்மையும் இருக்கவேண்டும். எனினும் ஒரு விடயம் சந்தோசமாக இருந்தது. அதாவது அவனது கேள்வியின்படி, நான் எந்தவொரு இயக்கத்தையும் சாராதவன் என அவர்கள் கருதுகிறார்கள் எனப்புரிந்தது.

"நான் சேருவது பற்றி யோசிக்கல்லை" எனச் சொன்னேன்.

"அதைத்தான் ஏன் என்று கேட்கிறேன்" என அவன் திரும்பவும் கேட்டான். நான் அவனுக்குத் திருப்தியான ஒரு பதிலைச் சொல்லும் வரை அவன் விடமாட்டான் எனத் தெரிந்தது. அவன் அவ்வாறு கேட்டதற்கு வேறு சில காரணங்களும் இருக்கலாம்.

(துன்பியல்கள் தொடரும்...)



# பாப்பா முரசு

**இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.**

## வாரம் ஒரு திருக்குறள்



**பேதைமை**

**பொய்படும் ஒன்றோ புனை பூணும் கைய றியாப்
பேதை வினைமேற் கொளின்.**

ஒழுக்கநெறி அறியாத பேதை ஒரு செயலை மேற்கொண்டால், ( அந்தச் செயல் (முடிவுபெறாமல்) பொய் படும்: அன்றியும் அவன் குற்ற வாளியாகித் தளை பூணுவான்.

குறள்:836

# கிடைத்தும் கிடைக்காமல் போனது!

**ஒரு** நாள் ஒருவன் அவன் வீட்டுப் பரணைச் சுத்தம் செய்து கொண்டிருந்தான். அப்போது அதுவரை அவன் கவனித்திராத ஒரு புத்தகத்தைக் கண்டெடுத்தான்.

அது ஒரு மிகப் பழைய புத்தகம். பக்கங்கள் மஞ்சள் படிந்து மடித்துப் போயிருந்தன. பக்கங்களைத் திருப்புகையில் மிகக் கவனம் தேவையிருந்தது. இல்லாவிட்டால் பக்கங்கள் உதிரத்தொடங்கின.



அவன் அந்தப் புத்தகம் மந்திர மாயங்களைப் பற்றியது என்று அறிந்து கொண்டான். எத்தனையோ முறை படிக்க முயன்றும் அவன் ஒரே ஒரு பத்தியில் உள்ள கருத்தை மட்டும் தெரிந்து கொள்ளமுடிந்தது. மற்றவை அவனுக்குப் புரியவில்லை.

அந்தப் பத்தியில் கருங்கடற் கரையில் கிடக்கும் மாயசக்தி மிக்க ஒரு கறுப்புக் கூழாங்கல்லைப் பற்றிச் சொல்லப்பட்டிருந்தது. அந்தக் கல்லால் எதைத் தொட்டாலும் அதைத் தங்கமாக மாற்றிவிடும். அந்தக் கல்லை எப்படிக் கண்டு கொள்வது என்றும் அந்தப் புத்தகத்தில் சொல்லப்பட்டிருந்தது. தொட்டுப் பார்த்தால் மற்ற கற்கள் எல்லாம் பனிக்கட்டி போல் குளிராய் இருக்க, அந்தக் கல் மட்டும் வெதுவெதுப்பாய் இருக்கும் என்றுமிருந்தது.

இதைத் தெரிந்து கொண்ட அவனுக்கு இருப்புக் கொள்ள வில்லை. கருங்கடற்கரை நோக்கி உடனே புறப்பட்டான்.

அங்கு தினமும் காலையிலிருந்து மாலை வரை அவன் ஒவ்வொரு கல்லாய் தொட்டுப் பார்த்துத் தேடத் துவங்கினான். கடற்கரையில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை கருங்கூழாங்கற்கள் கிடந்தன. அவனுக்கு ஒரு முறை சோதித்த கல்லை மறுபடி மறுபடி சோதிக்காமல் இருக்க வேண்டுமே என்ற கவலை வந்து விட்டது. சோதித்த கல்லைக் கடலுக்குள் உடனே எறிந்து விட்டால் குழப்பம் வராது என்று யோசித்து, அதன்படியே ஒவ்வொன்றாகக் கற்களைக் கடலுக்குள் எறிந்தான்.

பல மாதங்களும் வருடங்களும் கடந்து போயின. கல்லும் கிடைக்கவில்லை, அவனும் விடுவதாய் இல்லை. கற்களைத் தொட்டுப் பார்த்து கடலுக்குள் எறியும் பணி அவனுக்கு வழக்கமாகிவிட்டது.

ஒரு நாள் மாலை, மிகுந்த தேடலுக்குப் பிறகு களைத்துப் போய் கடற்கரையை விட்டுச் செல்லும் போது ஒரு கறுப்புக் கூழாங்கல் அவன் கண்ணில் பட்டது. அதைக் கையில் எடுத்தான். அது வெதுவெதுப்பாய் இருந்தது. ஆனால், பல வருடப் பழக்கத்தால், எப்பொழுதும் போல் அதையும் யோசிக்கும் முன் கடலில் தூர எறிந்துவிட்டான்.

அவன் எறிந்த சில நொடிகளில் அந்தக் கல்தான் அவன் தேடி வந்த கல் என அறிந்து வேதனைப்பட்டான். இனி அதைக் கடலுக்குள்ளிருந்து எடுக்க முடியாது என்று அங்கிருந்து வருத்தத்துடன் கிளம்பினான்.

செய்யும் செயல்களில் எப்பொழுதும் கருத்தும் கவனமும் தேவை. அந்தச் செயலால் ஏற்படும் பழக்கங்களுக்கு அடிமையாதைத் தவிர்க்கவேண்டும்.



**வித்தியாசத்தை கண்டுபிடியுங்கள்**
**இரண்டு படங்களுக்கும் இடையே குறைந்தது 5 வித்தியாசங்கள் உள்ளன.**

## சரியா? தவறா?

**ஒரு எவர்சில்வர் கரண்டியை கப்பில் வைத்துவிட்டு, பின்னர் சூடான பானத்தை ஊற்றினால் கப் உடையும் வாய்ப்பு குறையும். ஏன்?**

பெரும்பான்மையான உலோகங்களும் கண்ணாடி அல்லது பீங்கானைவிட வெப்பத்தை அதிகமாகக் கடத்தும் தன்மையுள்ளவை. ஒரு எவர்சில்வர் அல்லது வெள்ளிக் கரண்டியை கப்பினுள் வைத்துவிட்டு பின்னர் சூடான பானத்தை ஊற்றும்போது அந்தக் கரண்டி பெருமளவில் வெப்பத்தை கிரகித்துக் கொள்வதால் கப் சூடாவதும் விரிவடைவதும் குறைகிறது. எனவே கப் உடையும் வாய்ப்பும் கணிசமாக குறைந்து போகிறது.

**ஒரு பெரிய ஐஸ்கட்டியைக் காற்றில் திறந்து வைத்தால் அதிலிருந்து வெண்ணிறமான புகை கிளம்புகிறது அல்லவா? ஏன்? இது ஏதேனும் வாயுவா?**

ஐஸ்கட்டியிலிருந்து எந்த வாயுவும் வெளியேறுவதில்லை. ஐஸ்கட்டியை திறந்து வைக்கும்போது ஐஸ்ஸைச் சுற்றியுள்ள காற்று குளிர்வடைகிறது. ஒரு அளவிற்கு மேல் குளிர்வடையும்போது அந்தக் காற்றிலுள்ள ஈரப்பதம் மிக நுண்ணிய நீர்த் திவலைகளாக மாறுகிறது.

அறையிலுள்ள காற்று மேலும் கீழுமாக நகரும் போது இந்த நீர்த்திவலைகளும் நகருவதால் புகை போன்ற தோற்றம் ஏற்படுகிறது.

## மூன்று இதயங்கள் கொண்ட மீன்



கணவாய் மீனுக்கு மூன்று இதயங்கள்...! கணவாய் எனப்படும் மீன் இனத்திற்குதான் அந்த சிறப்பு. கடல் விலங்குகளில் இது ராஜா எனவும் கருதப்படுகிறது. இந்த மீன், ஸ்குவிட் மற்றும் ஒக்டோபஸ் குடும்பத்தை சார்ந்ததாகும். இதனை செப்பலோபாட்ஸ் எனவும் அழைக்கின்றனர்.

மேலும் கணவாய் மீனுக்கு மிகப் பெரிய இதயம் உள்ளது. உண்மையில் இதற்கு ஒரு இதயம் அல்ல மூன்று இதயங்கள். இரண்டு இதயங்கள் செவுள்களுக்கு இரத்தத்தை பம்ப் செய்யவும். மூன்றாவது இதயம் பிற உறுப்புகளுக்கு பம்ப் செய்யவும் பயன்படுத்துகிறது.

இந்த மீனின் அங்கம் தட்டையாக இருப்பதால் கடலில் வாழ்வதற்கு தோதாக உள்ளது. இவை மொலஸ்க்ஸ் மற்றும் சிறிய மீன்களை வேட்டையாடக்கூடியது. கணவாய் மீன்கள் பிற இனத்தின் மீன்களிடம் இருந்து தன்னைக் காத்துக்கொள்ள தன் நிறத்தை பின்புல நிறத்திற்கு ஏம்ப மாற்றும் இயல்புடையது.

## முந்திரிக் கொட்டை

எதையாவது துடுக்குத்தனமாகவோ அல்லது முந்திக் கொண்டோ செய்பவர்களை முந்திரிக் கொட்டை என்று திட்டுவார்கள். அதற்குக் காரணம் முந்திரிப் பழத்தைப் பார்த்தாலே புரிந்துவிடும்.

சரி இந்த முந்திரியின் பூர்வீகம் எது தெரியுமா? பிரேசில்.



முந்திரிப் பழம் ஒரு பொய்க்கனியாகும். பழம் போலத் தோன்றினாலும் அது உண்மையில் பழம் இல்லை. இந்த பழத்தின் வெளியே முந்திரிக் கொட்டை உருவாகும். முந்திரியைப் பாதுகாக்கும் வகையில் அமைந்திருக்கும் இந்த பழத்தின் திரவம் தோலில் பட்டு விட்டால் எரிச்சலையும், கொப்புளத்தையும் ஏற்படுத்திவிடும்.

பிரேசில் பூர்வீகமாக இருந்தாலும் உலக அளவில் முந்திரி அதிக பரப்பளவில் பயிரிடப்படுவது இந்தியாவில்தான். ஆனால் இங்கு மகசூல் குறைவாகவே உள்ளது. இந்தியாவில் கேரளா மாநிலம்தான் முந்திரி உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது.

முந்திரிக் கொட்டை திரவமும் பல்வேறு விதங்களில் பயன்படுத்தப்படுகிறது. உண்மையில் முந்திரியும் நச்சுத்தன்மை வாய்ந்த ஐவி என்ற தாவரமும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவைதான். பலருக்கும் முந்திரிக் கொட்டையால் ஒவ்வாமை ஏற்படுகிறது. நிலக்கடலைதான் அதிக ஒவ்வாமை தன்மை கொண்ட பருப்பு வகையாகும்.

## பறவைகள் பற்றிய தகவல்கள்

- ஆஸ்திரேலியாவில் வசிக்கும் மித்ரா என்ற பறவை ஒன்பது நிறத்தில் தெரியும்.
- கடல் புறாக்கள் நீரில் மிதந்துகொண்டே தூங்கும்.
- பச்சோந்தியின் கண்கள் எப்போதும் சுழன்று கொண்டே இருக்கும்.
- மரங்கொத்திப் பறவை மரத்தை ஒரு நொடிக்கு 20 தடவைகள் கொத்தும்.
- குவாரின் என்ற பறவை மல்லாந்து தூங்கும்.
- புறா ஓய்வெடுக்காமல் சுமார் ஆயிரம் கி.மீ. வரை பறக்கும் திறன் படைத்தது.
- ராஜஸ்தான் பறவைகள் சரணாலயத்தில் 374 பறவை இனங்கள் இருக்கின்றன.
- நீரை உறிஞ்சிக் குடிக்கும் பறவை புறா.
- ஒரே சமயத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட முட்டைகளை இடும் பறவை நெருப்புக் கோழி.
- மிகப் பெரிய நீர்ப்பறவை அன்னம்.
- வெட்டுக்கிளியை வேட்டையாடும் பறவை மைனா.
- வான்கோழிகள் அமெரிக்காவை பூர்வீகமாகக் கொண்டவை.
- நியூசிலாந்து நாட்டில் காக்கைகள் கிடையாது.

## பொது அறிவு

1. உலகிலேயே பரப்பளவில் மிகச் சிறிய நாடு எது?
   **வத்திக்கான்**
2. உலகிலேயே பரப்பளவில் மிகப் பெரிய நாடு எது?
   **ரஷ்யா**
3. உலகிலேயே மிகப் பெரிய தீவு எது?
   **கிரீன்லாந்து**
4. உலகிலேயே மிக உயர்ந்த பீட பூமி எது?
   **தீபெத் பீட பூமி**
5. உலகிலேயே மிக உயரத்தில் அமைந்துள்ள நாடு எது?
   **சுவிட்சர்லாந்து**

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 25.12.2012

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 970**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 968**

பரிசுக்குரியவர்:
**சி.அபி, வாழைச்சேனை, மட்டக்களப்பு**

பாராட்டுக்குரியவர்கள்

01. பா.சாருணி, கோப்பாய் சந்தி, கோப்பாய்.
02. A.விதுசனா, பள்ளிமுனை கிழக்கு, பள்ளிமுனை.
03. வ.பிரணவி, கிருஷ்ணா நகர், முழங்காவில்
04. ஜெ.ஜெயசூரியராஜ், மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்.
05. கெ.ஹேட்றியன், செம்மணி வீதி, நல்லூர்.
06. எஸ்.பிரியந்தன், புலோலி தெற்கு, புலோலி.
07. எஸ்.எம். இஷான், பிரதான வீதி, மாத்தளை.
08. ஏ.ஜதுஷா, வெள்ளவத்தை, கொழும்பு - 06.

# கொள்ளை ராணி பூலான்தேவி



**திருப்பங்கள் நிறைந்த பூலானின் வாழ்க்கை வரலாறு**

எல்லோருக்கும் - அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலைகாரி என்றுதான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் - ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் புரட்டப்பட்ட இப்பக்கங்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் புரட்டப்படுகின்றன.

135

**மத்திய பிரதேச** ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் ஆயிரக்கணக்கான பொலிசாரைக் கொண்ட விசேட பொலிஸ் அணிகள் உருவாக்கப்பட்டன.

கொள்ளைக் கோஷ்டிகளைச் சேர்ந்தவர்களைப் பிடிப்பவர்களுக்குப் பெருந்தொகையான சன்மானம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதனால் பொலிசார் போட்டி போட்டுக்கொண்டு தேடுதலை ஆரம்பித்தார்கள்.

அவ்வாறான தேடுதலின் போது ஸ்ரீராமும் மாட்டிக்கொண்டான். தான் பொலிசாருக்கு உதவுபவன் என்று எடுத்துச் சொல்லி மன்றாடினான்.

அவனைப் பிடித்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் புதியவன். அதனால் ஸ்ரீராமை பொலிஸ் நிலையத்துக்குக்கொண்டு போக ஆயத்தமானான்.

அப்போதுதான் குளித்துவிட்டு. ஒரு துணியைக் குறுக்குக் கட்டாகக் கட்டியபடி குசுமா வந்துகொண்டிருந்தாள்.

பொலிசாரைக் கண்டதும் அவள் மிரண்டாள். இன்ஸ்பெக்டரின் கண்கள் குசுமாவின் வாளிப்பான தேகத்தின் மீது மொய்த்தன.

குறுக்காகத் துணியைக் கட்டியிருந்ததால் திறந்திருந்த தோள்களின் மினுமினுப்பம், மெல்லிய துணிக்கட்டை மீறிய மதமதப்பாக திமிறிக்கொண்டிருந்த அங்கத் திரட்சிகளும் இன்ஸ்பெக்டரின் உச்சியில் கிறுகிறுக்கச் செய்தன.

"யார் அவள்?" என்று கேட்டான். 'காதலி' என்றான் ஸ்ரீராம். ஸ்ரீராமை விட்டுவிட்டு குசுமாவிடம் சென்றான். அவள் கையைப் பற்றிக் குடிசை ஒன்றுக்குள் தரதரவென்று இழுத்துப் போனான்.

ஸ்ரீராமுக்கு இன்ஸ்பெக்டரின் போக்குப் புரிந்தது. பலவீனம் தெரிந்தது.

உள்ளே குசுமாவின் உடலில் கிடந்த துணியைக் கழற்றி வீசியெறிந்தான் இன்ஸ்பெக்டர். அவளது திறந்த உடலை அங்கம் அங்கமாக இரசித்துப் பார்த்தான்.

"அடி வாடி குட்டி. அந்த ராமன்கூட உன்னைக் காப்பாற்ற வரமாட்டான். ஸ்ரீராம் ஸ்ரீராம்." இன்ஸ்பெக்டர் குசுமாவை கட்டியணைத்து அவள் முகமெங்கும் முத்தமிட்டான்.

குசுமா கத்தவில்லை. குசுமா எதிர்ப்புக் காட்டவில்லை. குசுமா திமிறவில்லை.

ஸ்ரீராமுக்குப் பயந்து அடக்கிவைத்திருந்த அவள் உணர்ச்சிகள் எட்டிப்பார்த்தன. தலை நீட்டின.

குசுமா அந்த இன்ஸ்பெக்டரை தன் கைகளால் சுற்றிவளைத்தாள். மூச்சுமுட்டும் விதமாக இறுக அணைத்தாள்.

வெளியே இருக்கும் ஸ்ரீராமுக்கு உள்ளே என்ன நடக்கும் என்பது தெரிந்தது.

அவனுக்கும் அந்த இன்ஸ்பெக்டரின் உதவி தேவைப்பட்டது.

இன்ஸ்பெக்டரை வளைக்க குசுமாவைத் தான் தூண்டிலாகப் போட வேண்டும் என்று நினைத்துக் கொண்டான். குசுமா ஏற்கெனவே தூண்டில் போட்டுவிட்டாள் என்பது அவனுக்குத் தெரியாது.

குசுமா இன்ஸ்பெக்டரை முழுவதுமாக ஆக்கிரமிக்கத் தொடங்கியிருந்தாள்.

இன்ஸ்பெக்டர் வியர்த்திருந்தான். மூச்சிறைத்தான். குசுமா அவனது முன்புற தலைமுடிக்குள் விரல்களை நுழைத்துக் கோதிவிட்டாள்.

எதிர்ப்புக் காட்டுவாள் என்று பலப்பிரயோகத்திற்குத் தயாராக வந்த இன்ஸ்பெக்டருக்கு குசுமாவின் ஒத்துழைப்பு பழமும் நழுவிப் பாலில் விழுந்தது போன்று இனித்தது.

என்றாலும் குசுமாவிடம் ஒரு பயமும் வந்துவிட்டது. இரைதேடும் பலியைப் போலவே அவள் நடந்து கொண்டாள்.

இன்ஸ்பெக்டருக்கு இப்போது தாகமெடுத்தது. முற்றாகக் களைத்துப் போயிருந்தான்.

குசுமா துணியை எடுத்துக் குறுக்காகக் கட்டிக்கொண்டு வெளியே போனாள். ஸ்ரீராம் ஒரு மரக்குற்றியில் அமர்ந்திருந்தான்.

அவனிடம் எதுவும் பேசாமல் தண்ணீர் எடுத்துக் கொண்டுபோய் இன்ஸ்பெக்டருக்குக் கொடுத்தாள்.

அவன் வெளியே போக முன்பாக குசுமாவை இறுக்கமாகத் தன்னோடு அணைத்தான். குசுமா கண்களை விரித்து அவனைக் கிறக்கமாகப் பார்த்துக்கொண்டு அவன் உதடுகளோடு தன் இதழ்களைப் பொருத்தினாள்.

குசுமாவின் கரங்கள் துணிந்து செய்த விஷமத்தால் இன்ஸ்பெக்டர் பதறிப் போனான்.

"இராட்சஷி" என்று சொல்லிவிட்டு, "இனி அடிக்கடி இங்கு வருவேன்" என்றான்.

வெளியே ஸ்ரீராம் இளித்தான். இப்போது இன்ஸ்பெக்டர் அவனிடம் கடுமை காட்டவில்லை.

"ஒழுங்காக நடந்துகொள்! என்னை அனுசரித்து நடந்தாயானால் பிரச்சினை இருக்காது." என்றான் இன்ஸ்பெக்டர்.

ஸ்ரீராம் தன் காவிப்பற்கள் தெரியச் சிரித்தான்.

"ஐயா அடிக்கடி இங்கே வந்து போகவேண்டும்." என்றான் பணிவான குரலில்.

"வந்தால் என்ன தருவாய்?" என்றான். தன் சீருடையின் சட்டைப் பொத்தான்களைப் போட்டுக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர்.



"ஐயா என்ன கேட்டாலும் தருவோம். எல்லாம் ஐயா விருப்பமுங்க." என்றான் ஸ்ரீராம். அவன் பேச்சில் இருந்த பொடி இன்ஸ்பெக்டருக்குப் பிடித்திருந்தது.

என்றாலும் ஒரு கொள்ளைக்காரன் முன்பாக தன் பலவீனத்தை ஒப்புக் கொள்வது இன்ஸ்பெக்டருக்குக் கௌரவப் பிரச்சினையாக இருந்தது.

"உன் கூட்டாளிகள் பற்றிய விபரங்களை எனக்கு மட்டும் தரவேண்டும். ஏமாற்ற நினைத்தாயோ தொலைந்தாய்" என்றுவிட்டுப் போனான்.

அதன்பின்னர் ஸ்ரீராமிடம் தகவல் திரட்ட வருவதுபோல, அடிக்கடி குசுமாவிடம் வந்து போனான் இன்ஸ்பெக்டர்.

ஸ்ரீராம் கொடுத்த தகவல்படி, பையாமௌ என்ற கிராமத்துக்குள் புகுந்தது பொலிஸ் கோஷ்டி.

சில நாட்களுக்கு முன்னர்தான் அங்குள்ள மீனவர்கள் குடியிருப்புப் பகுதிக்குப் பூலான் கோஷ்டியினர் வந்துவிட்டுப் போனார்கள்.

தன்னை அக்கிராமத்தில் உள்ள பண்ணையார் சாதிக்காரர்கள் மூலம் அறிந்த ஸ்ரீராம் பொலிசாருக்குத் தகவல் கொடுத்திருந்தான்.

**மத்தியபிரதேச ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் ஆயிரக்கணக்கான பொலிசாரைக் கொண்ட விசேட் பொலிஸ் அணிகள் உருவாக்கப்பட்டன. கொள்ளைக் கோஷ்டிகளைச் சேர்ந்தவர்களைப் பிடிப்பவர்களுக்குப் பெருந் தொகையான சன்மானம் வழங்கப்படும் என்று அறிவிக் கப்பட்டது. அதனால் பெரி சார் போட்டி போட்டுக்கொண்டு தேடுதலை ஆரம்பித்தார்கள்.**

திருப்பங்கள் தொடரும்...





# வெண்டைக்காயின் மருத்துவ குணங்கள்!

வெண்டைக்காயை அதிகமாக சாப்பிட்டுவரும் பட்சத்தில், அதன் காம்பை போலவே நமது புத்திக்கூர்மையும் நீளும். எந்த காரியத்தையும் தெளிவாக அணுகும் ஆற்றல் நமக்கு ஏற்படும் என ஆய்வுக்குறிப்புகள் தெரிவிக்கின்றன.

வெண்டைக்காயில் உயர்தரமான பொஸ்பரசும், தாவரப்பசையும், நார்ப்பொருளும் உள்ளன. எளிதில் நமது உடலால் ஏற்றுக்கொள்ளப்படும் சிறந்த மாச்சத்துப் பொருட்களும் உள்ளன.

அமெரிக்காவில் இளம் வெண்டைக்காயை நறுக்கி முட்டையில் தோய்த்து, ரொட்டித்தூள் அல்லது சோள மாவில் புரட்டி எடுத்து எண்ணெயில் பொறித்து சாப்பிட்டுவருகிறார்கள்.

இதில் உள்ள பெகடின் என்ற நார்ப்பொருள் உடலில் உள்ள கெட்ட கொழுப்பை கரைக்கும் வேலையை கச்சிதமாக செய்கிறது. இதயத்துடிப்பை சீராக்கும் மக்னீசியம் என்ற வேதிப்பொருளும் உள்ளது. வெண்டையை சாப்பிடுவதன்மூலம் நமது உடலுக்கு 66 கலோரி கிடைக்கிறது. இதனாலேயே இந்தக்காய் மகத்துவம் நிறைந்ததாக திகழ்கிறது.

# கர்ப்பப்பை இறக்கம் ஏன்?



பெண்மையின் வரப்பிரசாதமே கர்ப்பப்பைதான். பூப்பெய்துவதில் தொடங்கி, குழந்தை பெறுவது வரை பெண்மையின் அடையாளமாகவும் கவசமாகவும் இருப்பது அதுவே. அப்படிப்பட்ட கர்ப்பப்பை, அதன் இடத்தில் இருக்கும் வரைதான் ஆரோக்கியம். இருப்பிடத்திலிருந்து இறங்கினாலோ ஆபத்துதான்! குழந்தை பெற்ற பெண்கள் பலரையும் பாதிக்கிற பிரச்சினைகளில் ஒன்று கர்ப்பப்பை இறக்கம். அதற்கான காரணங்கள், தீர்வுகள், தவிர்க்கும் முறைகள் பற்றி விரிவாகப் பேசுகிறார் மகப்பேறு மருத்துவர் ஒருவர்.

சாதாரணமாக 2 செ.மீ. அளவுள்ள கர்ப்பப்பை, வயதுக்கு வரும்போது, 5 முதல் 6 செ.மீ. வரை வளர்கிறது. பிரசவத்தின் போது 5 கிலோ எடையுடன், 30 செ.மீ. நீளத்துக்கு விரிகிறது. குழந்தைப்பேற்றைத் தவிர, கர்ப்பப்பைக்கு வேறு வேலைகள் கிடையாது. பிரசவத்துக்குப் பிறகு அது சுருங்கி, மீண்டும் பழைய அளவுக்கு வரும்.

கர்ப்பப்பை இறங்க, அதிக பருமன், வயிற்றிலுள்ள கொழுப்பின் பளு போன்றவை முக்கியமான காரணங்களாக இருக்கும். ஆஸ்துமா, தொடர் இருமல் காரணமாக, உள் வயிற்றின் அழுத்தம் அதிகமாகி, கர்ப்பப்பை வெளியே தள்ளப்படலாம். பிரசவத்தின்போது எடை அதிகமாகி, அதிகம் முக்கி, குழந்தையை வெளியே தள்ள முயற்சிப்பதும் கர்ப்பப்பை இறக்கத்துக்குக் காரணமாகலாம்.

பிரசவத்துக்குப் பிறகு கர்ப்பப்பை சுருங்குவதற்கு முன்பே, அடுத்த கர்ப்பம் தரிப்பது, மலச்சிக்கல், இயற்கையாக கர்ப்பப்பையைச் சுற்றியுள்ள தசை நரம்புகள் பலவீனமாக இருப்பது போன்ற பிற காரணங்களாலும், ஒரு பெண்ணுக்கு கர்ப்பப்பை இறக்கம் வரலாம். கர்ப்பப்பை இறக்கத்தால் நடப்பது சிரமமாகும். கர்ப்பப்பை உரசி, புண் உண்டாகும்.

கர்ப்பப்பை இறங்கும்போது, முன் பாகத்திலுள்ள சிறுநீர் பையும், பின் பக்கத்திலுள்ள மலக்குடலும் சேர்ந்து இழுக்கப்படலாம். இறங்கிய கர்ப்பப்பையைத் தற்காலிகமாக மேலே தூக்கிவைக்க, பிளாஸ்டிக் வளையம் உண்டு. ஸ்லிங் ஒப்பரேஷன் மூலம் வயிற்றின் வழியே, கர்ப்பப்பையை மேலே தூக்கிப் பொருத்தலாம்.

குழந்தை பெற்று அதிக வயதான பெண்களுக்கு மட்டுமே இப்பிரச்சினையின்போது, கர்ப்பப்பையை அகற்ற வேண்டி வரும். பிரசவத்துக்குப் பிறகு இடுப்பெலும்புத் தசைகள் உறுதிபெற உடற்பயிற்சிகளைச் செய்யவேண்டும்.

பிரசவத்தின்போது, ஆயுதம் போட்டுக் குழந்தையை எடுப்பது, அதிக சிரமப்பட்டுக் குழந்தையை வெளியே தள்ள முயற்சிப்பது போன்றவற்றைத் தவிர்ப்பது நலம். பருமன் இந்தப் பிரச்சினைக்கான மிக முக்கிய காரணம் என்பதால், எடையைக் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்வதில் மிகுந்த எச்சரிக்கை அவசியம்.





# காசுதான் ஆன்மா - டாப்ஸி!

நல்ல கதை என்பதற்காக சம்பளத்தை குறைத்துக் கொண்டு நடிக்க மாட்டேன் என்கிறார் டாப்ஸி. ஆடுகளம் படத்தின் மூலம் தமிழில் அறிமுகமான டாப்ஸி, தற்போது பல படங்களில் பிஸியாக நடித்துக் கொண்டிருக்கிறார். வளர்ந்துவரும் நாயகிகள், நல்ல கதை என்றால் சம்பளத்தை குறைத்துக் கொள்ளத் தயார் என பேட்டி அளிப்பர். ஆனால் அது டாப்ஸி விடயத்தில் பொருந்தாது. நல்ல படம் என்றாலும் சம்பளத்தை குறைக்கமாட்டேன் என பேட்டி அளித்துள்ளார். இதுபற்றி அவர் கூறுகையில், காசுதான் கடவுள் என்று சொல்கின்றனர். என்னைப் பொறுத்தவரை காசுதான் ஆன்மா. அதை சுற்றித்தான் எல்லாம் சுழன்று கொண்டிருக்கிறது.


யாராவது பணம் தேவையில்லை என்று சொன்னால் அவர்களை மியூசியத்தில் வைத்துவிடுவார்கள். ஒருசில நாயகிகள், பணத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை, வேடத்துக்குத்தான் முக்கியத்துவம் தருவதாக சொல்கிறார்கள்.

நான் அப்படிச் சொல்லமாட்டேன். எனக்கு நல்ல படமும் வேண்டும், பணமும் வேண்டும். நல்ல படங்கள் என்பது தேடி-வரும். ஆனால் பணம் என்பது தேவையான ஒன்று. எனக்கென்று சில செலவுகள், பணத் தேவைகள் இருக்கிறது. நான் இளவயதுடையவளாக இருந்தாலும் பணத்தின் மதிப்பு தெரியும். சினிமா என்பது ஒரு வியாபாரம். அதன் விதிகளுக்கு ஏற்பவே எனது பயணத்தை வகுத்துக் கொண்டிருக்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# தமிழில் காலூன்றும் யாஷ் ராஜ் பிலிம்ஸ்!

ரன்வீர் சிங், அனுஷ்கா ஷர்மா நடிப்பில் வெளியான இந்திப் படம் Band Baajaa Baaraat. இப்படத்தினை யாஷ் ராஜ பிலிம்ஸ் தயாரித்தது. பெரும் வரவேற்பை பெற்ற இப்படத்தின் தமிழ் மற்றும் தெலுங்கு ரீமேக் உரிமைக்கு கடும் போட்டி நிலவி வந்தது. ஆனால் யாஷ் ராஜ் நிறுவனம், தங்களது நிறு வனமே தமிழ், தெலுங்கு பதிப்பினை தயாரிக்கும் என்று அறிவித்தது. தென்னிந்தியாவில் யாஷ் ராஜ் நிறுவனம் தயாரிக்கும் முதல் படமாக இப்படம் அமைய இருக்கிறது. முன்னர் ரன்வீர் சிங் வேடத்தில் நானி நடிப்பார் என்று தகவல்கள் வெ-ளியானது. ஆனால் அத்தகவலை அவர் மறுத்தார். தற்போது யாஷ் ராஜ் நிறுவனமே படத்தைத் தயாரிப்பதால், நாயகனாக நடிக்க ஒப்புக் கொண்டார். விஷ்ணுவர்தனிடம் உதவி இயக்குனராக பணிபுரிந்த கோகுல் இப்படத்தின் மூலம் இயக்குனராக அறிமுகமாகிறார். விரைவில் அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாக இருக்கிறது.





# இயக்கு

பொலிவூட் நடன இயக்குநர்
யான இவர், சினிமா முக்கியம்
நடிகர் பிரகாஷ்ராஜின் காதல்
இந்தியில் உருவாகும் சன்ஜீர்
ராம் சரண், பிரியங்கா சோப்ரா
பிரமாண்ட செட் போடப்பட்டிரு
நான் படம் இயக்கப்போவது எ
யோசித்து வந்தேன். இப்போது
ஸ்கிரிப்ட்டை
படிக்கக்




# உலக சினி

திருப்பதி பிரதர்ஸ் பட நிறுவனத்தின் தய
இயக்கி உள்ளார். இப்படத்தில் இளைய தில
ராமய்யா, ஜூனியர் பாலய்யா, ஜோ மல்லூரி
படத்தை உருவாக்கி இருப்பதாக இயக்குனர்
அவர் கூறுகையில், எளிதாக எடுக்கக் கூ
கும்கி படம் பண்ண யோசிக்கும்போது, ரொம்
அதையும் மீறி கும்கியை எடுத்துள்ளேன்.
கும்கி யானை பாகன் கதாபாத்திரத்தில்
அமெரிக்காவில் இருந்து வந்த விக்ரம் யானை
யோடு அவரை பழக வைத்தோம். படத்தில்
வழக்கு, கதாபாத்திரங்களை படத்துக்கு பெ
அரைக்காமல் வித்தியாசமாக கொடுக்க க
ஒரு சகோதரனாக எனக்கு தோள் கொடுத்
சுதந்திரத்தையும் அளித்தார். மொத்த பட
உலக சினிமா தரத்துக்கு கும்கி படம் வ



# கல்யாணத்துக்குமுன் சேர்ந்து வாழ்வதில் தப்பில்லை

கல்யாணத்துக்கு முன் சேர்ந்து வாழ்வதில் தப்பில்லை என்றார் இலியானா. கேடி தமிழ் படம் மூலம் அறிமுகமானவர் இலியானா. அதன்பிறகு தெலுங்கு சினிமாவுக்கு சென்றுவிட்டார். தமிழில் பட வாய்ப்புகள் வந்தபோது ஏற்க மறுத்தார். இந்நிலையில் ஷங்கர் இயக்கிய நண்பன் படத்தில் அதிக சம்பளம் பேசப்பட்டதால் அதில் மட்டும் நடித்தார். இப்போது பொலிவூட்டில் நடித்துவருகிறார். ஹொலிவூட் கலாசாரம் மெதுவாக பொலிவூட், கொலிவூட்டுக்கு பரவியுள்ளது.

நட்பாக பழகும் ஹீரோ, ஹீரோயின்கள் ஒன்றாக சேர்ந்து வாழ்வதும் பின்னர் பிரேக் அப் என்று சொல்லிவிட்டு பிரிந்துவிடுவதும் திரையுலகில் சாதாரணமாகிவிட்டது. இந்த பாணியில் பிரபுதேவா, நயன்தாரா ஜோடி சேர்ந்து வாழ்ந்து பின்னர் பிரேக் அப் ஆயினர். அதேபோல் சித்தார்த்- ஸ்ருதி ஜோடியும் இந்த பாணியை பின்பற்றினார்கள். பொலிவூட்டில் சைப் அலிகான் - கரீனா கபூர் ஜோடி 5 ஆண்டுக்கும் மேலாக சேர்ந்து வாழ்ந்தனர். சமீபத்தில்தான் இவர்கள் சட்டரீதியாக திருமணம் செய்துகொண்டனர். மதராசபட்டினம் எமி ஜாக்சன், இந்தி நடிகர் பிரதீக்குடன் இதேபோல் வாழ்ந்து பின் பிரிந்தார்.

இந்த பாணியிலான வாழ்க்கைக்கு ஆதரவு தெரிவித்திருக்கிறார் இலியானா.

இந்தி படங்களில் நடித்துவரும் இலியானாவுக்கும் ஷாஹித் கபூருக்கும் நட்பு ஏற்பட்டுள்ளது. இவர்கள் ஜோடியாக பல இடங்களுக்கு சென்று வருகின்றனர். இது பற்றி இலியானாவ-ிடம் கேட்டபோது, மனதுக்கு பிடித்தவருடன் நட்பு பாராட்டு வது, டேட்டிங் செல்வது தப் பில்லை. நான் நவீன காலத்துப் பெண். என்னைப்பற்றி யார் என்ன கூறினாலும் அதுபற்றி கவலை இல்லை. சொல்ப வர்கள் ஏதாவது ஒரு குறையை சொல்லிக் கொண்டு தான் இருப்பார் கள். சேர்ந்து வாழ்வதில் என்ன தவறு இருக்கிறது என்று தடாலடியாக கருத்துத் தெரிவித்துள்ளார்.



தில்லு முல்லு



மாடப்புரம்

## மீண்டும் காவியத்தலைவனில் - ஏ.ஆர்

கொலிவூட்டில் வெயில், அங்காடித்தெரு, அரவான் உள்ளிட்ட படங்களை இயக்கியவர் வசந்தபாலன். இவர் தற்போது காவியத்தலைவன் என்ற பெயரில் புதிய படத்தை இயக்கவுள்ளார். இப்படத்திற்கு இசைப்புயல் ஏ.ஆர். ரஹ்மான் இசையமைக்கிறார். முதல்முறையாக இப்படத்தின் மூலம் ஏ.ஆர். ரஹ்மானுடன் இணைகி றார் வசந்தபாலன். ஏற்கெனவே காவியத்தலைவன் என்ற பெயரில் விஜயகாந்த் ஒரு படம் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.



## ...தனராகிறார் பிரகாஷ்ராஜ் மனைவி

... போனி வர்மா இயக்குனர் ஆகிறார். பிரகாஷ்ராஜ் மனைவி ... என்றாலும் கணவருக்குத்தான் முதலிடம் தருவேன் என்றார். ...மனைவி போனி வர்மா. அவர் கூறும்போது, தெலுங்கு ...படத்தின் சூட்டிங் ஐதராபாத்தில் நடந்தது. இப்படத்துக்காக ...வின் பாடல் காட்சிக்கு நடனம் அமைத்தேன். இதற்காக ...தது. அந்த ஞாபகம் மறைவதற்கு நீண்ட நாள் பிடிக்கும். ...ப்போது என்கிறார்கள். ஒரு சில கதைகளை ... முடிவு செய்துவிட்டேன். இந்த ... என் கணவர் பிரகாஷ்ராஜிடம் கொடுத்தேன். படித்துவிட்டு பாராட்டினார்.



மீது இருவர் சாய்ந்து

## ...மா தரத்தில் கும்கி

...ரிப்பில், கும்கி படத்தை மைனா பட இயக்குனர் பிரபு சாலமன் ...கம் பிரபுவின் மகன் விக்ரம் பிரபு, லட்சுமி மேனன், தம்பி ...மற்றும் பலர் நடித்துள்ளார்கள். உலக சினிமா தரத்தில் கும்கி ...பிரபு சாலமன் கூறியுள்ளார்.

...ய திரைக்கதையை படமாக எடுக்க எனக்கு விருப்பம் இல்லை. ... கடினமாக இருக்கும் என்று என்னிடம் பலரும் சொன்னார்கள்.

... விக்ரம் பிரபு, அல்லியாக லட்சுமி மேனன் நடித்துள்ளார்கள். ... பக்கம் போகவே அஞ்சினார். மலையாளம் அறிந்த யானை- ... விக்ரம் பிரபு நன்றாக நடித்துள்ளார். கதைக்குரிய வட்டார ...ாருத்தமாக பயன்படுத்தியுள்ளோம். அரைச்ச மாவையே ...மையாக உழைத்துள்ளோம். படத்தயாரிப்பாளர் லிங்குசாமி ...ுள்ளார். படம் தரமாக வர எனக்கு ஒத்துழைப்பையும், ...குழுவும் எனக்கு ஒத்துழைப்பு தந்ததை மறக்கமுடியாது. ... சிரத்தை எடுத்து உழைத்துள்ளோம்.

# தேன் கிண்ணம்

## பாவிகள் மீட்புக்காக

மாட்டுக் கொட்டிலில்
பிறந்த உமது
செல்வங்கள் இன்று
அகதிகளாக
அங்கலாய்த்து
நிற்கும் நிலைமாறி
படுகொலைகள் நிறுத்தப்பட்டு
அப்பாவிகள் சிந்தும்
கண்ணீர்கள் துடைக்கப்பட்டு
பாவப்பட்ட மக்கள் வாழ்வில்
இரத்தக் கறைகள் விலகி
பார் முழுவதும் பிழைக்க
இந்த நத்தாருக்காவது
பாவிகள் மீட்புக்காக
மீண்டும் வருவீரோ?



கே.பாலேந்திரன்
கொல்லுப்பிட்டி.

## நத்தார் புத்தாண்டு



இந்த உலகை உய்விக்க
வந்த உனக்கு
சிலுவைக் கொலையென்றால்
எங்கள் நிலை என்னரசே!
உன் வரவிற்கப்பாலும்
உலகெங்கும் பலிபீட(ம்)
ஆளறுவைக் காரர்களின்
ஆட்சிகளே நடக்கிறது!
பட்டாசுவெடி கொழுத்திப்
பாரெங்குங் கிளுகிளுத்து - உன்
நத்தாரைக் கொண்டாடி - அதில்
நல்லவர்கள் சிலரேதான் - நட்புடன்
உன்னடியை மன்றாடி!
கேளிக்கைகள் கூடி
இறைநேயர்
தேயக்கைகள்
கூடி இறைநேயர்
தேயங்கள் - எல்லாம்
கேலிக்குரியதாய்
ஆகிப்போம் போல
ஆண்டவரே என்ன இது?
அடுத்தும் நீ
பிறப்பு எடு!
அகிம்சாவாதியாய்
அன்று - உலகை
அடக்கியாண்டு அன்புயிர்களை
அடக்கி யொடுக்கித்
துன்புறுத்தி அடிமைகளாக்கும்
அரக்கர்களை - இரத்த
பிசாசுகளை அடக்கியொடுக்கி
அமைதிகாக்கும் - ஓர்
போர் வீரனாக
பேரரசனாக
சர்வ வல்லமையும்
பொருந்திய - எங்கள்
சர்வ ஈஸ்வரனே!
மீண்டும்
விண்ணிலிருந்து- ஓர்
போர்வீரனாக -எங்கள்
இயேசுவை இம்
மண்ணுக்கு
அனுப்புவீர்களாக!
பிறக்கின்ற
புத்தாண்டுகளில்
பிறப்பவரும் நீராக,
நடக்கட்டும் நத்தார்
புத்தாண்டு நலமாக!

பொன்.நவநீதன்,
பாண்டியிருப்பு -02,
கல்முனை.

## சாயச் சிவப்பு உன் இரத்தமா...?

மலைப் பள்ளத்திலே
கள்ளமில்லா களைவடியும்
வதனத்திலே...

முக்காட்டின் மேல்
வரிக் கூடையும்
சப்பித் துப்பிய
சாய வடிநீர் கோடு
ஈயமென இதயத்தை
உருக்குதம்மா...

மறைநுதலில் அரும்பி
வியர்வைப் பூக்களை...
கைவிரல் அழிக்கையிலே...
கொழுந்தெடுத்த
விரலிடுக்கிலே...
தளும்பெடுத்த - காயம்
உன் இரத்தமா?... கண்ணே...
சாயச் சிவப்பா...?

யாழ்.அஞ்சனா.



## ஈழத்துக் கவிஞர்கள்



### வெற்றிவேல் துஷ்யந்தன்

ஈழத்தின் இளம் கவிஞர்களில் குறிப்பிடத்தக்கவர். வடமராட்சி அல்வாயைச் சேர்ந்தவர்.

நெல்லியடி மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற இவர் ஜீவநதி சஞ்சிகையின் துணை ஆசிரியராக பணிபுரிகிறார்.

இவரது நூல்கள்:-
வெறிச்சோடிய மனங்கள் - 2010
மொழி பெயர்க்கப்படாத மௌனங்கள் - 2011

போர்க்காலத்திற்குப் பின்னான மக்கள் அவலங்களை பதிவுசெய்வதில் இவரது கவிதைகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

ஜீவநதி, மல்லிகை, ஞானம், படிகள், நாம், யாதும், இருக்கிறம் போன்ற சஞ்சிகைகளிலும் இனியது இணையத்தளம், காற்றுவெளி மின்னிதழ் என்பவற்றிலும் இவரது கவிதைகள் வெளிவந்துள்ளன.

### இவரது கவிதைகளில் ஒன்று

### நிலம் தின்னிக் கழுகுகள்

இன்று நேற்று
மட்டுமல்ல
காலம் காலமாக
நிலம் தின்னிக் கழுகுகள்
நம்மைச் சுற்றிக் கொண்டே இருக்கின்றன.

முகங்களில் ஆயிரம் ஆயிரம்
கொலைவெறிகளோடும்
மனங்களில் லட்சோப லட்ச
வக்கிரங்களோடும்
துரத்திக் கொண்டுதான் இருக்கின்றன
இப்போதுகளிலும்.

ருசி பேதம் பார்த்துத் தான்
ஒருவேளை
நம்மை துரத்திக்கொண்டிருக்கின்றனவோ?
மனம் அங்குமிங்குமாய்
ஓடிக் கொண்டிருக்கின்றது
நம் ஓட்டத்திற்கு சரி சமாந்தரமாய்.

அவ்வளவு ருசியோ
எங்கள் நிலம்?
கேள்விகள் திரும்பதிரும்ப
திரிபுபட்டுக் கொண்டிருக்கின்றது.

எந்தவிதமான பரிவுகள்
எதுவுமின்றி
பரந்து கிடக்கும் எங்கள்
அண்டவெளியில் இருந்தே
அகற்றிட வேண்டும் என்ற
இறுமாப்பில்
நிலம் தின்னிக் கழுகுகள்
வெகு குறியாய் இருக்கின்றன.

நிலம் தின்னும்
சாட்டுக்களில்
எங்கள் மயில்களையும் குயில்களையும்
அவ்வப்போதுகளில்
சீண்டிக் கொண்டே இருக்கின்றன
கொடும் கழுகுகள்.

கூடுகட்டி குடியேறியிருக்கும்
சின்னஞ்சிறிய குருவிகளின்
கூட்டுக்குள்
கழுகுகள் தமக்கான
இடங்களை தேடிக்கொண்டிருக்கின்றன
வலுக்கட்டாயமாக.

ஒட்டகமும் எஜமானும் கதையை
நிஜ விம்பங்களாக
நாம் இப்போதுதானே
காண்கின்றோம்.

வேலணையூர் தாஸ்

## இறவாத நினைவுகள்

சிரட்டை பொறுக்கி
சிறு அடுப்பு மூட்டி
மண்சோறு செய்து
மகிழ்ந்த காலந்தன்னை
மறக்கத்தான் முடியுமா?
ஆண் - பெண் பிரிவின்றி
நட்புக்கரம் கோத்து
நடைபயின்ற பள்ளிக்
காலங்கள் இனி வருமா?
மண்ணில் வீடு கட்டி
விளையாடி மார்கண்டு மாமாவின்
தீப்பெட்டி திருடி
திருட்டுத்தனமாய்
தம் அடித்த
ஆனந்தமான நினைவுகள்
நெஞ்சை விட்டு அழிந்திடுமா
பள்ளிக்கூடத்தில்
பந்துவிளையாடி
பக்கத்து காணியில் பந்து
எறிந்து பக்குவமாய்
வேலிஏறி பந்துடன் அங்கே
பத்து பன்னிரெண்டு
புளுக்கொடியல் எடுத்து
தலைமை வாத்தியாரிடம்
வாங்கிக் கட்டியநினைவுகள்
குடாக் கேணியில்
கப்பல் செய்துவிட்டு
கொல்லந்தோட்டத்தில்
குதிரைவண்டில் விளையாடிய
இனிமையான நினைவுகள்
கடலுப்பிட்டி அன்ரியிடம்
கத்தி வாங்கி
கள்ளத்தனமாய் இளநீர்
சீ்டித்து
முன்வீட்டு செல்லம்மா ஆச்சியிடம்
தேநீர் குடித்தால் தனிரகம் தான்
பள்ளிவாசல் கடற்கரையில்
வாடிவீடு அமைத்திருந்த
நிமலன் சம்மாட்டியாரிடம்
பால் சுறாவேண்டி
குறிஞ்சாபோட்டு ஒடியல்
புட்டு அவித்த காலங்கள்
இனிவருமா?
அந்த இனிமையான காலம் தன்னை
கடவுளாலும் தரமுடியுமா?

கதிர், நெடுந்தீவு.

கலாபூஷணம்
கே.எஸ்.ஆனந்தன்.

அத்தியாயம் 07




"நீலவேணி?"

"தேவி"

"உதவி செய்ய முடியாத தோழியாய் இருந்தாலும் பரவாயில்லை. அவரைப் பற்றிய அவதூறாக ஏதும் கூறி என் கோபத்தை தூண்டிவிடாதே"

"தேவி!! நான் நல்லதோர் செய்தியுடன்தான் தங்களிடம் ஓடிவந்தேன். இனி அதைச் சொல்வதற்கில்லை. நீங்களுண்டு உங்கள் அவர் உண்டு. வருகின்றேன்"என்று திரும்பினாள்.

"அடியே! என் அன்புத் தோழி உன்னை விட்டால் இந்த மதுரவல்லிக்கு யார்தான் உதவுவார்? சொல்லிவிடேன் பிரிய தோழி" என்று அவளைக் கட்டியணைத்தாள்.

சில விநாடி நேரத் மௌனமாயிருந்துவிட்டு இரகசியமாக எதையோ இளவரசியின் செவியில் கூறினாள்.

"நிஜமாகத்தான் சொல்கிறாயா? நம்பலாமா?" ஆவலுடன் அவளை உலுப்பினாள்.

"தீர விசாரித்துத்தான் கூறுகின்றேன்."

"தோழி என்றால் இப்படித்தானிருக்க வேண்டும்" என்று அவளை தூக்கி ஒரு சுற்றுச்சுற்றி இறக்கிவிட்டாள்.

அதே சமயம் அறைக்கதவை யாரோ தட்டும் சப்தமும், தொடர்ந்து நடந்துவரும் காலடி ஓசையும் கேட்டது.

***

காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. சந்தர்ப்பங்கள் காலச்சுழற்சியில் சிலருக்குச் சாதகமாகவும். சிலருக்குப் பாதகமாகவும் அமைந்து விடுவதுண்டு. விவசாயத்தில் நலிவு ஏற்பட சிங்களச் சிற்றரசர்கள் தலை நகர்களை தென்மேற்கு கரையோரங்களில் நிறுவியதுடன் அரபு வணிகர்களுடனான தொடர்புகளை மேம்படுத்த முனைந்தனர். இதுதான் தருணமென எதிர்பார்த்திருந்த கனகசூரிய சிங்கையாரியனும், பெரிய உடையாரும் மன்னரின் அனுமதியுடன் இராச்சிய எல்லைகளை விஸ்தரித்துக் கொண்டதுடன் அப்பகுதிகளில் வரிவசூலிப்பிலும் ஈடுபட்டனர். சிங்கள சிற்றரசர்களின் பகுதியிலும் திறைபெறத் தொடங்கினர்.

அரபு வணிகர்கள் உள்நாட்டிலிருந்து கறுவா முதலிய பொருட்களைக் குறைந்த விலையில் பெறும் நோக்குடன் மேற்கொண்ட முயற்சிகள் வழிப்பறிக் கொள்ளையர்களின் அச்சுறுத்தலுக்குள்ளான வேளைகளில் அவர்களுக்குப் பாதுகாப்பளித்ததுடன் கரையோரங்களில் வணிக நிலையங்களை நிறுவிட வணிகத்திலும் பெரு வெற்றியடைந்து கொண்டிருந்தனர். இக்காலப்பகுதியில் நீர்கொழும்பு, வத்தளை, ஆகிய இடங்களில் தமிழரசின் வணிக நிலையங்கள் இயங்கிட அரபு வணிகர்களுக்கு வாசனைத் திரவியங்களை விற்றுப் பொருளீட்டிக் கொண்டிருந்தனர்.

சிங்கள சிற்றரசர்களிடம் ஒற்றுமையில்லாத ஓர் தடுமாற்ற நிலையை அவதானித்து வந்த பெருந்தனக்காரனான அழகக்கோனராவுக்கு ஆட்சிப்பீடத்தில் அமரும் ஆசை தோன்றவே சிற்றரசர்களுக்கு உதவுவது போல வலிந்து உதவிசெய்ய ஆரம்பித்தான். அதேசமயம் தனது அதிகாரத்தினையும் செலுத்த முனைந்தான். அத்துடன் தமிழரசின் வளர்ச்சி, விஸ்தரிப்பு, வணிகத்தைச் சாட்டாக வைத்துச் சிங்களப் பிரதேசங்களில் அவர்கள் செலுத்தும் ஆதிக்கம் யாரையும் ஒடுக்க வேண்டும் என சிங்கள சிற்றரசர்களுக்கு ஆலோசனை வழங்கலானான். அத்துடன் ஜெயவர்த்தனபுரக் கோட்டையில் அமைந்த அழகு மாளிகையை அரண்மனையாகக் கொண்டு ஆட்சிப்பீடத்தில் அமரும் தனது திட்டத்தையும் மறைமுகமாகச் செயற்படுத்திக் கொண்டிருந்தான்.

***

கதவு தட்டும் சத்தம் கேட்டு திடுக்குற்ற சேரநாட்டு இளவரசியும், தோழி நீலவேணியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு நின்றனர். அவர்களுடன் வந்த பணியாள் ஒருத்தியே அப்படிக் கதவைத் தட்டியதுடன் திறந்து கொண்டு ஓடி வந்தது மதுரவல்லிக்கு முன் தலை வணங்கி நின்றாள். எதுவும் பேசாமல் அவளை ஏற இறங்கப் பார்த்ததுடன் விழி அசைவாலேயே எதற்காக இங்கே வந்தாய் எனவும் தலையை அசைத்தாள்.

"தேவி மன்னர் பெருமானுக்கு உடல் நலமில்லை என எல்லோரும் அமளிப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அதனால்..." என்று மிகுதியை கூறுமுன்பே வில்லிலிருந்து புறப்பட்ட அம்பென விரைந்தாள் மதுரவல்லி.

மன்னர் குணவீரர் சயன அறையில் படுத்திருந்தார். அரண்மனை வைத்தியர் அவருக்கு சிகிச்சை செய்து கொண்டிருந்தார். வெளியே கூடியிருந்தனர். பெரிய உடையார் வாசலில் நின்றிருந்தார். உள்ளே கனகசூரியனும், மன்னரின் மனைவி சுந்தரவல்லி நாச்சியாரும் மன்னரையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

சில விநாடிப் பொழுதில் மன்னர் கண் திறந்து பார்த்தார். எல்லோர் முகத்திலும் புன்னகை பூத்தது. அதேவேளையில் தான் அங்கே விரைந்து வந்தாள் சேரநாட்டு இளவரசி மதுரவல்லி. வாசலில் புன்னகைத்தவாறு நின்றிருந்த பெரிய உடையாரிடம் மதுரவல்லி கேட்டாள்.

"அமைச்சர் பெருமானே! மன்னர் பிரானுக்கு என்ன? இப்பொழுதுதான் சேடிப் பெண் வந்து கூறினாள்."

அவளுடைய தவிப்பைப் பார்த்த பெரிய உடையாரின் மனம் பாகாய் உருகியது. அவளுடைய நீல நயனாங்களில் துளித்து உருண்டோட ஆயத்தமாகியிருந்த நீர்த்திவலைகளைத் துடைத்துவிட்டு "மகளே அவருக்குப் பயப்படும்படியாய் ஒன்றுமில்லை. இடைக்கிடையே இப்படி மயக்கம் வருவது தான். உள்ளே சென்று பார்க்கலாம்" அவளையும் அழைத்துக் கொண்டு உள்ளே சென்றார்.

(தொடரும்...)

தினந்தோறும் வெளிவருகிறது

விலை 10/=

தினமுரசு நாளிதழ்

தினந்தோறும்
கல்விமுரசு இணைப்பு

- கனதிமிக்க கட்டுரைகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- குட்டிக் கதைகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்" - "மெய்தான் பாருங்கோ" "பதிவிறக்கப் பெட்டகம்"

A/L, O/L மற்றும் புலமைப் பரிசில்
மாணவர்களுக்கான
மாதிரி வினாத்தாள்கள் – விடைகள்
ஒவ்வொரு நாளும்
தினமுரசில் வெளியாகிறது.

தினமுரசு நாளிதழ்
ரூ. 10/= மட்டுமே

இப்போது நீங்கள் அறிய விரும்பும்
அன்றாடச் செய்திகள் அனைத்தையும்
பத்தே ரூபா
கொடுத்து படித்துக்கொள்ள முடியும்



பெண்கள் பக்கத்திற்குரிய தரமான ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப் படுகின்றன.

# லேடீஸ் ஸ்பெஷல்



## 1 முதல் 3 வயது குழந்தைகளுக்கான உணவு

1 முதல் 3 வயது வரை குழந்தைகளின் மூளை வளர்ச்சி அதிகமாக இருக்கும். இந்தக் காலகட்டத்தில் கொழுப்பு நிறைந்த உணவுகள் அவசியம். குழந்தைகளின் எடைக்கு ஏற்ப ஒரு கிலோவுக்கு 100 கலோரி, 1.2 கிராம் புரோட்டீன் மற்றும் விற்றமின் ஏ, சி சத்துள்ள உணவுகளைக் கொடுக்க வேண்டும்.

சாப்பிடாமல் அடம்பிடிக்கும் குழந்தைகளின் எதிர்ப்புச் சக்தி குறையும். இதைத் தவிர்க்க மஞ்சள் நிற பழங்களைக் கொடுக்கவேண்டும். தக்காளி, ஒரேஞ்சு கொடுக்கலாம். கரட், உருளைக்கிழங்கு, மீன், கீரை ஆகியவற்றையும் சேர்க்கவேண்டும். இவற்றிலிருந்து விற்றமின் A கிடைக்கிறது.

கொழுப்புச்சத்து அதிகம் உள்ள பால் கொடுக்கவேண்டும். இது, நரம்பு வளர்ச்சிக்கு நல்லது. காலையில் ஒன்றேகால் கப் சாதம் மற்றும் மசித்த உருளைக்கிழங்கு கொடுக்கலாம். காய்கறி சேர்த்து சமைத்த உப்புமா கொடுக்கலாம்.

இடைப்பட்ட நேரங்களில் வேகவைத்த சுண்டல், கால் கப் பழச்சாறு மற்றும் கால் கப் பழக்கலவை கொடுக்கலாம். மதிய உணவில் ஒரு முட்டை, மீன், கொடுக்கலாம். கீரையை நன்கு வேகவைத்து சாதத்துடன் பிசைந்து கொடுக்கலாம். வெண்ணெய், எண்ணெய் வகைகள் சேர்த்துக் கொள்ளலாம்.



## நடிகை மானுவின் இளமை இரகசியம் என்ன?

'காதல் மன்னன்' படம் வெளியாகி 15 வருடங்களாகப் போகிறது. அதன் ஹீரோயின் மானுவோ 15 வயது குறைந்த மாதிரி இருக்கிறார். இப்போதும் ஹீரோயினாக நடிக்கலாம். கல்யாணத்துக்குப் பிறகும் அத்தனை அழகாக, இளமையாக இருக்கிறார் காதல் மன்னன் கண்ணழகி!

சந்தோஷமான கல்யாண வாழ்க்கை அமையற பெண்களுக்கு, முகத்துல ஒரு அழகும் பளபளப்பும் கூடறதைப் பார்க்கலாம். நடிப்பிலிருந்து விலகிய பிறகு நடனத்தில் பிஸி. எடையைக் கட்டுப்பாட்டில் வைக்க, நடனப் பயிற்சியை மட்டுமே நம்புவதில்லையாம் இவர்.

"தினமும் ஜிம் போக முடியாது. ஒருநாள் விட்டு ஒரு நாள் போவேன். மற்ற நாள்கள்ல யோகா பண்ணுவேன். எனக்கு தினம் தியானமும் சூர்யநமஸ்காரமும் பிராணாயாமமும் பண்ணியாகணும். உடம்பு இறுக்கமாயிட்டா, அப்புறம் உடம்புல சேர்ந்த கொழுப்பு வெளியேறாது. நம்ம சொன்னபடியெல்லாம் வளைஞ்சு கொடுக்கற நிலையில உடம்பு இருந்தால்தான், கொழுப்பும் சேராது. இளமையாகவும் தெரிவீங்க... அதுக்கு யோகாதான் சரியான தெரிவு.

நேரம் கிடைக்கிற போதெல்லாம் நீச்சல் பண்ணுவேன். உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரைக்கும், ஒட்டுமொத்த உடம்புக்குமான எக்சர்சைஸ்னா அது நீச்சல் தான். தவிர சுவாசம் சீராகி, ஒருத்தரோட நுரையீரல் நல்லா வேலை செய்யவும் அது உதவி செய்யும். உள் உறுப்புகளுக்கும் நல்லது" என்கிறவர், உடற்பயிற்சிக்கு இணையாக உணவுக்கட்டுப்பாட்டையும் நம்புகிறார்.

"காலைல எழுந்ததும் முதல் வேலையா வெந்தி குடிப்பேன். அது நம்ம உடம்பை சுத்தம் செய்யும். மரக்கறி சாப்பாடுதான் என் பேவரைட். முட்டை மட்டும் விதிவிலக்கு. காலை சாப்பாட்டுக்கு பிரெட் ஆம்லட் இல்லைன்னா 2 ஸ்லைஸ் பிரெட், கூட கொஞ்சம் வெண்ணெய் இல்லைன்னா ஒரு கப் கார்ன் பிளேக்ஸ் எடுத்துப்பேன். வழக்கமான இட்லி, தோசை பக்கமெல்லாம் திரும்பறதே இல்லை.

ஆரோக்கியத்துக்கும் அதிக எடைக்கும் வித்தியாசம் 40 சதவீதம் அதிக உடற்பயிற்சிதான். கொஞ்சம் திட்டமிட்டுச் செயற்பட்டால் ஸ்லிம் ஆவது நிச்சயம்!

சில மணி நேரங்களுக்கு ஒருமுறை கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிடுவது நல்லதொரு முறை. முயற்சித்துப் பாருங்கள்.

மதிய உணவும் லைட்டாதான் இருக்கணும் எனக்கு. ஞாயிற்றுக்கிழமைகள்ல மட்டும்தான் அரிசி சாதம். மற்ற 6 நாட்களும் மதியத்துக்கு நிறைய காய்கறி, கொஞ்சம் தயிர், பிரெட் அல்லது சப்பாத்தி. சப்பாத்தி, தால், சாலட்னு சிம்பிள் மெனுவோட சாயந்திரம் 6:30-7 மணிக்குள்ள என்னோட டின்னர் முடிஞ்சிடும். நைட் படுக்கறதுக்கு முன்னாடி ஏதாவது ஒரு பழம் அல்லது கொஞ்சம் பால்... பொதுவா எல்லாரும் நிறைய ஜூஸ் குடிக்கச் சொல்வாங்க. ஜூஸா குடிக்கிறபோது, அதுல சேர்க்கிற எக்ஸ்ட்ரா சீனி, உடம்புக்கு நல்லதில்லைங்கிறதால என் லிஸ்ட்டுல அது இல்லை. இதுதான் என் ரொட்டீன்.

சமையலுக்கு ஆள் வச்சுக்கலை. நானேதான் சமைப்பேன். என் ஹஸ்பெண்ட் கேன்சர் சேர்ஜன். ஹெல்த் விஷயத்துல என்னைவிட அவர் இன்னும் அக்கறையா இருப்பார். எண்ணெய் இல்லாத சமையல் என் ஸ்பெஷல். எந்த மாதிரி அயிட்டத்தையும் எண்ணெயே இல்லாம சமைச்சிடுவேன்.

பெண்களோட ஆரோக்கியத்துக்கும் இளமைக்கும் மூணு விஷயங்கள் அவசியம். போதுமான தூக்கம்.... அப்புறம் கல்சியம் மற்றும் மல்ட்டி விற்றமினும் மன அமைதியையும் கொடுக்குதோ, அதை நினைச்சுக்கிட்டே ராத்திரி தூங்கப் போங்க. காலைல உங்க முகத்துல வழக்கத்துக்கு மாறான ஒரு புது அழகைப் பார்ப்பீங்க... ட்ரை பண்ணிப் பாருங்க! ஆரோக்கியத்தில் ஆரம்பித்து, அழகு இரகசியத்துடன் முடிக்கிறார் மானு.

## பெண்களை துரத்தும் தொலைபேசி தொல்லைகள்!

**செல்லம் சாப்பிட்டிட்டியா?** என்று கேட்பதில் தொடங்கி, 'குட் நைட் டியர்' என்று வழிவது வரை, செல்போன் வழியே குறுஞ்செய்திகளை அனுப்புகிறார்கள். அறிவியல் நவீன தொழில்நுட்பமான எம்.எம்.எஸ்., தகவல் தொடர்புக்கு அவசியமான அற்புத தொழில்நுட்பம் என்றால் அதில் மிகையில்லை.

ஆனால் அவற்றால் எல்லையற்ற பிரச்சினைகள் முளைத்திருப்பதால் குற்றம் சொல்லாமலும் இருக்க முடிவதில்லை. படம்பிடிக்கவும், பிறகு பயமுறுத்தவும் பயன்படும் "எம்.எம்.எஸ்கள் பல பெண்களின் வாழ்க்கையை பாடாய்ப்படுத்திக் கொண்டிருக்கிறது. அதனால் பெண்கள் இதில் மிகுந்த விழிப்புணர்வு பெறவேண்டும். பெண்கள் இந்த தொந்தரவில் இருந்து தப்பிக்க இதோ சில ஆலோசனைகள்:

* பெண்கள் இரகசிய செய்கைகளில் ஈடுபடுவது தங்கள் சுயகௌரவத்திற்கு ஏற்படுத்தும் ஆபத்து என்பதை புரிந்துகொள்ள வேண்டும். அதன்மூலம் அவர்களது குடும்ப கௌரவத்திற்கும் இழுக்கு ஏற்படக்கூடும். சமூக நெருக்கடிகளையும் அது உருவாக்கும். ஆகவே இத்தகைய இழப்புகளை எல்லாம் நினைவில்கொண்டு, வெளிவட்டார தொடர்புகளை பெண்கள் எல்லைக்குள் வைத்துக்கொள்ள வேண்டும்.

* பெற்றோரின் கண்காணிப்பைத்தாண்டி, நகரங்களில் தங்கி படிக்கும்- வேலைபார்க்கும் பெண்கள்தான் அதிகமாக 'எம்.எம்.எஸ்' வலையில் விழுகிறார்கள். கட்டுப்பாடற்ற சுதந்திரம் அவர்களை கட்டவிழ்த்துவிடுகிறது. தனிமையும், நகரச்சூழலும் யாருடனாவது நட்பு கொள்ளத் தூண்டுகிறது.

* பெண்களின் பலவீனத்தை தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ளும் இளைஞர்கள் தங்கள் வலையில் அவர்களை எளிதில் வீழ்த்திவிடுகிறார்கள். கண்டகண்ட புகைப்படங்கள், இரட்டை அர்த்த எஸ்.எம்.எஸ். களை அனுப்பி வைப்பார்கள். "இதிலெல்லாம் தவறு இல்லை, இதெல்லாம் சாதாரண விஷயம்" என்று மூளைச்சலவை செய்வார்கள்.

அவர்களை நம்பியோ அல்லது பதிலுக்குப் பதிலாகவோ பெண்களும் அதே பாணியில் ஏதாவது எஸ்.எம்.எஸ். செய்துவிட்டால் போதும். அந்த சிறு துரும்பை வைத்துக் கொண்டு 'பிளாக்மெயில்' செய்தே தங்கள் காரியத்தை சாதித்துவிடுவார்கள்.

* பணம் தேவைப்பட்டால் பணம் பறிப்பார்கள். ஊர் சுற்ற, உல்லாசம் அனுபவிக்க என்று தாங்கள் இழுத்த இழுப்பிற்கு எல்லாம் அந்த பெண்களை வளைத்து பயன்படுத்திக் கொள்வார்கள்.

* இந்த சிக்கலில் மாட்டிக்கொள்ளும் பெண்கள் அவமானத்திற்குப் பயந்து மீள முடியாமல் தவிப்பார்கள். தவறான முடிவுகளும் எடுத்துவிடுவார்கள்.

* பெண்கள் ஒருபோதும் வலைவீசும் எஸ்.எம்.எஸ்.களுக்கு பதிலளிக்கக் கூடாது. செல்போனிலும் தேவையின்றி பேசக்கூடாது. பெண்களின் ஆபாசம் கலந்த பேச்சு பெரும்பாலும் ஆண்களால் பதிவு செய்யப்படுகிறது. எனவே இத்தகைய பேச்சுக்களை பெண்கள் தவிர்க்க வேண்டும். இல்லையெனில் பாதிப்பு ஆண்களுக்கு இல்லை பெண்களுக்கு தான். கவனமாக இருங்கள்.

## பரிசு 1000/- ரூபா. வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

**பரிசுப் போட்டி இல :-346**

**கேள்வி : குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டிய விற்றமின் A உணவுகள் எவை?**

**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:-25.12.2012**

விடையைக் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 346
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :- 344 இற்கான விடை :- ஜனநாயக தேசிய லீக் கட்சி.
பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:-
அ.மணிமேகலை, 87/55 புதுஸ்தி உதுளம், மன்னார்.

346

பெயர் : ____________________
முகவரி : ____________________
____________________
தே.அ. அட்டை இல : ____________________
விடை : ____________________
____________________
கையொப்பம் : ____________________

## சொக்லேட் நட்ஸ் கேக்

கோதுமை - அரை ஆழாக்கு (100 கிராம்)
தூளாக்கிய சீனி -அரை ஆழாக்கு
முட்டை - இரண்டு
பட்டர் - 100 கிராம்
நட்ஸ் (முந்திரி, பாதாம், பிஸ்தா) இரண்டு மேசை கரண்டி
பேக்கிங் பவுடர் - கால் தேக்கரண்டி
உப்பு - அரை சிட்டிக்கை
சொக்லேட் எஸன்ஸ் - அரை தேக்கரண்டி
கொக்கோ பவுடர் - ஒரு மேசை கரண்டி
கரம் மசாலா - கால் தேக்கரண்டி ( பட்டை, ஏலம், கிராம்பு தூள்)

**செய்முறை**

கோதுமை மா, பேக்கிங் பவுடர்,உப்பு, சலித்து கொள்ளவும். பட்டர், சீனி சேர்த்து நன்கு பிளெண்டரால் அடிக்கவும். கலர் மாறியதும் முட்டையை நுரை பொங்க அடித்து சிறிது சிறிதாக சேர்த்து கிளறவும். அடுத்து கோதுமை கொஞ்சம் கொஞ்சமாக சேர்த்து கிளறவும். அடுத்து கரம் மசாலா, கொக்கோ பவுடர், எஸன்ஸையும் சேர்த்து கிளறி மேலே நட்ஸ் வகைகளை தூவி மைக்ரோவேவ் ஓவனின் 7 நிமிடம் வைத்து எடுக்கவும்.



## இலங்கையின் சமாதானத்துக்கான நகர்வுகளில்

# முக்கியமான சம்பூர் மக்கள்

பிரகஸ்பதி

**சம்பூர் மக்கள் உண்ண உணவுமின்றி வெள்ளத்தின் மத்தியில் சிரமங்களுடன் வாழ்கின்றனர். நலன்புரி நிலையங்களிலுள்ள மலசலகூடங்கள் மழைவெள்ளம் காரண- மாக நிரம்பிய நிலையில் காணப்படுகின்றன. கடந்த வருடம் 300 ஏக்கர் வயல் நிலங்களில் நெற்செய்கை மேற்கொள்ள அவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட போதும், இந்த வருடம் மறுக்கப்பட்டுள்ளது. அவர்களின் வாழ்வாதார உரிமைகள் மறுக்கப்பட்டு சமாதானத்துக்கான யுத்தத்திற்கு ஆரம்பமாக அமைந்த திருமலை மாவட்டத்தினைச் சேர்ந்த 1000க்கும் அதிகமான குடும்பங்கள் நெருக்கப்பட்டு வருகின்றனர்.**

**கிழக்கு** மாகாணத்தின் முக்கிய இருவர் இரு வேறு வேறு விடயப்பரப்புகளை சமாதானம் பற்றித் தெரிவித்திருக்கின்றார். மீள்குடியேற்றம் பற்றி முக்கிய பிரச்சினையாக இருக்கின்ற சம்பூர் பற்றி திருமலை மறை மாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளையும், சமாதானத்துடன் கூடி தீர்வுக்கு கிழக்கு மாகாண சபை உதவுவது பற்றி கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ. மஜீத்தும் பேசியிருக்கிறார்கள். இவை பற்றி இவ்வாரம் ஆராயலாம்.

சம்பூர் அனல்மின் நிலையம் என்பது இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள சம்பூர் எனுமிடத்தில் அமையப்பெறவுள்ள அனல்மின் நிலையம். இலங்கையில் அதிகரித்துவரும் மின்சாரத் தேவையினை நிவர்த்தி செய்ய அனல் மின் நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற திட்டம் 1985ம் ஆண்டுகளில் அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டது.

அரசாங்கப் புள்ளிவிபரத் தகவல்களின்படி இலங்கையின் மின்சாரத் தேவை வருடாந்தம் 8- 9 சதவீதத்தினால் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 1985 களிலும் அனல் மின் நிலையம் அமைக்க திட்டமிடப்பட்ட போதும் பல காரணங்களினால் அது தடைப்பட்டது. சம்பூரில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது இலங்கையின் இரண்டாவது அனல்மின் நிலையமாகும்.

இலங்கையின் முதலாவது அனல் மின்நிலையம் புத்தளம் மாவட்டத்தில் நுரைச்சோலைப் பிரதேசத்தில் அமைக்கப் பட்டுள்ளது. நுரைச்சோலை அனல்மின் நிலையத்திற்கு சீனா அரசாங்கம் உதவி புரிந்து வருகின்றது. சம்பூர் அனல் மின் நிலையத்தினை இலங்கை மின்சார சபையும், இந்தியா என்.ரீ.பீ.சி. கம்பனியும் இணைந்து உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. இதற்கான கூட்டு ஒப்பந்தம் செப்டம்பர் 6 2011இல் கைச்சாத்திடப்பட்டது.

சம்பூர் அனல் மின் நிலையத்தின் வேலைத்திட்டத்திற்காக 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தச் செலவில் இந்தியா, இலங்கை இரு நாடுகளும் சரி பாதியாக ஏற்றுக் கொள்ளவுள்ளன. இதிலிருந்து 500 மெகா வாட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்யமுடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியா 200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடனுதவி வழங்க உள்ளதோடு மின்உற்பத்தி நிலையத்திற்கான 500 ஏக்கர் காணி, உட்கட்டமைப்பு வசதி, அபிவிருத்தி என்பவற்றை இலங்கை வழங்குகிறது. சம்பூர் அனல்மின் நிலையத்திற்கான உபகரணங்களை இந்தியா வழங்கும். 25 வருடங்களுக்கு குறித்த ஒப்பந்தம் அமுலில் இருக்கும். இத்திட்டம் 2016 ஆம் ஆண்டு நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த இடத்தில்தான் சம்பூர் மக்கள் பற்றி, கிழக்கில் மாத்திரமல்ல இலங்கையின் அனைத்து இனமக்களும் சமாதானத்துடன் வாழவேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் நீண்ட காலமாகச் செயற்பட்டுவரும் திருமலை மட்டு மாவட்டங்களின் மறை மாவட்ட ஆயராக இருந்து செயற்பட்டு வந்து தற்போது திருமலை மறை மாவட்ட ஆயராக பதவியேற்றிருக்கும் அருட் பேரருள் திரு கலா நிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளையின் கருத்து முன்னே வருகிறது.

மனித உரிமைகளை புறந்தள்ளிவிட்டு அனல் மின் நிலையத்தை பலாத்காரமாக அமைப்பதற்கு இந்தியா ஒருபோதும் விரும்பாது. மக்களின் சொந்த நிலங்களைப் புறந்தள்ளியே ஒப்பந்தத்துக்கமைய அனல்மின் நிலையத்தினை சம்பூரில் அமைப்பதற்கு இந்தியா விரும்புவதாக அவர் தெரிவித்திருக்கிறார்.

இந்த கருத்துக்களை இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே.காந்தா கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்த வேளை தன்னிடம் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்ததாக ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை கூறியிருக்கிறார்.

ஆனால், உயர் பாதுகாப்பு வலயம் எனக் கூறி சம்பூரில் இருந்து வெளியேற்றப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழ் மக்களிற்கு இப்போது நிவாரணங்களும் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் அவர்கள் பட்டினிச்சாவை எதிர்கொண்டுள்ளனர். கிளிவெட்டி, மணற்சேனை, பட்டித்திடல், கட்டைபறிச்சான் ஆகிய இடங்களில் உள்ள தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள குடும்பங்களின் நிலவரங்கள் மிகமோசமான நிலைக்குச் சென்றுகொண்டிருக்கிறது.

சம்பூர் மக்கள் உண்ண உணவுமின்றி வெள்ளத்தின் மத்தியில் சிரமங்களுடன் வாழ்கின்றனர். நலன்புரி நிலையங்களிலுள்ள மலசலகூடங்கள் மழை வெள்ளம் காரணமாக நிரம்பிய நிலையில் காணப்படுகின்றன. கடந்த வருடம் 300 ஏக்கர் வயல் நிலங்களில் நெற்செய்கை மேற்கொள்ள அவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட போதும், இந்த வருடம் மறுக்கப்பட்டுள்ளது. அவர்களின் வாழ்வாதார உரிமைகள் மறுக்கப்பட்டு சமாதானத்துக்கான யுத்தத்திற்கு ஆரம்பமாக அமைந்த திருமலை மாவட்டத்தினைச் சேர்ந்த 1000க்கும் அதிகமான குடும்பங்கள் நெருக்கப்பட்டு வருகின்றனர்.

மரபுரீதியான வரலாற்றுப் பெருமை வாய்ந்த சம்பூர் பிரதேச மக்கள் தங்களின் பாரம்பரிய வரலாற்றுப் பூமியில் மீளக் குடியமர்ந்து வாழ்வதற்கான நடவடிக்கைக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்றே எதிர்பார்க்கின்றனர். சமாதானத்தினைப் பற்றிப் பேசும் தற்போதைய கிழக்கு மாகாண முதலமைச்சர் இவர்களின் மீள் குடியமர்வுக்கு நடவடிக்கைகளை மேற் கொள்ளவேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையே நடந்த போரின்போது கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளிடமிருந்து அரசு கைப்பற்றிய முதல் இடம் சம்பூர் பகுதி. 2006ஆம் ஆண்டு அந்தப் பகுதியை இலங்கை அரசு கைப்பற்றிய பிறகு, அது உயர்பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டது. சம்பூரில் போரின் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் தங்களது இடங்களில் இந்த மின் நிலையம் அமைவதை எதிர்த்து வந்துள்ளனர்.

ஆரம்பத்திலிருந்தே சர்ச்சையான ஒரு விடயமாகவே இருந்து வந்துள்ள சம்பூர் மக்களைப் பற்றிய கரிசனை அரசாங்கத்திடம் எவ்வாறிருக்கிறது என்பது வெளிப்படையாக தெரிந்தபோதும் அம் மக்கள் இருக்கும் பிடிவாதம் மேலும் மேலும் தமிழ் மக்களின் ஒரு தொகுதியினரின் வீணான அழிவையே கொண்டு வரப்போகிறது என்பது மாத்திரமே உண்மையானதாகும்.

விடுதலைப் போராட்டம் என்ற ஒன்றை ஆரம்பித்தது முதல் தமிழ் மக்கள் தவிர்ந்த ஏனைய தரப்பினர் தம் வாழ்நிலப் பரப்புகள், இருப்பு, கல்வி, பொருளாதாரம், கலாசாரம் என அனைத்திலுமே முன்னேற்றத்தினையே கண்டுவந்தனர். விகிதாசாரப் பிரிப்பு, ஒதுக்கீடு என்பவை தற்போது சுமார் 30 வருடங்களுக்கும் மேலாக பின்னால் நிற்கும் தமிழ் மக்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும். அது சாதாரணமாகக் கிடைத்துவிடப் போவதில்லை. போனவை போகட்டும் என்றோ, அல்லது, கிடைப்பதைப் பெற்று முன்னே செல்வோம் என்ற மனோநிலையிலேதான் தமிழ் மக்கள் செயற்பட்டாக வேண்டிய கட்டாயத்தினைத் தோற்றுவித்திருக்கிறது.

இந்த நிலை தோன்றியமைக்குக் காரணம் தமிழர் விடுதலைப் போராட்டத்தினை ஆரம்பித்து வைத்த அரசியல் தலைமைகளையே சாரும். இதனை மறுப்பதற்கு யாராவது தலைதூக்கினால் அவர்களை விடவும் மோசமானவர்கள் யாரும் இருக்கமுடியாது.

2006ஆண்டில் யுத்தத்தினால் இடம் பெயர்ந்து இற்றைவரை இடைத்தங்கல் முகாம்களில் பெரும் துயரத்தில் வாழும் சம்பூர் மக்களை அவர்களது சொந்த வாழிடங்களில் அல்லது அதையொத்த வாழிடங்களில் குடியமர்த்த வேண்டிய பாரிய பொறுப்பொன்று முதலாவதாக அமைந்த கிழக்கு மாகாண சபைக்கிருந்தது.

(22 ஆம் பக்கம் தொடர்ச்சி...)

# பாலஸ்தீனத்தில் தொடரும் அடாவடிகள்



**பாலஸ்தீனத்துடனான** அமைதிப் பேச்சுவார்த்தையைப் புதைக்கும் சவப்பெட்டியின் கடைசி ஆணியையும் அடித்துவிட்டது இஸ்ரேல். கிழக்கு ஜெருசலேம், மேற்குக்கரைப் பகுதியில் புதிதாக 3 ஆயிரம் வீடுகளைக் கட்டி யூதர்களை அங்கு குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளைத் தொடங்கிவிட்டது.

பாலஸ்தீனத்தை இறையாண்மை பெற்ற தனிநாடாக ஐ.நா. அங்கீகரித்ததை ஏற்றுக்கொள்ள முடியாத ஆத்திரத்தின் வெளிப்பாடாகவே இஸ்ரேலின் இந்த நடவடிக்கை அமைந்துள்ளது. பாலஸ்தீனத்துக்கு ஐ.நா.வின் அங்கீகாரம் கிடைத்த அடுத்த நாளே இந்த குடியேற்றத் திட்டத்தை அறிவித்துவிட்டது.

இந்த நடவடிக்கைமூலம், ஏற்கெனவே பதற்றம் அதிகமுள்ள பாலஸ்தீனப் பகுதியில் அடுத்ததொரு போருக்கு அழைப்பை விடுத்துள்ளது இஸ்ரேல். ஆனால் இந்த முறை அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் ஆசி இஸ்ரேலுக்குக் கிடைக்கவில்லை என்பது மட்டும் ஒரே ஆறுதல். எப்போதுமே ஆதரவளிக்கும் அமெரிக்காகூட இந்தப் புதிய குடியமர்வு விஷயத்தில் இஸ்ரேலை ஆதரிக்கவில்லை. தனது முடிவை இஸ்ரேல் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்றே கூறியுள்ளது.

பிரிட்டன், பிரான்ஸ், ஸ்பெயின், ஸ்வீடன், டென்மார்க் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளும் இஸ்ரேலுக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

ரஷ்யா, ஜெர்மனி உள்ளிட்ட நாடுகளும், ஐ.நா.வும் கூட இஸ்ரேலின் இப்போதைய நடவடிக்கைகளைக் கண்டித்துள்ளன. ஆனால் பாலஸ்தீனர்களுடன் அடுத்த மோதலுக்குத் தயாராகிவிட்ட இஸ்ரேல் இதைச் சிறிதும் செவி மடுக்கவில்லை.

இஸ்ரேல் மேற்கொண்டுள்ள முயற்சி மேற்குக் கரைப் பகுதியை இரு துண்டுகளாகப் பிரிப்பதுடன், பாலஸ்தீனர்களை ஜெருசலேமில் இருந்து முற்றிலுமாகத் துண்டித்துவிடும் வகையில் உள்ளது. இது பாலஸ்தீனர்கள் மத்தியில் கொதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுதவிர பாலஸ்தீனர்களுடனான தங்கள் வன்மத்தை நேரடியாகவே வெளிப்படுத்தியுள்ளது இஸ்ரேல். "பாலஸ்தீனத்தைத் தனிநாடு என்று ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரித்துவிட்ட நிலையில் இஸ்ரேலைப் பாதுகாத்துக் கொள்ளவும், எங்களை வலிமைப்படுத்திக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது கட்டாயமாகிவிட்டது" என்று அந்நாடு அறிவித்துள்ளது.

ஏற்கெனவே 'பாலஸ்தீனம்' என்ற வார்த்தையையே வெறுக்கும் இஸ்ரேல், இப்போது அதற்குத் தனிநாடு அந்தஸ்து அளிக்கப்பட்டுள்ளதால் வெறுப்பின் உச்சிக்கே சென்றுவிட்டது.

பாலஸ்தீனம் - இஸ்ரேல் பிரச்சனை என்பது இருநாடுகள் தொடர்புடையது மட்டுமல்ல, அதையும் தாண்டி 3 மதங்கள், இனம், அரசியல், மக்களின் உணர்வுகள் உள்ளிட்ட பல்வேறு பரிமாணங்களை உள்ளடக்கியது. இவற்றுக்கு நடுவே அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் குறுக்கீடும் உண்டு.

இஸ்ரேல் இதுபோன்று அடாவடி நடவடிக்கைகளை மேற்கொள்வது புதிதல்ல. 1967-ஆம் ஆண்டு மேற்குக் கரை, கிழக்கு ஜெருசலேமின் ஒருபகுதியை வலுக்கட்டாயமாக ஆக்கிரமித்த பிறகு பல்வேறு கட்டமாக சில இலட்சம் யூதர்களை அங்கு குடியேற்றியுள்ளது.

சர்வதேச சட்டப்படி இது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என்றாலும், அதனைத் தட்டிக் கேட்க யாருமில்லை. ஏனெனில் அமெரிக்கா, மேற்கத்திய நாடுகளின் ஆதரவு இஸ்ரேலுக்கு உள்ளதே முக்கிய காரணம். சொந்த மண்ணிலேயே அகதிகளாக மாறிவிட்ட பாலஸ்தீனர்களுக்கு, ஐ.நா.வின் அங்கீகாரம் புதிய நம்பிக்கையை அளித்தது. ஆனால் அதனைக் தகர்க்க களமிறங்கிவிட்டது இஸ்ரேல்.

இஸ்ரேலின் இந்த நடவடிக்கைக்கு பாலஸ்தீனத் தலைவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். அதேநேரத்தில் மீண்டும் இஸ்ரேல் மீது தாக்குதலுக்குத் தயாராகி வருகின்றன பாலஸ்தீனத்துக்காகப் போராடும் ஹமாஸ் உள்ளிட்ட ஆயுதம் ஏந்தும் குழுக்கள்.

ஹமாஸ் கட்டுப்பாட்டில் உள்ள காஸாப் பகுதியில் இருந்து விரைவிலேயே இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தப்பட வாய்ப்பு உள்ளது. இஸ்ரேல் எதிர்பார்ப்பதும் இதைத்தான்.

சர்வதேச அமைப்பான ஐக்கிய நாடுகள் சபையே பாலஸ்தீனத்தை அங்கீகரித்துள்ள நிலையில், இனியும் பாலஸ்தீனர்களைப் புறந்தள்ளுவது மனிதநேயத்துக்கு எதிரான செயல். இது தொடர்வதற்கு உலக சமுதாயம் ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது.

நன்றி - இணையம்



# மாற்றங்கள் தருமா வெற்றி

**இந்திய** இங்கிலாந்து அணிகளுக்கிடையேயான மூன்றாவது டெஸ்ட் போட்டி தொடங்க முன்பே அணித் தொடர்பில் பல செய்திகள் எதிர்பார்ப்புகள். சச்சின் சேர்க்கப்படுவாரா என்ற கேள்வி. அணித் தலைவர் டோனிக்கும் ஈடன் கார்டன் மைதானப் பராமரிப்பாளர்களுக்கும் இடையில் ஆடுகளம் தயாரிப்பு விடயத்தில் கருத்து வேறுபாடு. இப்படியே விடயங்கள் நீண்டு சென்று இந்தியா ஏழு விக்கெட்டுக்களால் தோல்வி என்பதோடு மூன்றாவது டெஸ்ட் போட்டி முடிவடைந்துவிட்டது. இப்போது அதிரடி நடவடிக்கைகள் ஆரம்பித்துவிட்டன.

அதற்கு முன்னதாக டோனியின் மனப்பதிவைப் பற்றிப் பார்க்கவேண்டும். அதாவது ஆடுகளம் சுழலுக்குச் சாதகமாக இருக்கவேண்டும் என்று இவர் வற்புறுத்தியதோடு தனது அணியின் சுழல் பந்துவீச்சாளர்களின் சுழலில் இங்கிலாந்து அலமலந்து போய்விடும் என்ற அதீத நம்பிக்கை புலப்பட்டது. ஆனால் இங்கிலாந்து சுழல் பந்துவீச்சாளர்கள் திறமை மிக்கவர்கள் அல்ல என்ற எண்ணப்பாங்குதான் அவரது உள் எண்ணம் என்பதும் வெளிப்படை.

ஆனால் இவரது சுழல் பந்துவீச்சாளர்களை இங்கிலாந்து எப்படித் தண்டித்தது என்பது அவர்களின் மொத்த எண்ணிக்கையான 523 ஓட்டங்கள் சான்று பகர்கின்றன. மறுபுறம் முதல் இனிங்சில் 316 ஓட்டங்களுக்கும் இரண்டாவது இனிங்சில் 247 ஓட்டங்களுக்கும் இந்திய அணி கட்டுப்பட்டபோது சுவான், பனேசனர் எப்படிப்பட்டவர்கள் என்று டோனி புரிந்து கொண்டிருப்பார்.

இன்னொருபுறம் இங்கிலாந்தின் வேகப் பந்துவீச்சாளர்களும் கடுமையான நெருக்கடியை இந்திய அணிக்குக் கொடுத்ததை





மறுப்பதற்கில்லை. அப்படியானால் கான்பூர் டெஸ்ட் போட்டிக்கு எத்தகைய ஆடுகளத்தை டோனி கேட்கப்போகிறார் என்பது எதிர்பார்க்கைக்கு உரியதுதான். இந்திய இரண்டு இனிங்சையும் பார்த்தால் சுழலுக்கு ஒன்பது விக்கெட்டுக்களும், வேகத்துக்கு 10இற்கு மேற்பட்ட விக்கெட்டுகளும் வீழ்ந்துள்ளன.

அடுத்து இங்கிலாந்தின் வெற்றிக்கு இந்திய அணியின் குறைபாடுகளை மட்டும் பார்க்காமல் இங்கிலாந்தின் தலைவர் அலிஸ்ரர் குக், அவரது திறமை, துடுப்பாட்டம் அணியை வழிநடத்தி சென்ற விதம் எது. எந்தவேளையில் தேவையோ அதனை அந்தவிதமாக மைதானத்தில் கொடுத்த அணியின் கூட்டுப் பொறுப்புப் போன்ற விடயங்களையும் கருத்தில் கொள்ளவேண்டுமல்லவா.

எனவே முதல் டெஸ்டில் கண்ட தோல்வியின் மூலம் பெற்ற படிப்பினை இரண்டாம், மூன்றாம் டெஸ்ட் போட்டிகளில் வெற்றியாக மாறியது என்று சொல்லலாம் அல்லவா? ஆனால் இந்தியா என்ன பாடத்தைக் கற்றுக்கொண்டது என்பதும் அறிந்துகொள்ளப்பட வேண்டியதுதான்.

இப்போது அணியில் இருந்து யுவராஜ்சிங், ஷாகீர்கான், ஹர்பஜன்சிங் மூவரும் அதிரடியாக நீக்கப்பட்டு அந்த இடங்களுக்கு பியூஸ்சாவ்லா, பல்விந்த ஹவானா, அஜய் ஜடேஜா மூவரும் உள்வாங்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. மற்றொருபுறம் டோனி பதவி விலகவேண்டும் என்ற குரலுக்கு அவர் கொடுத்துள்ள பதில் பாராட்டப்பட வேண்டியதே. அப்படிப் பதவி விலகுவதென்பது பொறுப்பில் இருந்துவிலகி, அஞ்சி ஓடுவதாகத்தான் இருக்கும். அப்படியல்லாமல் அடுத்த டெஸ்ட் போட்டியை எதிர்கொண்டு தொடரைச் சமன் செய்ய வேண்டும் என்று கூறியிருக்கிறார். இந்தத் தைரியம் நிட்சயம் பாராட்டப்பட வேண்டியதே.

புதிய வீரர்கள் சேர்ப்பு, டோனியின் தைரியம். சச்சின் தொடர்ந்து இடம்பிடித்தமை போன்றவையெல்லாம் ஒன்று சேர்ந்து இறுதி டெஸ்ட் போட்டியில் இந்திய அணி சாதிக்குமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

**பிரேஸில்** மக்களிடம் இரண்டு சர்வதேச விளையாட்டு அமைப்புக்கள் பாரிய பொறுப்பொன்றை நம்பிக்கையுடன் சுமத்தியுள்ளன. ஒன்று 2016 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகள். இன்னொன்று 2014 இல் நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கால்பந்துப் போட்டிகள். அரைத் தசாப்தங்களுக்கு முன்பாகவே பொறுப்புகள் கொடுக்கப்படக் காரணம் ஏற்பாடுகள் அவ்வளவு பிரமாண்டமானதாக இருப்பதுதான். ஆனால் இந்த வேகம் காணாது என்று சர்வதேச ஒலிம்பிக் சபை பிரேசில் மீது அதிருப்தி தெரிவித்துள்ளது.

அதாவது ஒலிம்பிக் போட்டிகளுக்கான நிதித்திட்டமிடலோ அல்லது மைதானங்கள் பூர்த்தியாதலோ எதிர்பார்த்த வகையில் நடைபெறவில்லை என்று I.O.C கூறுகிறது. குறிப்பாக ரக்பி –ஹாக்கி –கொல்ப் மைதானங்கள் சரிவரச் செய்யப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதேபோல் உதைபந்தாட்ட மைதானங்கள் பற்றிய கவலையும் FIFA வுக்கு ஏற்பட்டுள்ளது. மைதான ஏற்பாடுகளை விரைந்து முடியுங்கள் என்று பிரேசில் உதைபந்தாட்டச் சங்கத்தை FIFA கேட்டுள்ளது.

IOC மறுபுறம் எதிர்பார்த்த அளவு பொருளாதார வளர்ச்சியையும் பிரேசில் காணவில்லையே என ஆதங்கம் தெரிவித்துள்ளது. ஆனால் கடனோ உடனோ பட்டு இந்த இரண்டு நிகழ்வுகளையும் பிரேஸில் வெற்றிகரமாக நிறைவேற்றும் என்று நம்பலாம். ஏனெனில் பிரேஸிலின் மகத்துவத்தை உலக நாடுகளுக்கு எடுத்துக்காட்டும் நிகழ்வுகள் இவ்விரண்டுமாக இருப்பதுதான் காரணம்.

# விரைவுபடுத்துங்களேன்!



# யாருக்குத் தண்டனை?



**ஐந்து** தோல்விகளின் பின் இலங்கையை வெற்றிகொண்ட நியூசிலாந்து டெஸ்ட் கிரிக்கெட் அணியின் தலைவர் றொஸ் ரெயிலர். ஆனால் தென்னாபிரிக்காவிற்கான சுற்றுப் போட்டிக்கு இவரது அணித்தலைமை நீக்கப்பட்ட பிரென்டன் மெக்கலம் தலைவராக்கப்பட்டுள்ளார். இதற்கு முன்னதாக மெக்கலம். ஒரு நாள் மற்றும் இருபதுக்கு இருபது போட்டிகளுக்குத் தலைமை தாங்க டெஸ்ட் போட்டிகளுக்கு றொஸ் டெய்லர் சம்மதம் தெரிவிக்கவில்லை. அதோடு டெஸ்ட் போட்டிகளில் தலைமையில் இருந்து நீக்கப்பட்டபின் அணியில் நீடிக்கவும் இவர் விரும்பவில்லை. ஏற்கனவே றொஸ் ரெய்லர் அணி வீரர்களின் முழு ஆதரவையும் பெற்றவரல்ல என்றாலும் தலைமைப் பயிற்றுனர் மைக் ஹெசனுடனான முரண்பாடுகளே திடீரென இவர் மீது கை வைக்கப்படக் காரணம் என்று அணி வீரர்கள் அதிருப்தியுடன் நினைப்பதாகத் தெரிகிறது.

இறுதி இலக்கை டெஸ்ட்டில் ஒரு சதம் அரைச்சதம். அதன்தொடர்ச்சி டெஸ்ட் போட்டியில் வெற்றி என்ற நிலையிலும் ரெய்லர் நீக்கப்பட்டது சரியா என்பது புரியாத புதிர்தான்.

இவர் இலங்கை விஜயம் மேற்கொள்ளு முன்னமே அணித்தலைமையில் இருந்து அணித்தலைமையில் இருந்து விலகிக்கொள்ளும் படி நிர்ப்பந்திக்கப்பட்டதாகவும் செய்திகள் வருகின்றன. எனவே மொத்தத்தில் பார்க்கும் போது றொஸ் ரெய்லர் வஞ்சிக்கப்பட்டுள்ளார் என்பது தெரிகிறது இதேவேளை அடுத்துவரும் இங்கிலாந்து நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் போதுதான் அணியில் விளையாடத் தயாராக இருப்பதாகவும் கூறியுள்ளார்.



இதெல்லாவற்றுக்கும் அப்பால் புதிய அணித்தலைவர் பிரெண்டன் மெக்கலம் மிகப் பிந்தியே உரிய அங்கீகாரத்தைப் பெற்றுள்ளார் என்பதே உண்மை. நியூசிலாந்து அணியின் மிகவும் ஆளுமை நிறைந்த பிரெண்டன் மெக்கலம் இப்போதாவது கண்டு கொள்ளப்பட்டது மகிழ்ச்சியானதுதான்.

றொஸ்ரெய்லர் இழக்கப்படக் கூடியவரும் அல்ல. பிரெண்டன் மெக்கலம் தகுதி இல்லாமல் அணித்தலைமையை ஏற்கப்போகிறவரும் அல்ல. ஆனால். சில இயல்பான ஓட்டங்களைத் தடுத்துவிடவும் முடியவில்லை.

இதேவேளை நியூசிலாந்து அணியின் விக்கெட் காப்பாளர் குருகர் வான் விக் நீக்கப்பட்டு பி.ஜே. வட்டிலிங் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். இருவருமே தென்னாபிரிக்காவில் பிறந்து நியூசிலாந்தில் வாழ்பவர்கள். மேலும் றொஸ் ரெயிலரின் இடத்துக்கு அவுஸ்திரேலியாவில் பிறந்த டீன் பிரவுணி சேர்க்கப்பட்டுள்ளார். அடுத்ததொரு செய்தி நியூசிலாந்தின் இருபதுக்கு இருபது அணியில் புதிதாக இணைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை ஐந்து.

மாற்றங்கள் எல்லாம் நல்லவைதான். ஆனால் தென்னாபிரிக்கா அணியின் பலத்தை நன்குணரந்துள்ள ரசிகர்கள் சிங்கத்தின் குகைக்குள் தலையை நீட்டும் கிவிப் பறவைகளைக் கண்டு பரிதாபப்படுகிறார்கள். ஆனாலும் பிரைண்டன் மெக்கலத்தின் திறமையைக் குறைத்து மதிப்பிடத் தயாராகவும் இல்லை.

# நுழைவது இலகுவல்ல



**ரிக்கி** பொன்ரிங்கின் ஓய்வின் பின் அந்த இடத்தை நிரப்பப் போகி றவர் யார் என்ற விடயத்தைக் கூட ஒரு கதாநாயகனை எதிர்பார்க்கிற விடயமாகிவிட்டது. பொன்ரிங்கின் பெருமை அத்தகையது. இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் உள்வாங்கப்படப் போகும் ஒருவர் யார்? பிலிப் ஹியூஸ்–உஸ் மான் கவாஜா – அலெக்ஸ் டூலன் –றொப் குயீனி. இந்த நால்வரில் தெரிவு செய்யப்பட்டுள் ளவர். இருபத்து நான்கு வயதான பிலிப் ஹியூஸ். இந்த நால்வரது சாதனைப் பட்டியல்களை ஆராய்ந்த தெரிவுக் குழு பிலிப் ஹியூசைத் தெரிவு செய்துள்ளது. இவரது 17 டெஸ்ட் கணக்கில் 3 சதங்களும் 3 அரைச் சதங்களும் உண்டென்பது இவரது பலம். அநேகமாக இலங்கையுடனான முதல் டெஸ்ட் போட்டியில் மூன்றாம் இலக்கத் துடுப்பாட்ட வீரராக ஹியூஸ் களம் இறங்குவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை பொன்ரிங் துடுப்பெடுத்தாடிய நான்காம் இலக்கத் துடுப்பாட்ட வீரராக ஷேன் வொட்சன் களம் இறங்குவார் என்றும் எதிர்பார்க் கப்படுகிறது.

இதெல்லாம் இருக்க டஸ்மேனியா, ஹோபாட்டில் சந்திக்கப்போகிற இரண்டு அணிகளும் நொந்துபோய் இருப்பவை நியூசிலாந்து வீட்டுக்குள் புகுந்து இலங்கை அடித்ததென்றால், அதே பாணியில் தென்னாபிரிக்கா அவுஸ்திரேலியாவை நொறுக்கித் தள்ளிவிட்டது. இரண்டு அணிகளுமே அடிவாங்கிய அணிகள். ஆகவே இரண்டு அணிகளுக்கும் சூட்டைத் தணித்துக்கொள்ள ஒரு வடிகால் தேவைப்படுகிறது.

அது ஹோபாட் டெஸ்ட் ஆக அமைவதில் ஒரு விஷேடமும் இருக்கிறது. ஏனெனில் ரிக்கி பொன்ரிங்கின் பிறந்தகம் டஸ்மேனியாதான். ஒப்பீட்டளவில் இரண்டும் தோற்ற அணிகள். மிகுதியை மைதானத்தில் கண்டு கொள்வோம். ○

# உலகின் மிகப்பெரிய ஆயுதம் தன்னம்பிக்கை!

பல்வேறு காரணங்களால் நமக்குள்ளே உருவாகும் தன்னம்பிக்கையின்மை, தாழ்வு மனப்பான்மை, அச்சம், சந்தேகம், எதிர்காலத்தைப் பற்றிய அவநம்பிக்கை ஆகியவற்றறின் காரணமாக நம்மிடம் உள்ள ஆற்றல் செயற்பட முடியா-மல் முடக்கி வைக்கப் பட்டுவிடுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக நம்மைப் பற்றி நமக்கென்று ஒரு சுய மதிப்பீடு இல்லாதபோது நம்முடைய ஆற்றலைப் பற்றிய உணர்வும் நமக்கில்லாமல் போய்விடுகிறது. என்னால் இது முடியுமா? என்று சந்தேகப்படுவதை விட்டுவிட்டு, என்னால் முடியும் என்கிற நம்பிக்கையினைப் பெறுகிறபோது ஆற்றலும் செயற்படத் தொடங்குகிறது.



இலட்சியத்தில் வெற்றிபெறுவோம் என்ற உறுதிமட்டும் இருந்தால் போதும் உங்கள் பணிக்கு மட்டும் முதலிடம் கொடுத்து உழையுங்கள். தன்னம்பிக்கைதான் உங்கள் வாழ்க்கையைப் பாதுகாப்பான வாழ்க்கையாக மாற்றித் தருகிறது என்பதை மறவாதீர்கள். வெற்றியைச் சந்திக்காமல் திரும்ப மாட்டேன் என்ற உங்களது உறுதி ஒன்றே எப்பொழுதும் கைவிளக்காக இருக்கவேண்டும்.

வெற்றிபெற வேண்டும் என்னும் உங்களுடைய திடமான எண்ணம்தான் வேறு எந்தக் காரியத்தையும் விட மிகமிக முக்கியமானது. மிக இக்கட்டான சூழ்நிலைகளில், நான் தோற்றுவிடுவேனோ? என்று சிந்திக்காதீர்கள். நான் வெல்வேன் என்று நம்புங்கள். அப்போதுதான் பிரச்சினைகளை வெல்ல வழிபிறக்கும். வீட்டிலும், வேலையிலும், வெளியிலும் நான் வெற்றிபெறுவேன் என்கிற மனநிலையே உங்களை வெற்றி பெறச் செய்துவிடும். எதையும் ஒரு திட்டத்தோடு மட்டும் தொடங்காதீர்கள். செயலோடும் தொடங்குங்கள். சிந்தனை செய்யுங்கள் முடியும் என்ற மாறாத தன்னம்பிக்கையுடனேயே உங்களுடைய சிந்தனை அமைந்திருக்கட்டும். இந்த மனப்பான்மையிலிருந்து மாறிவிடாமல் சிந்தித்தைச் செயலில் காட்ட மிகுந்த மகிழ்ச்சியுடன் உழையுங்கள். வெற்றி மிக அருகில் இருப்பதை உணர்வீர்கள்.

தாழ்வுமனப்பான்மை வேண்டாம். அனைத்தையும் வெல்ல முடியும். வெற்றியைப்பற்றிய சிந்தனையுடன் செயற்படுங்கள். தோல்வி, வெறுப்பு, அவநம்பிக்கை ஆகியவற்றிற்கு இடமளிக்காமல் வெற்றியை மட்டுமே சிந்தித்து உயர்வடையுங்கள்.

உங்களுடைய கவனம் முழுவதும் உங்களின் இலட்சியத்தை நோக்கித்தான் இருக்கவேண்டும். தடைகள் எதிர்ப்படும் பொழுதும் இலட்சியத்திலிருந்து உங்கள் மனத்தையும், செயலையும் பின்வாங்க விடாதீர்கள். இவையெல்லாம் உங்கள் உறுதியை சோதிகக வந்தவை என்று கருதி அந்தத் தடைகளையும் தாண்டி உங்களுடைய உயர்ந்த இலட்சியத்தை அடையுங்கள்.

வெற்றியைக் கற்பனையில் நம்பிக்கையுடன் பார்க்கும் திறன், என்னால் முடியும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை, உறுதியாக வெற்றி பெற வேண்டும் ஏன்ற செயல்வேகம், எது வேண்டும் என்றாலும் பொறுமையுடன் விடாப்பிடியாக முயற்சி செய்யும் குணம், இந்த நான்கும் உள்ளவரே தன்னம்பிக்கையுள்ள மனிதர்.

நம்முடைய வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பது மனவளர்ச்சியோ, மன வளர்ச்சி இன்மையோ அல்ல. நல்லதே நடக்கும் என்ற மனோபாவம்தான். எனவே எப்போதும் உண்மையான ஆர்வத்துடன் வெற்றிக்காக உழையுங்கள். நம்முடைய உழைக்கும் நேரம் நாள்தோறும் அதிகரிக்க வேண்டும். அதற்கு ஏற்றபடி நமது சிந்தனை, செயல்வேகம் ஆகியவை இருக்கவேண்டும். முயற்சியை எவனொருவன் எப்பொழுது கைவிடுகிறானோ அப்பொழுதே அவனது சக்திமுழுவதும் அவனிடமிருந்து பறந்து போய்விடுகிறது.

அரிய சாதனைகள் செய்யப்படுவது வலிமையினால் அல்ல. விடாமுயற்சியினால் தான். வெற்றியின் இரகசியம் கடின உழைப்பு என்ற சொற்களில்தான் அடங்கி இருக்கிறது. நம்பிக்கையும் உர்சாகமும் மட்டும் இருந்தால்போதும். வெற்றி இலக்கை அடைந்துவிடலாம். சிந்தனையைவிடச் செயல்தான் எல்லோரையும், எல்லாவற்றையும் மாற்றி அமைக்கும். முன்னேற்றத்தையும் தரும். எப்போதும் சிந்தித்துக் கொண்டே மட்டும் இருக்காமல் செயற்பட்டுக் கொண்டே இருங்கள்.

நீங்கள் பணிவுடன் பழகுபவர் என்றால் பலரை உங்கள் பக்கம் ஈர்த்து விடுவீர்கள். நேர்மை உள்ளம் கொண்டவர் என்றால் உங்களை எல்லோரும் நம்புவார்கள். விடாது முயற்சி செய்யும் அரிய குணத்தைப் பெற்றிருந்தால், எப்போதும் நீங்கள் வெற்றி வீரனாகத் திகழ்வீர்கள்.மனம் அமைதியாக இருக்கவேண்டுமானால் எதிர்மறையான சிந்தனைகளையும், பிறரது திறமைகளை சிறுமைப்படுத்துவதையும், கீழ்த்தரமான முறையில் விமர்சிப்பதையும் நிறுத்துங்கள். உங்கள் மனதை சுத்தப்படுத்துங்கள். ஊக்கமான சிந்தனைகளையே நிரப்புங்கள். எதிலேயும் நல்லதே நடக்கும் என்றே செயல்படுங்கள். இப்போது நீங்கள் தான் உலகிலேயே மிகவும் அமைதியான மனம் உடையவர்.

வெற்றி பெறுவோம் என்ற திடமான மனஉறுதியில் மீண்டும்மீண்டும் முயற்சி செய்து தொடர்ந்துவிடாது செயலாற்றிக் கொண்டேயிருந்தால் மிக எளிதாக வெற்றிக் கனியைப் பறிக்கமுடியும். வாழ்க்கையில் உயரவேண்டும் என்று உங்கள் மனத்திற்கு கட்டளையிடுங்கள்.

கட்டளையை முழு வேகத்துடனும் விருப்பத்துடனும் அடிக்கடி இட்டால் நீங்கள் உண்மையில் அதை அடைய செயலிலும் இறங்கிவிடுவீர்கள். தன்னம்பிக்கையே உலகின் மிகச்சிறந்த ஆயுதம். இந்த ஆயுதம் இருந்தால் கஷ்டங்களைப் பொறுத்துக்கொண்டு அதற்கான காரணகாரியத்தை ஆராய்ந்து தீர்வு காணமுடியும். தன்னம்பிக்கையே நோய்களையும், உடல் வலியையும், மனவேதனைகளையும் நீக்குகிறது. தன்னம்பிக்கையே நீடித்த நல்வாழ்க்கையை அமைத்துத் தருகிறது.

வெற்றி பெறுகிறவனின் ஒரே மந்திரச்சொல் இப்பொழுது. தோல்வி அடைகிறவனின் ஒரே சாபச்சொல் பிறகு. வெற்றி பெற்றே தீர வேண்டும். எனவே எதையும் தள்ளிப் போடாதீர்கள். பிரச்சினைகள்தாம் மிகப்பெரிய சாதனைகளையும், உறுதிமிக்க சாதனையாளர்களையும் உருவாக்குகின்றன. எனவே பிரச்சினைகளை விருப்பத்துடன் எதிர்கொள்ளுங்கள்.

தோல்வி எனக்கு மனச்சோர்வை அளிப்பதில்லை. மாறாக அது என்னை மேலும் மேலும் ஊக்குவிக்கிறது. எவ்வளவுதான் கல்வியும், செல்வமும் இருந்தாலும் ஒருவனால் வெற்றி பெறமுடியாது. தோல்விகளைக் கண்டு அஞ்சாமல் தொடர்ந்து முயற்சி செய்யும் ஊக்கம் அவனிடம் இருந்தால்தான் முன்னேற முடியும், வெற்றி பெறமுடியும். இந்த ஊக்கம் இருந்தால், கல்வியறிவு இல்லாதவனும், பொருள்வசதி இல்லாதவனும்கூட முன்னேறுவது உறுதி.

முன்னேற முயற்சியை, உழைப்பை, அறிவை, ஒழுக்கத்தை நம்புங்கள். இதைத்தவிர வேறு எதை நம்பினாலும் முன்னேற முடியாது. அறிவுக்கு இந்த உலகம் எப்போதும் வணங்கும். திறமைக்கு இருகரம் நீட்டி ஆதரவு தரும். தூய்மையான உள்ளத்திற்கு மிகுந்த வரவேற்பு தரும். வேதனையை மனோபலத்துடன் எதிர்கொள்ள முடிந்தால், எப்படிப்பட்ட துக்கத்தையும் தாங்கிக்கொள்ள முடியும்.

வாழ்க்கையை அதன்போக்கில் ஏற்றுக்கொண்டு முடிந்தவரை மகிழ்ச்சியாக இருக்க முயற்சி செய்யவேண்டும். பிரச்சினையை பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்காமல், அதை எதிர்கொள்வது எப்படி என்று நீங்கள் யோசிக்க ஆரம்பித்தாலே போதும். குழப்பநிலையிலிருந்து நீங்கள் வெளியில் வந்து விட்டதாக அர்த்தம். இந்த நிலையில் தான் நீங்கள் சரியான முடிவுகளை, சரியான நேரத்தில் எடுக்கவேண்டியிருக்கும். பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் முன்பு மனதை சமநிலைப்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம்.

மிகப்பெரிய எழுத்தாளராகத் தன்னைக் கற்பனை செய்துகொள்ளும் ஒருவன்தான் எழுதிக் கொண்டிருக்கும் படைப்பு, எப்படி முடிந்தால் சிறப்பாக இருக்கும் என்பதை கற்பனையில் பார்த்து, அதற்கு ஏற்றபடி எழுதினால் நிகழ்காலத்தில் வெற்றி பெறமுடியும். ஆகவே நாம் செய்து முடிக்க எடுத்துக் கொண்டுள்ள காரியங்களும் அதை கற்பனையில் பார்த்தபடி உருவாக்கும் குணமும் நம் வாழ்வில் நிச்சயம் பலம் சேர்க்கும். நிறைந்த முயற்சியை உடையவன், மலர்ந்த வாழ்வைப் பெறுவான். ஆபத்திலிருந்து காப்பாற்றும்படி பிரார்த்திக்க மாட்டேன். ஆபத்துகளைச் சந்திக்க எனக்கு அஞ்சாமையைக் கொடு. நோய்களிலிருந்து காப்பாற்றும்படி யாசிக்கமாட்டேன். நோயைப் பொறுத்துக் கொண்டு வெற்றி கொள்ளும் மனத் திடத்தை எனக்கு கொடு. வாழ்க்கை எனும் போரில் எனக்கு துணை கேட்கமாட்டேன். வெற்றியடைய சுயபலத்தைக் கொடு.

எதிர்பார்ப்புகள் என்னாகுமோ? என்ற பயத்திலிருந்து காப்பாற்றும்படி வேண்டமாட்டேன். நம்பிக்கையுடன் இருந்து வெற்றியடைய பொறுமையைக் கொடு.-தாகூர் நிகழ்வதை கொண்டு நிகழ்ச்சிகள் உறுதிப்படுகின்றன. அகமகிழ்வதும், தோல்வியில் வருந்துதலும் சூழல் நிமித்தம். முழுமை பெறுவதே அமைதி. தொல்காப்பியர் எந்தப் பணியை நாம் மேற்கொள்கிறோம் என்பது முக்கியமில்லை. அந்தப் பணியில் நம்முடைய ஆற்றலை எப்படி செயல்படுத்துகிறோம் என்பதுதான் முக்கியம். நமக்குள் இருக்கின்ற ஆற்றலை வெளிப்படுத்தி வளர்த்துக் கொள்வது நம்முடைய ஆர்வத்தையும் முயற்சிகளையும் பொறுத்தே அமைகிறது. விரும்பியது கிடைக்கவில்லையெனில், கிடைத்ததை விரும்பக் கற்றுக்கொள்ள வேண்டும்.

பல்வேறு காரணங்களால் நமக்குள்ளே உருவாகும் தன்னம்பிக்கையின்மை, தாழ்வு மனப்பான்மை, அச்சம், சந்தேகம், எதிர்காலத்தைப் பற்றிய அவநம்பிக்கை ஆகியவற்றறின் காரணமாக நம்மிடம் உள்ள ஆற்றல் செயற்பட முடியாமல் முடக்கி வைக்கப்பட்டுவிடுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக நம்மைப் பற்றி நமக்கென்று ஒரு சுயமதிப்பீடு இல்லாதபோது நம்முடைய ஆற்றலைப் பற்றிய உணர்வும் நமக்கில்லாமல் போய்விடுகிறது. என்னால் இதுமுடியுமா? என்று சந்தேகப்படுவதை விட்டுவிட்டு, என்னால் முடியும் என்கிற நம்பிக்கையினைப் பெறுகிறபோது ஆற்றலும் செயற்படத் தொடங்குகிறது.

இலட்சியத்தை அடையும்வரை, நமது மனமும் செயலும் இலட்சியத்தை நோக்கியே சென்று கொண்டிருக்க வேண்டும். முதலில் கடினமாகத் தோன்றினாலும் மனப்பழக்கத்தினால் நம்முடைய பணிகளை வெகு எளிதாக தொர்டர்ந்து செய்யமுடியும். கடினமான வேலையைச் செய்வதில் மகிழ்ச்சியை காணும் மனநிலை கொண்டவர்கள் எப்போதும் வெற்றியையும் அதன் மூலம் புகழையும் பெறுகிறார்கள்.

மனம்சோர்ந்து போனால் நீங்கள் இதுவரை பெற்ற வெற்றிகளை நினைத்துப் பாருங்கள். உங்கள் நண்பர்கள் உங்களைப் பாராட்டிய அம்சங்களை நினைவிற்குக் கொண்டுவாருங்கள். நாம் எழுந்து எழுந்து உறுதியுடன் எடுத்துவைக்கும் முயற்சிகளில்தான் நம்பிக்கையும் வெற்றியும் உள்ளன.

---

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே!
உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 500

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 5 | |
| 7 | 8 | 9 | 10 | 11 | |
| 13 | 14 | | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | | 24 |
| 25 | | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | | | 36 |

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 25.12.2012 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - 500
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 498- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ஆ | 2 ட் | 3 ட | 4 ம் | | 6 ப |
| 7 கா | | 9 மா | 10 த | 11 ம் | 12 ரு |
| 13 ச | 14 க | 15 ர | 16 தி | | 18 த் |
| 19 வா | 20 ம | 21 ம் | | 23 வே | 24 தி |
| 25 ணி | 26 க | | | 29 த | |
| | 32 ன் | 33 ச | 34 மா | 35 ம் | 36 ன |

### இடமிருந்து வலம்

01. தலைமைக் குடியானவன்.
07. உலகிலே கூடுதலானோர் பேசப்படும் மொழி.
13. சேர். (திரும்பியுள்ளது)
16. புகழ். (குழம்பியுள்ளது)
19. பக்கம் அல்லது வசம்.
27. இவள் மனசு இப்படி என்பர். (குழம்பியுள்ளது)
31. தானியங்களை மா ஆக்கப் பயன்படுவது.

### மேலிருந்து கீழ்

01. சூரியன்.
02. மூங்கில். (குழம்பியுள்ளது)
03. பானை.
05. இவர்கள் சொன்ன கலண்டரினால் உலக மக்கள் அனைவரும் பீதியில் உள்ளனர். (குழம்பியுள்ளது)
10. ஒழுக்கம் அல்லது வரலாறு. (குழம்பியுள்ளது)
18. அருகன் அல்லது தானே தோன்றியவன்.
21. எண்ணம் அல்லது வழக்கம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல.498 இற்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

க.பிரியந்தன், புலோலி தெற்கு, புலோலி.

### பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

01. த.அங்கயன், அரியாலை, யாழ்ப்பாணம்
02. ம.தமிழ்ச்செல்வன், முள்ளியவளை, முல்லைத்தீவு.
03. த.கிர்பாள், மட்டக்குளி.
04. ம.வரதராஜா, வேப்பங்குளம், வவுனியா.
05. வ.கைசந்தவி, பிரதான வீதி, காலி.
06. பி.நிர்மல், கல்கிசை.
07. ந.தவராசா, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
08. ச.சத்தியன், கொழும்பு -13
09. திருமதி கா.ராணிமலர், உப்புக்குளம், மன்னார்.
10. கே.இராஜகோபால், கந்தசுவாமி கோயிலடி, வட்டுக்கோட்டை.




# வலிகளின் சன்மானம்

இராமசாமி ரமேஷ், அளம்பில்

**ஆம்! வலிகளையும், சுமைகளையும் தோல்விகளையும், அவமானங்களையும் சுமந்து - கடந்து வெற்றிக்காகப் போராடும் எழுத்தாளன் ஒருவனின் எழுத்துலகப் பயணம் இங்கே தொடர்கிறது.**



ஒரேயொரு நாள் மட்டும் சில மணித்துளிகள் உறவாடிய தனக்கே நிலாவை மறக்கமுடியவில்லையே... என்ர புள்ள எவ்வளவு காலமா... இவளை நேசிச்சானோ... மகேஷ்வரிக்கு மனதுக்குள் பெரும் போராட்டம் தயாரானது. வறுமை இருந்தாலும், நிலாவையே மருமகளாக்குவதா... இல்லை. அவள் குடும்பத்துக்கும் குலத்துக்கும் இந்த மீனும் கடலுமாய் கிடக்கும் நாம பொருந்துவோமா? சிந்தித்தவளின் பார்வை, படலை திறந்து உள்நுழையும் நட்சத்திரனின் மீது வீழ்ந்தது. முகத்தில் சோகம் அப்பியிருந்தது.

நட்சத்திரனின் நெய்தல் மண்ணில் இந்த நிலாவின் வருகையால் பூரிப்பு பூத்திருந்தது. வறுமை மறைந்து நிலாவோடு பேசி உறவாடிய தருணங்கள் மகேஷ்வரிக்குக்கூட மனதை விட்டு நீங்க வில்லை. அந்த சின்னப் பெண்ணின் குறுகுறுப் பார்வையும், புன்னகை சிதறும் பேச்சும் வயதுக்கு மீறிய பக்குவமும் பண்பும் இவளின் மனதை கட்டுண்டு போகச் செய்துவிட்டது. நிலா பிரிந்து போனதன் பின்பும் நட்சத்திரனின் ஏக்கம் எப்படியிருந்ததோ அதேபோல... ஏன் அவனைவிட மகேஷ்வரிக் குத்தான் வலித்தது அதிகம்!! ஏழைகளின் மனசு இப்படித் தான்!! பணம், காசுக்காய் ஏங்குவதில்லை. பாசத்தைத் தான் நாடும்!

நட்சத்திரன், நிலாவந்து விட்டுப் போனதிலிருந்து நடந்துகொள்ளும் விதமும் மகேஷ்வரிக்கு ஏதோ உண்மையை புலப்படுத்தி யது. அனுபவம் முதிர்ந்த இந்தத் தாயின் மனதில் அவர்கள் பற்றிய அவ தானிப்பு அசை போடப் பட்டது. மறைக்கப்படும் உணர்வுகளையும் அவர்களது உறவையும் எளிதாக இனங் கண்டு கொண்டாள் மகேஷ்வரி.

" அம்மா பசிக்குது.." எனக் கூப்பாடு போட்டு வாங்கி உண்ணும் நட்சத்திரன், இப்போதெல்லாம் "பசிக்கலை அம்மா..." என்றபடி தனிமை நோக்கி நகர்ந்துவிடுகிறான். பெற்ற பிள்ளையை புரிந்து கொள்ள முடியாதவளா மகேஷ்வரி? நிலாவை நட்சத்திரன் நேசிப்பது புரிந்தது.

"என்ர பிள்ளைக்கென்ன?" நிலாவையும் மகேஷ்வரிக்குப் பிடித்துப்போனதால், இருவரை யும் இணைத்து கற்பனைக்கோடுகளால் வரைந்து அவர்களை வாழ்க்கைப் பந்தத்தில் இணைத்து பார்த்தாள். திடீரென தன்நிலையும் மனச்சாட்சியும் மகேஷ்வரிக்கு மனக்கண்ணில் நிழலாடியது.

நாங்களே... அன்றாடங் காய்ச்சிகள்! நமக் கெல்லாம் பெரிய இடத்துச் சம்மந்தம் சரிவருமா? ஏழைப் பெண்களுக்குரிய அபாயமான கேள்வியும் வறுமைப் பயமும் ஆட்கொண்டது. அதுதானே! ஒரு நேரச் சாப்பாட்டுக்கே...பெரும் பாடு! அதுக்குள்ள, நல்லா வாழ்ந்து பழக்கப் பட்ட அந்தப் பிள்ளையை... எப்பிடி நம்ம குடும்பத்தால காப்பாத்த முடியும்? இதெல்லாம் நமக்கு சரிவருமா?? உப்புக்காற்று உடல் கழுவிப்போனது. அதே நேரத்தில் இதயத்தின் இடுக்குதளிலெல்லாம் இரத்தத்துக்குப் பதிலாய் வேதனை கசிந்தது. நேசித்த இதயத்தை பிரிய நினைக்கையிலேயே இத்தனை வலியா??

ஒரேயொரு நாள் மட்டும் சில மணித்துளிகள் உறவாடிய தனக்கே நிலாவை மறக்கமுடிய வில்லையே... என்ர புள்ள எவ்வளவு காலமா... இவளை நேசிச்சானோ... மகேஷ்வரிக்கு மனதுக்குள் பெரும் போராட்டம் தயாரானது. வறுமை இருந்தாலும், நிலாவையே மருமகளாக்குவதா... இல்லை. அவள் குடும்பத்துக்கும் குலத்துக்கும் இந்த மீனும் கடலுமாய் கிடக்கும் நாம பொருந்துவோமா? சிந்தித்தவளின் பார்வை, படலை திறந்து உள்நுழையும் நட்சத்திரனின் மீது வீழ்ந்தது. முகத்தில் சோகம் அப்பியிருந்தது.

"அம்மா! சாப்பாடு கட்டித் தாங்க, நல்ல கொம்பன் சுறாக்கள்படுதாம் ( பிடிபடுகிறதாம்) நான் இரவைக்கு வலிச்சலுக்குப் போகப்போறன்.." என்றபடி வீட்டின் மேல் கூரையில் காய்ந்து கொண்டிருந்த தன் கடலுக்குப்போகும் நீள காற்சட்டையை எடுத்து மாட்டிக்கொண்டான். மண்ணெண்ணெய் கலனில் எண்ணெய் மற்றும் பெற்றோல் எல்லாம் இருக்கிறதாவென பார்த்துக் கொண்டான். டோர்ச் லைட்டையும் எடுத்து தன் கழுத்திலே கொழுவிக் கொண்டான்.

மகேஷ்வரி சாப்பாட்டுப் பொதியை தயார்செய்து விட்டிருந்தாள். "தம்பி! நீ தனியவோப்பா போகப் போறாய்?" தாய்மை பயத்தின் பக்கம் சென்றது. "இல்லையில்லை! துஷாந்தும், பிரதீபனும், அங்கால.. அளம்பில் கரையில இருந்தும் வாறாங்கள்.." பதில் சொல்லிய படியே சாப்பாட்டுப் பொதியை வாங்கி கடலுக்குக் கொண்டுசெல்ல வைத்திருந்த பையினுள் வைத்தான். வேறு ஆட்களும் போவதினால் பயம் கொஞ்சம் தணிந்தது மகேஷ்வரிக்கு!!

"தம்பி! உன்னோட அப்பாவையும் கூட்டிக்கொண்டு போவனப்பா.." "வேண்டாம் வேண்டாம்..! அவர் இந்த இழுப்பு வருத்தத் தோட வந்து.. சமாளிக்கமாட்டாராம். சரியாக் கஷ்டப்படுவார்.." என்றவன், " ஒரு நூறு கிலோ மீன்பட்டால் காணும்! வாங்கின கடனும் குடுத்து ராணியக்காட்ட அடைவு வச்ச உங்கட தோட்டையும் திருப்பிப் போடலாம்.." அவன் தோடு என்றதும் தான், மகேஷ்வரிக்குத் தன் காதுத்தோட்டின் ஞாபகமே வந்தது.

(வலிகள் தொடரும்...)

# யார் கொடுத்த அனுமதி!

எஸ். சூர்யா

குபுகுபுவென சூடான இரத்தம் கொப்பளித்துக் கொண்டு வெளியேறியபோது கத்தியானது பாதி தலையைத்தான் வெட்டியிருந்தது. கால்கள் இரண்டும் வெடுக்வெடுக்கென இழுத்துக் கொண்டன. இதயம் இன்னும் நிற்கவில்லை என்றுதான் தோன்றியது.

நான் சற்று அருகில் சென்று கவனித்தபோது அவன் இதயத்துடிப்பை நன்றாக கேட்கமுடிந்தது. நான் உறுதியாகக் கூறுவேன் அவனுக்கு இது சாகவேண்டிய வயதே இல்லை. அவன் இன்னும் சிறிது காலம் யாருக்கும் தொந்தரவு கொடுக்காமல் வாழ்ந்திருப்பான்.

யாரைக் கேட்டாலும் தயங்காமல் கூறுவார்கள் அவன் பரம சாது என்று. அவனால் யாரும் இதுவரை தொந்தரவு அடைந்ததே யில்லை. அவன் பயந்த சுபாவம் வேறு. யாராலும் நிச்சயமாக அவனை எதிரியாக நினைக்க முடியாது. எல்லாவற்றிலும் கொடுமை அவனால் பேசக்கூட முடியாது.

அவனது உடல் துடித்துக் கொண்டிருந்தது. மெது மெதுவாக அந்த துடிப்பு குறைந்து கொண்டிருந்தது. எனக்கு புரிந்து விட்டது அவனது உயிர போய்க் கொண்டிருந்தது. என்னால் ஒன்றுமே செய்யமுடியவில்லை. எல்லாம் கனவு போல் இருந்தது. நான் நன்றாக புரிந்து கொண்டுவிட்டேன். இங்கு கருணை செத்து விட்டது. நீதியும்கூட.

இங்கு உயிருக்கு மரியாதையே கிடையாது. ஒரு உயிர கொல்லப்படுகிறது. ஆனால் இங்குள்ளவர்கள் சுற்றி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். சுற்றி நின்றிருப்பவர்களின் மனதில் சற்றுக்கூட, வருத்தமோ பாவ உணர்ச்சியோ இருப்பதாகத் தெரியவில்லை.

அவர்கள் நிற்கிறார்கள்... பார்க்கிறார்கள்... அவ்வளவுதான் தெரிகிறது. அது என்னவிதமான உணர்ச்சி என்றுகூட புரியவில்லை. சிலைகள் போல் கைகளை கட்டிக் கொண்டு நிற்பது அவ்வளவு எளிதான விஷயமாக அவர்களுக்கு எப்படி தோன்றுகிறது. அவர்கள் அனைவரும் ஒன்றுபோலவே இருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் ஒரே இடத்தில் தான் பயிற்சி பெற்றிருக்கிறார்கள் போல.

நான் கடைசியாக எதிர பார்த்ததும், நம்பியதும் ஒரு அம்புலன்சைத்தான். நான் பலமுறை சாலை நெரிசலில் மாட்டிக்கொண்டு நிற்கும் அம்புலன்சை பார்த்திருக்கிறேன்.

தலையில் சிவப்பு விளக்கை சுற்றியபடி அநாதையாய் கத்திக் கொண்டு நிற்கும். அருகில் நிற்பவன்கூட இதை சட்டை செய்யமாட்டான். அவன் குறைந்தபட்சம் தனது காதுகளை பொத்திக் கொள்ளாமல் நிற்பது குறித்து நாம் சந்தோசம் அடைந்து கொள்ள வேண்டியதுதான். இவற்றை யெல்லாம் பார்க்கும்பொழுது ஒரு விஷயம் உறுதிபட்டு விட்டது.

ஒரு அம்புலன்ஸ் தனது அவசரச் சத்தத்தின் மரியாதையை இழந்துவிட்டது. அந்த சத்தம் தனது பொருளை இழந்துவிட்டது. அச்சத்தத்திற்கு பெரிதாக அலட்டிக் கொள்வது என்பது பைத்தியக்காரனின் செயலுக்கு ஒப்பானதாக மாறிவிட்டது.

இனி பிரயோசனமில்லை. உயிரபோகும் பொழுது ஏற்படும் கடைசி மூன்று துடிப்பை பற்றி நானறிவேன்.

ஆம். மெதுவாக ஒரு துடிப்பு... அதை விட மெதுவாக மற்றொரு துடிப்பு.. கடைசியாக கால்களும், உடலும் ஆழமாக உள்ளிழுத்துக் கொண்டன. ஆனால் வெளியேவிடப்படவில்லை. வெளிவிடப்பட்டது எனது கண்ணீர்தான். உயிர மொத்தமாக அடங்கிப் போனது. மனம் வலித்தது.

உண்மையில் மன வலியை பற்றி சொல்ல முடியாது. அது அவ்வளவு ஆழமான உணர்வு. மனம் வலிக்க ஆரம்பித்தவுடன் உடல் 2 மடங்கு எடை அடைந்துவிடுகிறது. கண்ணீரைப் பற்றி சொல்வதென்றால் அது நிற்பதாகத் தெரியவில்லை. நான் எனது வீட்டின் அறைக்குள் சென்று கதவை தாழிட்டுக் கொண்டு அன்று முழுவதும் அழுதேன்.

25 வருடங்களுக்குப் பிறகு... ஒரு ஞயிற்றுக் கிழமை காலை.

எனது 6 வயது மையன் இன்று கதவை தாழிட்டுக் கொண்டு தேம்பித் தேம்பி அழுதுகொண்டிருக்கிறான்.

நான் செய்த தவறுகள் இவைதான். அவன் ஆசைப்பட்டானே என்று ஒரு ஆட்டுக்குட்டியை வளர்ப்பதற்கு அவனை அனுமதித்திருக்கக் கூடாது.

அல்லது அவன்செல்ல நண்பனைப் போல் வளர்த்த அந்த ஆட்டுக் குட்டியை பிரியாணி செய்வதற்காக வெட்டி யிருக்கக்கூடாது.

அல்லது அவ்வாறு பிரியாணி செய்துவிட்டு அவனை சாப்பிட அழைத் திருக்கக் கூடாது. 25 வருடங் களுக்கு முன் நான் வெறுமனே அழுது கொண்டிருக்கும் செயலை மட்டுமே செய்தேன். ஆனால் எனது பையன் அவ்வாறு இல்லை. சாப்பிட அழைத்தது தான் தாமதம், அறைக் குள்ளிருந்த விலையுயர்ந்த எல்.சி.டி. டி.வி உடைபடும் சத்தம் கேட்டது. கூடவே சேர்ந்து எனது இதயம் உடைபடும் சத்தமும் சின்னதாகக் கேட்டது. ஏனெனில் அந்த டி.வியின் விலை 1 இலட்சம்.

20 வருடங்களுக்குப் பிறகுகூட எந்தவிதமான ஹெசிடேசனும் இல்லாமல் என்னால் ஒரு மட்டன் பிரியாணியை சாப்பிடமுடியவில்லை என்பதை நினைத்துப் பார்க்கையில்..... ஏற் கனவே உடைந்த இதயம் வேறு என்னதான் செய்யும்.



# சிந்திப்பதற்கு

| க.மு [கல்யாணத்துக்கு முன்] | க.பி [கல்யாணத்துக்கு பின்] |
|---|---|
| குட்டிம்மா..பட்டு..லட்டு..செல்லம்.. | சனியனே..!!மூதேவி..லூசே..!! |
| நீ பேசினா காதுல தேன் பாயுதுமா.. | நீ பேசினாலே ஈயத்த காச்சி ஊத்தினா மாதிரி இருக்கு |
| இந்த ட்ரெஸ்ல நீ சாட்சாத் தேவததான்.. | ட்ரெஸ்ஸா இது ..??சகிக்கல.. ஆளும் சைஸும்.. |
| நீ எப்பவும் மொபைல்ல பேசிக்கிட்டே இரு | .போன வைக்கிறியா ? வேல இருக்கு.ம்ம்ம்ம் |
| உன் கைபட்டா எல்லாமே சூப்பர் | ஒன் கைபட்டாலே அது வெளங்கினா போலத்தான் |
| ஒன் பக்கத்துல ஒக்காந்தாவே சொர்க்கம்தான் | தள்ளி ஒக்காரு மாடு.. |
| நீ சமைச்சா வாசன தூக்குது..எங்கம்மாவுமிருக்காங்களே.. | சாப்பாடா இது ? மனுசன் திம்பானா இத.. எங்கம்மா மாதிரி வரவே வராது . அவ ரசம் வச்சா....... |
| நீ பாத்தாலே பத்திக்குது கண்ணு.. | நீ பாத்தாலே பத்திக்கிட்டு எரியுது |
| நீ சிரிச்சாலே சொக்குது செல்லம்.. | பல்லு தேச்சியா இன்னிக்கு ..?? |
| இன்னும் கொஞ்ச நேரம் பேசேன் பட்டு.. | வாய மூடுறியா கொஞ்ச நேரம்.. நொய் நொய்னுட்டு |
| ஒன் மடில தல வச்சி படுத்துக்கணும்.. | கொஞ்சம் தள்ளி படுக்குறியா..?? |
| தியேட்டருக்கு வந்தாக்கூட உன்னையத்தான் பாத்துக்கிட்டே இருக்கணும் போல இருக்கு.. | படத்த பாக்க விடேன்.. ஏன் இப்டி புளு புளுங்கிற..?? |
| நீ விடிய விடிய பேசினாலும் கேட்டுக்கிட்டே இருப்பேன்.. | கொர்ர்ர்ர்......கொர்ர்ர்ர்ர்ர்ர்ர் |




தருவது கே.வி. குணசேகரம்

"கட்கினியாள், காதலன்
காதல் வகை புனைவாள்
உட்குடையாள், ஊர் நாண்
இயல்பினாள் - உட்கி
இடனறிந்(து) ஊடி இனிதின்
உணரும்
மடமொழி மாதராள் பெண்"

ஒரு காதலி அல்லது மனைவி எப்படி இருத்தல்வேண்டும் என்று பண்டைய நூல்கள் பலவும் கூறியுள்ளன. சைவ சமயநூல்கள் பெண்களைப் பெருமையுடையவர்களாகவே கூறியுள்ளன. 'பெண்ணிற் பெருந்தக்க யாருள' என்று திருக்குறள் கூறுகிறது. ஏனைய நூல்களும் திருக்குறளைப் பின்பற்றிப் பெண்களின் பெருமையை வியந்து கூறியுள்ளன. ஆனால் சமணநூல்களில் பெரும் பாலானவை பெண்களை இழிந்தவர்கள் என்றே கூறியுள்ளன. மேலே உள்ள பாடல் நாலடியாரில் உள்ள பாடலாகும். பெண்கள் இழிந்தவர்கள், அவர்களுடன் தொடர்புவைத்தால் உலகில் உள்ள இன்பங்கள் யாவும் துன்பங்களாக மாறிவிடும் என்று கூறும் நாலடியார், சில பாடல்களில் பெண்கள் பெருமைமிக்கவர்கள் என்றும் கூறுகிறது. கணவனுக்கு அடங்கிவாழுதல், விருந்தினரை வரவேற்றல், சுற்றத்தார் மீது அன்பு கொள்ளல் ஆகிய பண்புகளை உடைய பெண்கள் பெருமையான பெண்கள் என்று நாலடியார் கூறுகிறது. இதற்குக் காரணம் நாலடியார் என்ற நூல் பல புலவர் களால பாடப்பெற்றது. ஒவ்வொரு புலவரும் தனது மனக்கருத்தை வெளிப்படுத்தியிருக்கின்றனர். அதனால் அவையெல்லாம் ஒரே மாதிரியாக இருக்கவில்லை. சில புலவர்கள் பெண்களின் அழகைப் பேரழகு என்றுகூறச் சில புலவர்கள் பெண்களின் அழகு இழிந்த அழகு என்கின்றனர்.

ஒரு பெண் இயற்கையாக எந்நேரமும் அழகுள்ளவாக இருத்தல்வேண்டும். தனது காதலன் மகிழ்வதற்காகத் தன்னை அழகு செய்தல் வேண்டும். கணவன் எந்தவிதமான அழகை விரும்புகிறானோ அதைப் புரிந்து அந்தவிதமாக அழகு செய்தல் வேண்டும். சிலருக்கு தலை முடியைப் பின்னி விடுதல் பிடிக்கும். சிலருக்கு கொண்டைபோடுதல் பிடிக்கும். சிலருக்கு தலையில் மல்லிகைப்பூச் சூடுவது பிடிக்கும். சிலருக்கு ரோசாப்பூச் சூடுவது பிடிக்கும். அதனால் பெண்கள் தமது காதலருக்குப் பிடித்த மாதிரி அலங்காரம் செய்தல்வேண்டும். அந்த அழகு கணவனை மட்டும் கவரவேண்டும், மகிழ்ச்சிப்படுத்துதல் வேண்டும். அதை அந்நிய ஆடவர்கள் ரசிக்கக்கூடாது.

அவர்கள் அழகுடன் அலங்காரமாகச் செல்லும் பெண்களைக் கண்டு அஞ்சுதல் வேண்டும். அவர்கள் அஞ்சும்படி நடந்துகொள்ளல் வேண்டும். அத்துடன் இனத்தவர்கள், அயலவர்கள் அலங்கரிக்கும் பெண்ணைப் பார்த்து மகிழ்ந்து மதிப்பளித்தல் வேண்டும். வியந்து போற்றுதல் வேண்டும். அத்துடன் தனது கணவனுடன் ஊடல் கொள்ளல் வேண்டும். பின் ஊடல் நீங்கி அவன் மகிழும் வண்ணம் கூடி இன்பம் அனுபவிக்கவேண்டும். இனிமை யான சொற்களைப் பேசுதல் வேண்டும். அந்த இனிமையான சொற்கள் கணவனைக் கவர்வ தாக இருத்தல்வேண்டும். இனி மையான பேச்சும் கணவன் விரும்பும் அலங்காரமும், பொய்யான கோபமும்தான் கணவனைக் கவரும், ஆகை யால் இம்மூன்றிலும் பெண்கள் வல்லவர்களாக இருத்தல் வேண்டும். அப்படி இருக்கும் பெண்கள் வித்தில்லாத இனிய கனியை உண்பவர்களாவர். இவற்றை உணர்ந்த பெண்களே நல்ல வாழ்க்கைத் துணையாவாள். என்று நாலடியார் கூறுகிறது. குடும்பப் பிரச்சினைக்கும் சமூகப் பிரச்சினைகளுக்கும் காரணமாவது புரிந்துகொள்ளாமை. ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டால் வாழ்க்கை இனிக்கும் என்கிறார் நாலடியார்.



# வாழ்க்கைத் துணை





# சிந்தியா பதில்

**@ சிந்தியா! கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தரின் திடீர் மனமாற்றம் பற்றி உமது கருத்து என்ன?**

சீ.இராமலிங்கம், திருமலை.

*தமிழ்ச் சமூகத்தின் மூத்த அரசியல் மே(ப)தைகளில் ஒருவராக மதிக்கப் படுகின்ற சம்மந்தர் ஐயாவுக்கு திடீர் ஞானோதயம் வந்துவிட்டது. திடீர் மனமாற்றம் என்றெல்லாம் நீங்கள் வேண்டுமென்றால் நினைக்கலாம். நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன்.*

*உண்மையில் சொல்ல வேண்டு மானால், இவர் ஒரு புலிவேடம் போட்ட நரி. வாக்குவேட்டை செய்வதற்கு தேவை யான தந்திரங்களை உள்ளங்கையில் வைத்திருப்பவர்.*

*இப்போதும் ஞானோதயம் ஒன்றும் வந்துவிடவில்லை. தொடர்ச்சியான அரசியல் இருப்பிற்கு சுயரூபத்தைக் காட்டவேண்டிய வேளை வந்திருக்கிறது அவ்வளவுதான்.*

**@சிந்தியா! முஸ்லிம் காங்கிரஸ் இரண்டை வேடம் போடுவதாக கூட்டமைப் புப் பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் கூறியிருக்கிறாரே?**

எஸ்.கலைச்செல்வன், கண்டி.

*ஏனையவர்களை நோக்கி சுட்டு விரலை நீட்டும்போது ஏனைய நான்கு விரல்களும் எங்களை நோக்கி நீட்டி நிற்கின்றன என்று சிறு உண்மையைக் கூட புரிந்துகொள்ளாமல் சுரேஸ் எம்.பி அறிக்கைவிடுகிறார் என்று நான் நம்ப வில்லை.*

*முதலில் மற்றவர்களின் குப்பை களைக் கிளறுவதற்கு முன்னர் தன்னைச் சுற்றிக் கிடக்கின்ற நாற்றங்கள் தமிழர்களின் தலைவிதியை தலை கீழாக மாற்றுகின்றது என்பதை உணர்ந்து அதைச் சுத்தம் செய்ய முற்பட்டால் தமிழ் மக்கள் நன்றி சொல்வார்கள்.*

**@ சிந்தியா!தமிழ்ச் சங்க வீதிப் பெயர் விவகாரத்தில் மனோ - பிரபா கணேசன்களிடையே முறுகல் ஏற்பட்டுள்ளதே?**

மா.யாதவன், செட்டிக்குளம்.

*வெளிவருகின்ற இருவரது கருத்துக் களும் அவ்வாறான தோற்றத்தை தான் ஏற்படுத்துகிறது. கொள்கை ரீதியிலும் சரி, கொள்கைகளை அடைவதற்கான வழி வகைகளிலும் சரி வேறுபட்ட சிந்தனைகள் இருக்கலாம். அதற்காக ஒரு தாயின் வயிற்றுப் பிள்ளைகள் தனிப்பட்ட விவகாரங்களைத் தூக்கிப் பிடிப்பதும் முட்டுப்படுவதும் பிறர் குளிர் காய்வதற்கு உதவினாலும் அவர்களுக்கும் அவர்கள் சார்ந்தவர்களுக்கும் ஆரோக்கியமானதாக இருக்கப்போவதில்லை.*

**@சிந்தியா! விபச்சாரத்தை சட்ட பூர்வமாக்கவேண்டும் என்று சமூக ஆய்வாளர் ஸர்மிளா சஜித்தின் கருத்துப் பற்றி என்ன நினைக்கின்றீர்?**

எப்.லூயிஷா, கல்முனை.

*கலாசாரப் பண்பாட்டு விழுமியங் களை உயர்வாக நினைத்து இறுக்க மாகப் பின்பற்றுகின்ற ஒரு சமூகப் பின்னணியில் இருந்து வந்தவர் இவ்வாறு கூறுவதை கலாசாரக் கண்ணாடியின் ஊடாகப் பார்ப்பவர் கள் கடுமையாக விமர்சிப்பார்கள்.*

**@சிந்தியா! அன்புக்கும் அம்புக்கும் இடையேயான வேறுபாடு என்ன?**

எம்.ஜேசுதாசன், மன்னார்.

*முன்னது தொட்டு நிற்கும். இரண்டாவது துளைத்து எடுத்து விடும்.*

**@சிந்தியா! இன்றைய அரசியலில் அமைதியான அரசியல்வாதி என்று யாரை நினைக்கின்றீர்?**

திருமதி க.ராணிமலர், தெஹிவளை.

*ராணிமலர் இதுபற்றி நான் என்ன சொல்ல இருக்கிறது?!!*

*அண்மையில் எதிர்க்கட்சித் தலைவரே நாடாளுமன்றத்தில் ஆதாரத்துடன் சொல்லியிருக்கிறார். அவர்தான் கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் டிரோன் டயஸ்.*

**@என்ன சிந்தியா! முன்னாள் அதிரடி வீரர் சனத் ஜெயசூரியவின் சத்தத்தைக் காணவில்லை?**

அ.சாருஜன், கிளிநொச்சி.

*சும்மா போங்கள் சாருஜன்! அவர் என்ன சத்தம்போடும் மூட்டிலா இருக்கிறார்.*

*புதுப்புது விமானங்களில் பற்பல நாடுகளுக்கு ஜாலியாய் பறந்து கொண்டிருக்கிறார்.*

*ஆம். மூன்றாவது மனைவியை மணம்முடித்து ஹனிமூன் சென்றிருக்கும் அவரின் குரலை அவுஸ்திரேலிய இந்தியத் தொடரின் போது கேட்கலாம் என்று நம்புகிறேன்.*

**@சிந்தியா! வசியசக்தி என்கிறார் களே விசயம் இருக்கிறதா? நம்புகிறீர்களா?**

வா.அபர்ணா, கோப்பாய்.

*வசீகரத்தை நம்பலாம். வசீகரம் என்பது மனதில் உள்ள தன்னம்பிக்கையால் ஏற்படுவது.*

*வசியம், மந்திரம், மாயை, செய்வினை, சூனியம் என்பதெல்லாம் தன்னம்பிக்கை குறைவானவர்கள் நாடிச்செல்வது.*

**@சிந்தியா! உரையாடும் போதெல்லாம் இரட்டை அர்த்தத்தில் பேசுபவர்கள் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?**

ம.கவிராஜ், சுன்னாகம்.

*சிலருக்குப் பிடிக்கும். இன்னும் சிலருக்குக் கடிக்கும்.*

*இரண்டை அர்த்தத்தில் ரசிக்கக் கூடியவையும் உண்டு.*

*உதாரணத்திற்கு :- "விளக்குமாறா கேட்கிறாய்" யோசித்துப் பாரும் கவிராஜ் அர்த்தம் புரியும்.*

**@சிந்தியா! இங்கிலாந்து அணி இந்திய மண்ணில் பட்டையைக் கிளப்புகிறதே?**

வ.ரமணி, வவுனியா.

*ஆம். சொந்தமண்ணில் சச்சின் 'விளாசுவார். டோனி மிரட்டுவார். ஷகீர் விக்கெட்டுக்களைக் கிளப்புவார் என்றெல் லாம் நம்பியிருந்த இந்திய வீரர்களுக்கும் ரசிகர்களுக்கும் அலிஷ்ரர் குக் தலைமை யிலான இங்கிலாந்து வீரர்கள் கொடுப்பது அதிர்ச்சி வைத்தியம் அல்ல. அதையும் தாண்டிய பெரும் வைத்தியம்.*

*இந்தியர்கள் இதுவரை தமது அஸ்திரமாக வைத்திருந்த சுழல் பந்து வீச்சை வைத்தே அவர்களை சுருட்டி எடுக்கிறது இங்கிலாந்து.*

*இங்கிலாந்தின் இந்த வியூகத்துக்கு முக்கிய தூண்களாக இருப்பவர்கள் மொண்டி பனசர், சமிட் பட்டேல் ஆகிய இரு இந்தியர்கள் என்பதுதான் சுவாரசியம்.*

**@சிந்தியா! அதிகமான ஆடம்பரத்தை விரும்புவது ஆண்களா? பெண்களா?**

பா.யாதவன், கொழும்பு -06

*பொதுவாகவே ஆடம்பரத்தை விரும்புவது பெண்கள் என்று பலரும் நம்புகிறார்கள்.*

*அதனாலேயே இளைஞர்கள் பலரும் பெண்களைக் கவர்ந்திழுக்க வேண்டும் என்பதற்காக, அளவுக்கு மிஞ்சிய ஆடம்பரத்துக்குள் மூழ்கி மூச்சுத் திணறிக்கொண்டிருப்பதை நம்மைச் சுற்றிக் காணக்கூடியதாக இருக்கிறது.*

# கருத்துக் களம்

புலிசார் அமைப்பில் முக்கிய இடத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்கு எல்லா நாடுகளும் முனைப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்தவகையில் அமெரிக்க வல்லரசின் ஆதிக்கம் மாறுபட்ட ஒன்று. தன் அதிகாரத்தின் பிடியிலே தான் முழு நாடுகளும் செயற்பட வேண்டும் என்ற எண்ணப்பாங்கு உண்டு.

தனது பிடிக்குள் சிக்க வைத்துக் கொண்ட நாடுகள் பல. அதில் இலங்கையும் உள்ளடக்கம். இந்தியா, சீனா போன்ற நாடுகளும் இலங்கையில் தமது ஆதிக்கங்களைச் செலுத்திவருகின்றன. அதற்கு தாம் சளைத்தவர்களல்ல என்பதை அமெரிக்காவும் நிரூபித்துக் கொண்டிருக்கின்றது.

எமது நாட்டில் வன்னியில் நடைபெற்ற இறுதி யுத்தத்தில் தங்களது பங்களிப்பை எல்லா நாடு களுமே செய்து கொண்டிருந்தன. அது நன்மை யாகவோ இருக்கட்டும், தீமையாகவே இருக்கட் டும். இந்த இரண்டுக்குமே இலங்கையில் ஆதிக் கம் செலுத்திய அனைத்து நாடுகளுக்கும் பங் குண்டு என்பதை மறுப்பதற்கில்லை.

அந்தவகையில் இறுதி யுத்தத்தில் ஐ.நா. சபையின் செயற்பாடுகளும் குறிப்பிடத்தக்களவு பங்குண்டு. தனது சுயநலம் சார்ந்து செயற்பட்டதன் விளைவு உயிர்களின் விலைமதிப்பு அவர்களுக்கு தெரியா மல் போய்விட்டது. அல்லது தங்களது நன்மை சார்ந்து செயற்பட்டதன் விளைவா? இப்போது மன்னிப்புக் கேட்பதால் இழந்த உயிர்களை மீட்டுத் தரமுடியுமா? தப்பு செய்துவிட்டு மன்னிப்பு கேட்ப வர்களுக்கு மனிப்பே கிடையாது.

த.பாலபாரதி,
தம்பலகாமம்.

கருத்துக்களம்,
தினமுரசு, வாரமலர்,
373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

# முன்னேற்றமடையும் சூழலை சீர்குலைக்க சில சக்திகள் முயற்சி

## கூட்டமைப்பின் மாநகரசபை எதிர்க்கட்சி தலைவர் காட்டம்

**2009ம் ஆண்டு போர் நிறைவடைந்த பின்னர் முன்னேற்றமடையும் சூழலை சீர்குலைப்பதற்குச் சில சக்திகள் திட்டமிட்டு முயற்சி செய்து வருவதாக, யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த ஐ.நா. பிரதிநிதிகளிடம் யாழ் மாநகர சபையின் எதிர்கட்சித் தலைவரும், கூட்டமைப்பின் முக்கியஸ்தரும், சட்டத்தரணியுமான றெமீடியஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

ஐ.நா.வுக்கான இலங்கை விதிவிடப் பிரதிநிதி பாலித கொஹண தலைமையில் யாழ் குடாநாட்டுக்கு வருகை தந்திருந்த ஜப்பான், பங்களாதேஷ், நைஜீரியா, ருமேனியா உள்ளிட்ட சில நாடுகளில் ஐ.நா.வுக்கான நிரந்தர விதிவிடப் பிரதிநிதிகள் குழுவினரை அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவின் ஏற்பாட்டில், யாழ் சிவில் சமூகப் பிரதிநிதிகள் ரில்கோ விருந்தினர் விடுதியில் சந்தித்து உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், போர் நடைபெற்று வந்த காலப்பகுதியில் யாழ் குடாநாட்டில் ஒரு மனித உரிமை சட்டத்தரணியாகக் கடமையாற்றியவர் என்ற வகையில் குடாநாட்டின் அன்றைய நிலைமைகளை நன்கறிந்துகொண்டிருப்பதாக இங்கு தெரிவித்த றெமீடியஸ், போருக்குப் பின்னர் மனித உரிமை நிலைமைகள் மிகவும் முன்னேற்றமடைந்திருப்பதாகவும் குறிப்பிட்டார்

போர் நிறைவடைந்த பின்னர் இதுவரையில் 10க்கும் குறைந்தளவானவர்களே பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டனர். இவர்களிலும் பெருமளவிலானவர்கள் விடுவிக்கப்பட்டுவிட்டனர். என்று தெரிவித்த அவர், அண்மையில் யாழ் பல்கலைக்கழக மாணவர்களைத் தூண்டிவிட்டு சில சக்திகள் மேற்கொண்ட குழப்ப நடவடிக்கைகள் காரணமாக அநியாயமாக சில மாணவர்கள் கைதுசெய்யப்படும் நிலைமை தோன்றியதாகவும், இது தற்போதைய அமைதி நிலையைச் சீர்குலைப்பதற்கு திட்டமிட்டு சில சக்திகள் மேற்கொள்ளும் சதி நடவடிக்கை என்றும் குற்றஞ்சாட்டினார்.

யாழ் பல்கலைக்கழகச் சூழலில் ஏற்பட்ட குழப்பகரமான சூழ்நிலையை மக்கள் சிறிதும் விரும்பவில்லை. அமைதி சீர்குலைக்கப்படுவது குறித்து அவர்கள் மிகவும் கவலையடைந்துள்ளார்கள். இந்தச் சம்பவத்துக்கு எதிராக ஒரு சில அரசியல் கட்சிகள் இணைந்து யாழ் நகரில் நடத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் பொதுமக்கள் எவரும் கலந்துகொள்ளாதது இதனைத் தெளிவாக எடுத்துக் காட்டியது என்றும் தெரிவித்தார்.

### விளக்கமறியலில் இந்திய வியாபாரிகள்

மட்டக்களப்பு, பழுகாமம் பிரதேசத்தில் அனுமதியின்றி புடைவை வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த இரண்டு இந்திய வியாபாரிகளை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர். சுற்றுலா வீசாவில் தமிழ் நாட்டின் விருது நகரிலிருந்து வருகை தந்த தங்கத்தம்பி வீரலக்சுமி, மருதுபாண்டி ராஜகோபால் ஆகிய இருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். களுவாஞ்சிக்குடி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.


ஸ்ரீ ராமஜெயம்



## நிரூபித்துக் கொண்டிருக்கும் மலையாள மாந்திரீகம்



சித்தக் கோளாறு, தோல் வியாதி, ரோக பயம், ஸ்திரி சாபம், செய்வினை தோஷங்கள், திருமணத்தடை, மாங்கல்ய தோஷம் உடையவர்கள், புத்திரதோஷம் உடையவர்கள், வீண் நஷ்டம் - கஷ்டம் வாழ்வா சாவா என்று சிந்திப்பவர்களுக்கு நஞ்சருந்தாமல் பிரச்சினைதீர, முறிந்த காதல் ஒன்றுசேர, கணவன் - மனைவி பிணக்குத் தீர, காதல் கைகூட, சர்வ கஷ்ட நஷ்ட துன்பங்களை விலக்கி சுகமாக வாழ, ஓடிப்போனவர்கள் தேடிவர, பெற்றோர் விருப்பம் இல்லாத திருமணம் விரும்பி நடக்க, நெஞ்சுவலி, நெஞ்சு எரிவு, மார்புவலி, உடல் பீடை நீக்கி ஐஸ்வரியம் கிட்ட, திருமணத்தடை தரித்திரியம், கல்வி சித்தம் கிடைக்க, காதலர்கள் நினைத்ததை சாதிக்க, ராகு திசை, ராகு புத்தி, கேது திசை கேது புத்தியால் ஏற்படும் சகல தோஷங்களை நீக்கி சர்பாதி தோஷம், பூர்வ ஜென்ம சாபங்களை நீக்கி, துர்சொப்பணம், செய்வினை தோஷம் நீக்கி, குலதெய்வ அருள்கிட்ட, மேலதிகாரிகளின் தொல்லை நீங்க, வெளிநாட்டு பிரயாணத் தடை நீங்க, ஆண் - பெண் உடலுறவு வீரிய குறைவுகள் தீர, சனிபுத்தி சனித்திசை தோஷம் நீங்க, ஆயுள் ஆரோக்கியம் பெற்று தனவஸ்து கிட்ட இவைகளில் இருந்து சித்தி கிட்ட, என்னைச் சந்திக்கலாம். வெளிநாட்டவருக்கு 24 மணித்தியால சேவையுண்டு.

அருள்ஞான சித்தர், துர்க்கைதாசன், தேசபந்து, பேராசிரியர், கலாநிதி,
திரு.P.K.சாமி, (J.D.G.A.N) J.P ஐயா SRI DURGADEVI MANTHIRIKA UTCHADA PEEDAM. No.23, MAYFILD ROAD, KOTAHENA, COLOMBO -13.
நுவரெலியா கிளை :- No.33, daily Fair Complex. 052 - 2222508
தொலைபேசி இலக்கம்: - 011 - 2470615, 011 - 2342463, 011 - 2342454
FAX :- 011 - 2344831 E -MAIL:- drpksamy@sltnet.lk


# பாதிக்கப்பட்டுள்ள பிரதேசத்தை கட்டியெழுப்ப ஒன்றுபட வேண்டும்

## பிரதியமைச்சர் முரளிதரன்



போரினாலும் இயற்கை அனர்த்தங்களினாலும் பாதிக்கப்பட்டுள்ள படுவான்கரை பிரதேசத்தை நாங்கள் கட்டியெழுப்பவேண்டுமென்றால் அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் ஒன்றுபட்டு செயற்பட அனைவரும் முன்வரவேண்டும் என அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயத்துக்கான ஆய்வு கூடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், இந்நிகழ்வுக்கு பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரனையும் அழைத்திருந்தேன். அவர் வேறு ஒரு அவசர வேலை காரணமாக வரமுடியாத நிலையென தெரிவித்தார். இந்த நாட்டில் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவின் சிந்தனையின் கீழ் 5000 கனிஷ்ட பாடசாலைகளும் 1000 இடைநிலை பாடசாலைகளும் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. அனைத்து மாவட்டங்களிலும் வருடாவருடம் இந்த திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

இந்த திட்டத்துக்கான பாடசாலைகளை தெரிவு செய்வதில்கூட அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்தே அதனை தெரிவு செய்தோம். மட்டக்களப்பு மாவட்டத்தில் கிட்டத்தட்ட 22 பாடசாலைகள் ஆயிரம் பாடசாலை திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

படுவான்கரை பிரதேசத்தை பொறுத்தவரையில் யுத்தத்தினால் கடுமையாக பாதிக்கப்பட்டு, இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு ஊர்வேறுபாடு அற்று மக்கள் வேறுபாடு அற்று அனைத்து கிராம மக்களும் துன்பப்பட்டவர்கள். கொடிய யுத்தம் காரணமாக எவ்வளவோ உயிர்களை நாங்கள் இந்த படுவான்கரையில் இழந்துள்ளோம். இதனை கட்டியெழுப்பவேண்டிய பொறுப்பு அனைவருக்கும் இருக்கின்றது. இதற்கு அரசியல் வேறுபாடுகளை பார்க்கமுடியாது.

இதனை நான் கடந்த மாகாண சபையில் இருந்தவர்களுக்கு எடுத்துக்கூறினேன். கல்வி அபிவிருத்தியென்னும் விடயங்களில் பழிவாங்கக்கூடாது என கூறியிருந்தேன். எமது மாணவர்களை வளர்க்கும்போதே எமது மாவட்டம் வளரும். அதனை மையமாகக் கொண்டுதான் இந்த பாடசாலைகள் இணைக்கப்பட்டு தற்போது ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்டத்தில் எமது கல்வியை வளர்ப்பதற்கான அனைத்துவளங்களும் உள்ளன. கடந்த காலத்தில் எமது மாவட்டத்தில் இருந்த சிறந்த அரசியல்வாதிகளினால் அதற்கான கட்டமைப்புக்கள் சிறந்தமுறையில் உருவாக்கப்பட்டுள்ளன, என்றும் தெரிவித்தார்.

[07 ஆம் பக்கத் தொடர்ச்சி...]

## வன்னியில்...

இந்தச் சமூகவிரோதிகள் யார்? இவர்கள் இச் செயற்பாடுகள்மூலம் பெற்றுக் கொள்ளும் நன்மை என்ன? இவர்கள் தனி நபர் குழுக்களா? அன்றி இவர்களை இயக்குவதற்கென்றே இவர்களின் பின்னால் 'ஏதாவது ஒரு 'பலமான கரம்' ஓங்கியிருந்து செயற்படுகிறதா? இவர்களுக்கான ஆயுதங்கள் எப்படிக் கிடைக்கின்றன? இவர்கள் பயன்படுத்தும் வாகனங்கள் யாருடைய பெயரின் உரிமத்தில் உள்ளன..? என்ற பலமான கேள்விகள் ஒருபுறம் இருக்க, வாழ்வில் வலுவிழந்து நிற்கும் எங்களிடம் எந்த வாழ்வாதார வசதிகள் இருப்பதாக, இவர்கள் எம்மை வந்து இப்பிடித் துன்புறுத்துகிறார்கள்...? என பாதிக்கப்படும் மக்கள் எழுப்புகின்ற கேள்வி நியாயமானதாகவேபடுகின்றது.

ஏனெனில், இம்மக்கள் மன்னாரிலிருந்தும் மணலாற்றில் இருந்தும் தமது உடைமைகளோடு முள்ளிவாய்க்கால்வரை ஒவ்வொரு இடமாக இருந்து நகரும்போது, தொலைந்துபோன மற்றும் கைவிட்டுச் சென்ற தோட்டங்கள் தவிர, அப்போது எஞ்சியிருந்தவை இரண்டேயிரண்டு! ஒன்று உயிர், மற்றையது விரக்தி.

இந்நிலையில், அவர்கள் தங்கவைக்கப்பட்டிருந்த நலன்புரி நிலையங்களில், அரச, அரச சார் பற்ற நிறுவனங்களினால் வழங்கப்பட்ட பொருட்களோடு, சுமார் மூன்று வருடங்களின் பின்பு தமது சொந்த இருப்பிடங்களில் குடியேறிய நிலையில், அவர்களிடம் இருப்பதையும் சூறையாடும் நிலை தற்போது ஆரம்பித்துள்ளது.

ஊடகங்கள் வெளியிட்ட செய்திகளின் பிரகாரம் முள்ளியவளை மாமூலையில் நடைபெற்ற அந்த சமூக விரோத செயற்பாட்டை உற்று நோக்கும்போது, மனவலுவற்ற தம் சுயநலம் சார்ந்தவர்களின் செயற்பாடாகவே தோன்றுகிறது. அங்கத்தவர்கள் எண்ணிக்கை குறைந்த, ஆள்நட மாற்றம் அற்ற இடங்களைத் தெரிவுசெய்வதன் ஊடாக இச்சமூகவிரோதிகள், தாங்கள் அடையமுனையும் இலக்கு வெற்றியளிக்கும் என்றே நம்புகிறார்கள். ஆயினும், ஊர்ப் பொதுமக்களின் ஒன்றுகூடலும் அவலஒலியும், விரோதிகளை புறமுதுகோட வைத்துள்ளது. ஊர்ப் பொதுமகன் ஒருவர் இவ்விரோதிகளால் மிகவும் தாக்கப்பட்டுள்ளார். இது தாம் அடையவந்த இலக்கு தோற்றுப் போய்விட்ட சினத்தின் வெளிப்பாடு என்றே கொள்ளமுடியும்.

வன்னியில் இச்சம்பவம் போன்று இனிவரும் காலங்களில் நடைபெறாது... என்று சொல்வதற்கு சட்டமும் ஒழுங்கும் தன் கடமையைச் சரிவரச் செய்ய வேண்டும். எதுவும் மேலோட்டமான பார்வைகளோடு நகர்வதாக இருப்பின் சமூகவிரோதிகளும், கலாசார சீரழிவுகளும் வன்னியில் மென்மேலும் தலைதூக்கும் என்பது திண்ணம்.

சமூகவிரோதிகளுக்கான களங்கள் வன்னியில் அதிகரிக்கப்படுமாயின் பாதிக்கப்பட்ட மக்களின் மன உணர்வுகள், அரசு மீதுவைத்துள்ள நம்பிக்கை, நல் அபிமானம் யாவற்றையும் சிதறடிக்கச் செய்துவிடும். தங்கள் வாழ்வாதாரத் தேவைகளுக்காக தங்கள் உழைப்பின் பிரையாசத்தோடு, அரசின் உதவிகளையும் நாடி நிற்கும் இவ்வேளையில், சில சமூக விரோதிகளின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தி, அவைகளை இல்லாதொழித்து மக்களின் இயல்பு வாழ்வை மேம்படையச் செய்வது அரசினது பாரிய பொறுப்பாகும்.

[17 ஆம் பக்கத் தொடர்ச்சி...]

## இலங்கையின்...

அதனை நிறைவேற்றுவதில் அச்சபை தவறியிருக்கிறது. அதற்கான அடுத்த முயற்சியைச் செய்து தரவேண்டிய பொறுப்பு தற்போதைய இரண்டாவது கிழக்கு மாகாண சபையிடம் கையளிக்கப்பட்டிருக்கிறது. இதனை யாரும் மறுக்க முடியாது.

இலங்கைத் தீவில் அமைந்துள்ள இந்து சமுத்திரத்தின் திறவுகோல் என்றழைக்கப்படும் திருகோணமலையானது, என்றென்றைக்கும் வரலாற்று சிறப்புள்ள கேந்திர மையமாகும். இந்தக் கேந்திரத்துக்கான போட்டியில் மாட்டித் தவித்துக் கொண்டிருக்கும் சம்பூர் மக்களின் பிரச்சினைக்கும் தீர்வுகாணாது சமாதானத்தினை எட்டிவிட முடியுமா என்பதே தற்போதைய கேள்வியாகும்.

இந்த இடத்தில் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ மஜீத் ஜனாதிபதி தமிழ் தேசியக் கூட்டமைப்பினரை சமாதானத்திற்கான வேலைப்பாடுகளை மேற்கொள்வதற்காக அழைத்துக் கொண்டிருக்கிறார். இந்த சமாதான முயற்சியில் சமாதானத்துடனான தீர்வுக்கு கிழக்கு மாகாண சபை உதவும் என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

அவரது கருத்தில் தொக்கி நிற்கும் விடயமே இந்தப் பிரச்சினைதான். சமாதானத்தை எவ்வாறு ஏற்படுத்துவது என்பதுதான். ஏற்றுக் கொள்ளுதலும் விட்டுக்கொடுத்தலும் எந்த ஒரு பிரச்சினையிலும் தீர்வுக்கு முக்கியமானதாகும். ஆனால், இலங்கையின் தமிழர் பிரச்சினையில், விட்டுக்கொடுப்பதற்கு யாரும் தயாராக இல்லை என்பதே இவ்வளவு நீண்ட சிக்கலுக்குக் காரணமாக அமைந்தது.

கிழக்கு மாகாணத்தில் இரண்டு இனங்கள் பெருமளவில் வாழ்கின்றன. தமிழர்களின் பூர்வீக நிலப்பரப்பு என்பதை இந்தியா 13ஆவது திருத்தச்சட்டம் மூலமாக இணைத்துக் கொடுத்தது. அதனை நிரந்தரமாக இணைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டாமை காரணமாக சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி பிரிப்பு மேற்கொள்ளப்பட்டு தற்போது தனியாக மாகாண சபையும் அமைத்தாயிற்று.

ஆனால் ஏற்படுத்தப்பட்ட பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு இதுவரை இதய சுத்தியுடனான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. அதற்கான காலம் கனிய வேண்டுமாக இருந்தால் இலங்கையின் தமிழ் மக்கள் மனங்கள் கனியவேண்டும். அதன் முதல்படியாக சம்பூர் மக்களின் அவர்களின் மனங்குளிரும் வகையில் மீள்குடியேற்றம் அமையும்போது மாத்திரமே சாத்தியம். சம்பூர் மக்களின் மனக்குளிர்வில் ஆரம்பிக்கும் சமாதான முயற்சி படிப்படியான முன்னேற்றத்தினை அடைய வேண்டும் என்பதே எதிர்பார்ப்பாகும்.

இதன் பொருள் சமாதானம் உயர் தரப்பினரிடமிருந்து ஆரம்பிக்காது சாதாரண மக்களிடமிருந்து ஆரம்பிக்க வேண்டும் என்பதே ஆகும்.

# காதிலை பூ




## கந்தசாமி

அண்டைக்கு வாத்தி சொல்லேக்க உது விசர்க் கதையெண்டு நினைச்சனுங்கோ. இண்டைக்கு உந்தத்தேரர் சொல்லும் கதையைக் கேக்கேக்கதானுங்கோ எங்களுடைய எதிர் காலமும் பாரதூரமான பிரச்சினைகளை எதிர்கொள்ள போகுதெண்டது புரியுதுங்கோ.

பொருள் விலையேற்றம், பாதுகாப்பற்ற வாழ்க்கை, சுதந்திரமற்ற சூழல் இவற்றுக்கு மத்தியில் நாங்கள் வாழ்வதே பெரும்பாடாக இருக்குதே. உதில பிள்ளைகளைப் பெத்துக் கொண்டு எப்படி வளர்த்தெடுக்கிறது. யார் மூன்று வேளையும் சாப்பாடு கொடுக்கிறது என்றெல்லாம் யோசிக்கிற நிலைமைதானுங்கோ தற்போது இருக்குது.

எண்டாலும் இன உணர்வும், தமிழ் மொழி மீதான பற்றும் இருக்குமாக இருந்தால் எல்லா சவால்களையும் சமாளித்துக் கொண்டு சமூகக் கடமையை ஒவ்வொருவரும் முன்வரத்தான் வேணுமெண்டதைத்தானுங்கோ தேரரின்ர கருத்து சொல்லுது.

தேரர் சொன்னால் சிங்கள மக்களுக்குப் புரியும் அவையும் கேட்டுக் கொள்ளுவினமுங்கோ. நம்முடைய சனம் எல்லாத்திலையும் பிழை பிடிச்சுக் கொண்டும் தொட்டதுக்கெல்லாம் வியாக்கியானம் பேசிக் கொண்டு இருப்பினமுங்கோ.

இனமும், மொழியும் பாதுகாக்கப்பட வேணுமெண்டால் தேரர் சொன்னதை தமிழ் மக்களும் யோசித்துப்பார்க்கிறது தப்பில்லையுங்கோ.

யார் சொல்லினம் எண்டு நோண்டாதீங்கோ. என்ன சொல்லினம் எண்டதை மட்டும் பாருங்கோ. பிறகு இதைத் தூக்கிக் கொண்டு கந்தசாமி தமிழ்ச் சனத்தை அதிகமாக பிள்ளைகள் பெத்துக் கொள்ளச் சொல்லுது எண்டும், கந்தசாமி தமிழர் கலாசாரத்தை சிதைக்கப்பாக்குது எண்டு விசர் கதைகள் கதைச்சுக் கொண்டு திரியாதீங்கோ புரியுதோ.

வணக்கமுங்கோ! அடுத்த வருஷத்தில இருந்து அமுலுக்கு வரும்வகையில சிங்கள மக்கள் ஐந்து பிள்ளைகளுக்குக் குறையாமல் பிள்ளை பெற்றுக் கொள்ளவேண்டும் என்று பிரான்ஸ் நாட்டுக்கான சங்க நாயக்கர் பரவாஹர சந்தரத்தின தேரர் சொல்லியிருக்கும் செய்தியை படிச்சதில இருந்து தலைக்குள்ள இராட்டினம் சுத்துமாப்போல இருக்குதுங்கோ.

அவர் சொல்லுறார், சிங்கள மக்கள் பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ளும் விகிதம் குறையுமானால் இனம் பாரதூரமான பிரச்சினைகளை எதிர்கொள்ளவேண்டியிருக்குமாமுங்கோ. அதுமட்டுமில்லையுங்கோ, துறவறம் பூணவும் ஆள் இல்லாமல் போகுமாமுங்கோ. பிறகு பங்களாதேஷ், நேபாளம் போன்ற நாடுகளில் பௌத்த சமயத்துக்கு சிதைவு ஏற்படும் என்றும் கூறியிருக்கிறாருங்கோ.

உந்தக் கொள்கையை இலங்கையில் வாழும் தமிழ் மக்களும் கடைப் பிடிக்கலாமுங்கோ. ஏனெண்டு தெரியுமோ. யுத்தத்தாலை இலட்சக்கணக்கான சனம் செத்தும்போச்சுதுகள், பல லட்சம் சனம் நாட்டைவிட்டே போயிட்டுதுகள். உப்பிடியே போனால் விரைவிலேயே இலங்கையில தமிழர்கள் இனம் வலிமை இழந்து அடையாளம் இல்லாமல் போயிடுமெண்டு வாத்தியார் முன்னம் ஒருக்கால் சொன்னது ஞாபகம் வருகுதுங்கோ.

**யாவும் கலப்படமற்ற பொய்**

---

# அச்சுக் கலையின் தந்தை






கொஞ்சம் கொஞ்சமாக அவருக்கு உண்மைக் காரணம் விளங்கலாயிற்று. "கோளாறு மசியில் தான். அச்சாவதற்கு ஏற்ற மையைக் கண்டுபிடித்தாகவேண்டும்" என்று அவர் வாய் முணுமுணுத்தது.

அதன் பிறகு பல மாதங்கள் இதையும் அதையும், எதை எதையெல்லாமோ கொண்டு முயற்சி செய்தார். எதுவும் சரிப்பட்டு வரவில்லை. ஒரு நாள் ஒரு விருந்தில் ஒரு ஓவியரைச் சந்தித்தார் ஜோன். இத்தாலியிலுள்ள வெனிஸ் நகரிலிருந்து வந்திருந்தார் அந்தச் சித்திரக்காரர். அவர் பேச்சுவாக்கில் இத்தாலியிலும் ஹொலந்திலும் ஓவியங்கள் இப்போதெல்லாம், எண்ணெய் வண்ண ஓவியம் தீட்ட, வண்ணங்களை லின் சீட் எண்ணெய் கொண்டு பக்குவப்படுத்திக் கொள்ளுவதாகக்கூறினார். அந்த எண்ணெய், வண்ணங்களுக்கு மென்மையைத் தருவதோடு, பரவலாக இழைந்துக் கொடுக்க உதவுவதாகவும் கூறினார்.

கட்டன் பார்க்குக்கு மின்னல்போல ஒரு எண்ணம். தன் காது மடலைச் சொறிந்து கொண்டார். லின் சீட் ஒயில்! இதையே அவர் உள்ளம் மனனம் செய்யலாயிற்று. நான் தயாரிக்கும் மசிக்கு இதைப் பயன்படுத்திப் பார்த்தால் என்ன? பல வாரங்கள் உழைத்தார். கடைசியாக விளக்குக் கரியோடு லின் சீட் எண்ணெயைக் குழைத்து அச்சு மை உருவாக்கினார். மிருதுவாக இருந்தது. ரொம்பக் கெட்டியாக இல்லாமலும் நீர்க்க இல்லாமலும் நடுத்தரமாகத் தயாரித்துக் கொண்டார். இதை எழுத்துக்கள் மீது தடவி இயந்திரத்தினுள் வைத்து அழுத்தி எழுத்தார்.

அப்பாடா! வெற்றி வெற்றி என்று குதிபோட்டது கட்டன்பார்க்கின் உள்ளம். இருபது வருஷத்து உழைப்பும் கனவும் நனவாகியது. ஒரு பக்கம் - அற்புதமாக அச்சாகி அவரது கையில் தகதகத்துக் கொண்டிருந்தது. எத்தனை சுத்தமாக, துல்லியமாக, சிரமமின்றிப் படிக்கமுடிகிறது.

கட்டன் பார்க்கின் அச்சுமுறை இன்றைக்கு மிக மிகப் புராதனமானதாகத் தோன்றலாம். இரும்பு துண்டின் முனையில் எழுத்தின் வடிவத்தை அவர் தம் கையினால் செதுக்கினார். தாமிரத் துண்டில் அதை வைத்து கையினால் அடித்து அச்சுத் தயாரித்தார். இந்த அச்சிலிருந்து ஒவ்வொரு எழுத்தையும் உலோகத்தை உருக்கி வார்த்து கையினால் தயாரித்தார்.

(தொடரும்...)

---

# இந்தவாரம் உங்கள் பலன்

(13.12.2012 தொடக்கம் 19.12.2012 வரை)

### மேடம்

மாணவர்கள் கல்வியில் நல்ல மதிப் பெண்களையும், பாராட்டுதல்களை பெறுவார்கள். விபரீத எண்ணங்களை நினைத்து மன நிம்மதி இழக்காதிருங்கள். குழந்தைகளால் பொருட்செலவுகள் வந்த போதிலும் அவர்களால் நன்மதிப்பைப் பெறுவீர்கள். சொத்து சம்பந்தமான விசயங்களில் இருந்து வந்துள்ள பிரச்சினைகள் பெரிய மனிதர்களின் தலையீடுதலால் சாதகமான நல்ல முடிவுகள் கிடைக்கும். வீடு மற்றும் வாகனங்களைப் பழுது பார்ப்பதால் பொருட்செலவுகள் ஏற்படும். கணவன் – மனைவி உறவுகளில் சிற்சில பிரச்சினைகள் வந்துபோகும். உடம்பில் வயிறு முதுகு போன்ற உபாதைகள் வந்துபோகும். பொதுவாக இது ஒரு நற்பலன்களைத் தரும் வாரமாகும்.

### இடபம்

சகோதர சகோதரிகளின் சுபகாரிய நிகழ்ச்சிகளுக்கான முயற்சிகளில் வெற்றிபெற்று அவர்களுக்காகப் புதிய கடன்களை வாங்குவீர்கள். உடல்நிலையில் மூலம் மற்றும் நீர் சம்பந்தம் ஆகிய உபாதைகள் வந்துபோகும். நீண்டகாலமாக எதிர்பார்த்திருந்த வெளிநாடு செல்லுதல் போன்ற முயற்சிகளில் நல்ல செய்திகள் வந்துசேரக் கூடிய காலமாகும். வடக்குத் திசையில் இருந்து பெண்களால் எதிர்பாராத ஆதாயங்கள் வந்துசேரும். பிரிந்துபோன கணவன் – மனைவி உறவுகள் மீண்டும் தொடருவதற்கான முயற்சிகளில் நல்ல தகவல்கள் வந்துசேரும். உத்தியோகத் துறையினர்களுக்கு நினைத்த இடங்களுக்குப் பணி. இடமாற்றம் ஏற்படும். புதிய கடன்கள் வாங்குவதைத் தவிர்ப்பது நல்லது.

### மிதுனம்

திருட்டுப்போன பொருட்கள் திரும்பி வீடு வந்துசேரும். விவசாயம் செய்வோர்களுக்கு விவசாயம் நன்றாகப் பலிதமாகும். விளையாட்டு துறை சார்ந்தவர்கள் நல்ல மதிப்பெண்களையும் பரிசும் பாராட்டுதல்களை பெறுவார்கள். மனைவி மற்றும் மனைவி வழிச் சொந்தபந்தங்கள் மூலம் சில ஆதாயங்களை அடைவீர்கள். புதிய வீடு,தொழிற்சாலைகளை இடமாற்றம் செய்யப் போட்ட திட்டங்கள் நிறைவேறும். உத்தியோகத் துறையினர்களுக்கு மேலதிகாரிகளால் கண்டிப்பும், இடமாற்றமும் ஏற்படலாம். வெளிநாடு சென்றுவருதல் போன்ற முயற்சிகளுக்காகப் பணம் பொருள் ஏமாற்றம் அடையாமல் இருக்கவும்.

### கடகம்

உடம்பில் கண் மற்றும் காதுகளில் கவனம் தேவை. தீராத நாட்பட்ட நோய்கள் தீருவதற்காகப் புதிய மருத்துவர்களின் உதவிகளை நாடுவது நல்லதாகும். பொருளாதார நெருக்கடிகள் மாறிப் பணப்புழக்கம் மிக நன்றாக இருக்கும். புதிய நண்பர்களின் சேர்க்கை மூலம் காரணமற்ற பிரச்சினைகள் வந்துசேரக் கூடிய காலம் என்பதால் மிகுந்த எச்சரிக்கையுடன் இருத்தல் நல்லதாகும். குல தெய்வ வழிபாடு செய்து வருவதற்கான முயற்சிகளில் சில தடைகள் வரக்கூடும். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் கவனமாகப் பழகி வருதல் நல்லது. நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்ள முயற்சிப்பீர்கள். உண்டாகும்.

### சிங்கம்

செய்யாத குற்றங்களுக்காக வீண் பழிச்சொல் வந்துபோக வாய்ப்பு உள்ளது. சமுதாய முன்னேற்றத்திற்கான பொதுநலக் காரியங்களில் ஈடுபட்டு நற்பெயர் மற்றும் புகழ் அடைவதன் மூலம் மனநிறைவடைவீர்கள். நெருப்பு மின்சாரங்களில் கவனமுடன் இருத்தல் நல்லதாகும். பிள்ளைகளால் சில பொருட்செலவுகளும், வீண் பிரச்சினைகளும் வந்து போகும். குலதெய்வ வழிபாடு செய்து வர எண்ணிய எண்ணங்கள் நிறைவேறும். சகோதரர்களால் திடீர் தனவரவுகள் உண்டாகும். சமுதாய நல்லிணக்கத்திற்காக உழைப்பதில் மனம் மகிழ்ச்சி அடைவீர்கள். வங்கிகள்மூலம் எதிர்பார்த்திருந்த கடன் தொகைகள் வந்து சேரச் சற்று கால தாமதம் ஆகலாம்.

### கன்னி

புதிய சொத்துக்களை வாங்குவதற்காகப் புதிய கடன் வாங்குவீர்கள். புதுப்பித்துக் கட்டுவதற்காகப் போட்ட திட்டங்களில் வெற்றி அடைய வாய்ப்பு உள்ளது. விபரீதமான எண்ணங்களையும், தேவையற்ற புதிய நண்பர்களின் சேர்க்கையையும் தவிர்த்தல் நல்லது. சிலருக்கு வீடு மாற்றம் ஏற்படக்கூடிய காலமாகும். உடம்பில் வாயு மற்றும் வயிறு போன்ற தொல்லைகள் வந்து போகும். தாயின் உடல்நிலையில் இருந்து நோய்கள் குறையக் கூடிய காலமாகும். புதிய தொழில்களை ஆரம்பம் செய்யப்போட்ட திட்டங்களில் இருந்து வந்த பிரச்சினைகள் தீர்ந்து புதிய தொழில்களை ஆரம்பம் செய்வீர்கள்.

### துலாம்

பொருளாதாரத்தில் இதுநாள் வரையில் இருந்து வந்துள்ள நெருக்கடிகள் மாறி நல்ல சூழ்நிலை உருவாகும். நண்பர்கள் மற்றும் உற்றார் உறவினர்களின் வரவால் பொருட் செலவுகள் உண்டாகுவதோடு மனநிம்மதி குறைவதோடு வீண் பொருட்செலவுகளும் வந்துசேரும். பிள்ளைகளால் மனமகிழ்ச்சியும் பொருள்வரத்தும் உண்டாகும். பூர்வீகச் சொத்து விசயங்களில் இருந்து வந்துள்ள நாட்பட்ட பிரச்சினைகள் நீங்கிச் சொத்துக்கள் கிடைக்கும். தீர்த்த யாத்திரைகளை மேற்கொள்ள எடுத்துக் கொண்ட முயற்சிகளில் வெற்றி அடையலாம். பொதுப் பணிகளைச் செய்வோர்கள் கவனமுடன் பணி ஆற்றுவதால் வீண் பழிச் சொல்லுக்கு ஆளாகாமல் இருக்கலாம்.

### விருச்சிகம்

ஆலயப் பணிகளில் பங்கு கொண்டு மனநிம்மதி அடைவீர்கள். மஹான்களின் தரிசனத்திற்காக நீண்ட தூரப் பயணங்களை மேற் கொள்வீர்கள். பெண்களால் தொலை தூரத்தில் இருந்து நற்செய்திகளும் பொருள் வரத்தும் உண்டாகும். பழைய கடன்கள் மீண்டும் தொல்லை கொடுக்கும். குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவர வாய்ப்பு உள்ளது. புதிய நண்பர்களின் சேர்க்கையைத் தவிர்க்கவும். காதல் விசயங்களில் அனுகூலமான சில செய்திகள் வந்துசேரும். கண், காதுகளில் கவனம் தேவை. புதிய வீடு மற்றும் நிலபுலன்களை வாங்குவதன் மூலமாய் புதிய கடன்களை வாங்குவீர்கள். தேவையற்ற விசயங்களில் தலையிட வேண்டாம்.

### தனுசு

மற்றவர்களுக்காக உழைப்பதில் மனம் மகிழ்ச்சி அடைவீர்கள். தேவையான பொருளாதாரம் கைவந்து சேரக் கூடிய காலமாகும். வெளிநாடு சென்றுவருதல் போன்ற விசயத்தில் சற்றுக் கவனமாக நடந்துகொள்ளவும். வீடு நிலம் போன்றவற்றின் மூலமான புதிய கடன் வாங்குவதற்கான முயற்சிகளில் வெற்றி அடையலாம். காதல் விசயங்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் தீர்ந்து உறவுகள் வலுப்பெறும். கூட்டுத்தொழில்களைச் செய்வதற்கான முயற்சிகளில் நல்ல தகவல்கள் கிடைக்கும். வெகுகாலமாகப் பூர்வீகச் சொத்துக்களில் இருந்து வந்த பிரச்சினைகள் பெரிய மனிதர்களின் தலையிடுதலால் தீர்ந்து மனநிம்மதி ஏற்படும்.

### மகரம்

நீண்ட காலமாக வராத கடன் கொடுத்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் காவல் துறையினர்களின் உதவியால் திரும்ப கை வந்துசேரும் காலமாகும். காதல் சம்பந்தமான நல்ல செய்தி வந்துசேரும். வெளிநாடு சென்று வருதல் போன்ற புதிய முயற்சிகளில் மற்றவர்களை நம்பிப் பணம் மற்றும் பொருட்களைக் கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். விருந்தினர்களின் வரவால் மனமகிழ்ச்சி அடைவீர்கள். கணவன் – மனைவி மகிழ்ச்சியாக இருப்பார்கள். குடும்பச்சொத்துக்கள் சம்பந்தமாகிய விசயத்தில் சச்சரவுகள் வந்துபோகும். அரசு வழக்கு போன்ற வியங்களில் எதிர்பார்த்திருந்த சாதகமான முடிவுகள் வந்துசேரும்.

### கும்பம்

ஒரு சிலருக்கு நாட்பட்ட விசா சம்பந்தமான பிரச்சினைகக்கு நல்ல முடிவுகள் கிடைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளது. உடல்நிலையில் இருந்துவந்த தொல்லைகள் மாறிப் பொருட்செலவுகள் குறைய வாய்ப்புகள் உள்ளது. நாட்பட்ட வராத கடன் கொடுத்துள்ள பணம் திரும்பக் கிடைக்கும். சகோதரர்களால் மனநிம்மதி குறைந்தாலும் அவர்களால் சிற்சில ஆதாயங்களை அடைவீர்கள். நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்வதன்மூலம் சில காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். புதிய தொழில்கள் ஆரம்பம் செய்யலாம். மாணவர்களுக்கு கல்வித்துறையில் பரிசு மற்றும் பாராட்டுக்களை பெற வாய்ப்புகள் உள்ளன.

### மீனம்

நீண்டகாலமாக புதிய வீடு, நிலம் வாங்கப் போட்டிருந்த திட்டங்கள் நிறைவேற வாய்ப்பு உள்ளது. மற்றவர்களுக்காக ஜாமீன் போட்டு வீண் பிரச்சினைகளை விலைக்கு வாங்க வேண்டாம். செய்தொழிலில் மிகுந்த கவனமுடன் செயற்படுவது நல்லது. உற்றார் உறவினர் வருகையால் பணச்செலவுகள் உண்டாகும். அரசு சம்பந்தமான வழக்கு விசயங்களில் சாதகமான தீர்ப்புகளை எதிர்பார்க்கலாம். கண்களில் கவனமுடன் இருக்கவும். புதிய நண்பர்களின் சேர்க்கையால் மனமகிழ்ச்சி உண்டாகும். திருமணம் ஆகாதவர்களுக்கு உறவினர்களின் உதவியால் திருமணம் நடக்கும்.






இந்தோனோஷிய வாசியான அப்துல்லா சோலே என்ற 31 வயதுடைய நபர் புலி ஒன்றினை உயிர் நண்பனாக்கிக் கொண்டுள்ளார்.

நான்கு வருடங்களாக இடைவிடாது தொடர்ந்துவரும் இவர்களின் நட்புக்கள் அனைவரையும் வியப்பில் ஆழ்த்துவதுடன் உணவு நேரத்தின்போதும், விளையாடும் போதும் ஒன்றாக இருக்கும் இவர்கள் இடையிடையே சண்டைபோட்டும் கொள்வார்களாம்.

# நண்பர்கள்

---

பிரித்தானியாவின் லிவர்பூல் மாகாணத்தைச் சேர்ந்த கிராஹம் ஹுக்கிஸ் (வயது 33) என்ற இந்த நபர் கடந்த 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதியன்று தனது சுற்றுப்பயணத்தை தொடக்கினார்.

இதில், எந்த சூழ்நிலையிலும் வேறு நாட்டிற்கு செல்ல ஹுக்கிஸ் விமானத்தை பயன்படுத்தவே இல்லை. கடந்த 2009ஆம் ஆண்டு

# உயர்வான உள்ளம்!

புத்தாண்டு அன்று (ஜனவரி 1ஆம் திகதி) தனது பயணத்தை தொடங்கி மொத்தம் 1,426 நாட்களில் 1லட்சத்து 60 ஆயிரம் மைல்கள் (2 லட்சத்து 46 ஆயிரம் கிலோ மீற்றர்கள்) பயணித்துள்ளர்.

இவற்றில் சில நாடுகளுக்கு கடலில் படகு மூலமாகவும், பக்கத்து நாடுகளுக்கு ரயில், பேரூந்து, டொக்ஸி போன்ற வாகனங்கள் வாயிலாகவும் மொத்தம் 201 நாடுகளுக்கு சென்றார்.

இறுதியில் ஆப்ரிக்க நாடான தெற்கு சூடானை நேற்று சென்றடைந்தார். தற்போது அந்நாட்டின் தலைநகரம் ஜூபாவில் தங்கியுள்ளார். வரும் ஜனவரி மாதம் புத்தாண்டு அன்று தாய்நாடு திரும்பியுள்ளார்.

மேலும் தனது செலவிற்காக வாரத்திற்கு 100 டொலர் செலவிட்டுள்ளார்.

இதுதவிர பயணத்தின்போது ஆபிரிக்க நாடான கொங்கோ நாட்டிற்கு சென்றபோது அந்நாட்டு பாதுகாப்புப் படையினர் சந்தேகத்தின் பேரில் கைது செய்து சிறையில் ஒரு வாரம் வைத்ததாகவும், பின்னர் ரஷ்யாவிற்குள் நுழைந்தபோது தன்னை உளவாளி என நினைத்து பொலிஸார் கைது செய்ததாகவும் தனது பயண அனுபவங்களை தெரிவித்துள்ளார்.

தாம் மேற்கொண்ட இந்த மெகா பயணத்தை ஆவணப்படமாகத் தயாரித்துள்ள இவர், இவற்றை வெளியிட்டு அதன் வாயிலாக அறக்கட்டளை ஒன்றிற்கு நிதி திரட்டவுள்ளார்.



---

தாய்லாந்தில் குரங்குகளுக்கான திருவிழா ஒன்று ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருவதுண்டு. இதில் கலந்துகொள்ளும் குரங்குகளுக்காக பலவகையான பழவகைகளை உணவாக வழங்கி மகிழ்வார்களாம். இம்முறை இடம்பெற்ற இவ்வினோத திருவிழாவிற்காக சுமார் 4,000 கிலோ கிராம்கள் எடை கொண்ட பழவகைகளை கொள்வனவு செய்துள்ளார்களாம்.







# இவங்களைப் பாத்தீங்களா?



# பரிசீலணை

சந்திரன் மற்றும் செவ்வாய் கிரகத்தில் மனிதன் வாழமுடியுமா? என்று அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் தீவிர மாக ஆய்வுகள் நடத்திவருகின்றன.

இதற்கிடையில் விண்வெளிக்கு செல்லும் வீரர்களுக்கு அங்கேயே உணவுக்கு புத்தம் புதிய காய்கறிகள் கிடைக்கும் வகையில் தோட்டம் அமைக்க முடியுமா? என்ற முயற்சியில் சீனா வின் விண்வெளி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம் தீவிரமாக ஈடுபட்டது. இதற்காக பெரிய பரிசோதனை கூண்டு அமைத்து ஆய்வு நடத்தினார்கள். இந்த பரிசோதனையில் வெற்றி பெற்றிருப்பதாக ஆராய்ச்சி நிலையத்தின் துணை இயக்குனர் டெங் யிபிங் தெரிவித்துள்ளார். "டைன மிங் பேலன்ஸ்டு மெக்கானிஷம்" என்பதை பயன்படுத்தி ஆகாயவெளியில் ஒட்சிசன், காபனீரொக்சைட் மற்றும் தண்ணீரை உருவாக்க முடியும் என்று கூறியுள்ளார்.

தென் அமெரிக்க நாடான கொலம்பியாவின் மெட லின் நகரை சேர்ந்த மிகியல் ரெஸ்டிரபோ மரியா கார்சியா என்ற தம்பதிகள் சொந்த வீடு இல்லாமல் கடந்த 22 ஆண்டுகளாக பாதாள சாக்கடையில் வசிக்கின்றனர். இவர்கள் வசித்து வந்த பாதாள சாக்கடை மெடலின் புறநகர் பகுதியில் ஆள்நடமாட்டமின்றி காணப்படும் இடமாகும். தனது வீட்டுவாசலில் கிறிஸ்துமஸ் மரம் கட்டிக் கொண்டிருந்த மிகியல் தனது அண்டர்கிரவுண்டு பங்களா பற்றி கூறுகையில், ஆரம்பத்தில் கூலி வேலைக்கு சென்றுவந்த நான் துரதிர்ஷ்டவசமாக போதைப் பழக்கத்துக்கு அடிமையானதால் வேலையை இழந்தேன். சாப்பாடு இன்றியும், தங்க இடமின்றியும் தவித்த எங்களுக்கு மெட லின் நகரின் ஒரு ஓரத்தில் எங்களுக்கு அடைக்கலம் கொடுத்தது இந்த பாதாள சாக்கடை. இந்த இடத்துக்கு பாதாள சாக்கடை தேவையில்லை என்பதால் அதிகாரிகள் இதை அடைத்து விட்டுபோனது எங்களுக்கு வசதியாகிவிட்டது.

# சாக்கடைக்குள் வாழ்வு!





அண்மையில் ஹொங்கொங் நாட்டில் சர்வதேச ஆசிய ஆணழகன் போட்டி வெகுவிமர்சையாக நடைபெற்றது. இதில் பல்வேறு ஆசிய நாடுகளை சேர்ந்த கட்டுடல் ஆண் அழகர்கள் கலந்து கொண்டார்கள். ஹொங்கொங் நாட்டின் ஏ.ரீ.வி நிறுவனத்தினரால் நடத்தப்பட்ட இந்த நிகழ்வில் கலந்துகொண்ட ஆண் அழகர்களின் புகைப்படங்கள் உங்கள் பார்வைக்காக......



# ஆணழகே என்றும் பேரழகே!